# திருப்புகழ் மெய்ப்பொருள் தெளிவுரை - 1

புலவர் கோவேந்தன்,
டி.லிட்.,



# திருப்புகழ்
## மெய்ப்பொருள் தெளிவுரை

(முதல் பாகம்)

பதிப்பாசிரியர்
*புலவர். த. கோவேந்தன், டி. லிட்*

**சங்கர் பதிப்பகம்**
*21,* ஆசிரியர் சங்கக் குடியிருப்பு *(*டீச்சர்ஸ் கில்ட் காலனி*)*
இராஜாஜி நகர் விரிவு,
வில்லிவாக்கம், சென்னை - *600 049.*

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திருப்புகழ் மெய்பொருள் தெளிவுரை - I |
| பதிப்பாசிரியர் | : | புலவர். த. கோவேந்தன், டி. லிட் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | சமயம் |
| உரிமை | : | ஆசிரியர்க்கே |
| முதல் பதிப்பு | : | திசம்பர் 2000 |
| இரண்டாம் பதிப்பு | : | அக்டோபர் 2001 |
| நூலின் அளவு | : | 1 x 8 கிரவுன் |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 208 |
| தாள் | : | வெள்ளைத் தாள் 10.5 |
| பைண்டிங் | : | சாதா அட்டைக் கட்டு |
| விலை | : | ரூ. 50/- |
| வெளியீடு | : | சங்கர் பதிப்பகம்<br>21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு<br>இராஜாஜி நகர் விரிவு<br>வில்லிவாக்கம், சென்னை - 49 |
| ஒளியச்சு | : | போனிக்ஸ் கம்ப்யூட்டர்ஸ்<br>சென்னை - 600 087. |
| அச்சிட்டோர் | : | கிரேஸ் பிரிண்டர்ஸ்<br>சென்னை - 600 017. |

# பதிப்புரை

அருணகிரிநாதர் பட்டினத்தடிகளுக்கு சுமார் 500 ஆண்டுகட்கு முன்பு திருவண்ணாமலையில் பிறந்தார். இளமையில் தாயினை இழந்து தமக்கையால் வளர்க்கப் பெற்றார். இளமையில் செல்வங்களை இழந்து தமக்கையின் கர்ண கடூர வார்த்தைகளால் வெறுப்படைந்தார்.

திருவண்ணாமலை வள்ளாள திருக்கோபுரத்திலிருந்து கீழே குதித்து உயிர் நீக்க விரும்பிக் குதித்தார். குமரக் கடவுள் துறவி வடிவில் வந்து காப்பாற்றினார். 'அருணகிரிநாதர்' என அழைத்து, நோய் நீக்கி, ஜபமாலை அளித்த பின் மயில் வாகனனாகவும் காட்சி தந்தார். அருணகிரிநாதர் நாவில் தம் வேல் கொண்டு சடாக்ஷரம் பொறித்தார். "எம் மீது பாடுக" எனப் பணித்து "முத்தைத் தரு பத்தித் திருநகை" என அடி எடுத்துக் கொடுத்து திருப்புகழ் பாடக் கட்டளை இட்டார்.

அதன்பின் அருணகிரிநாதரும் குமரக் கடவுள் ஆலயம் தோறும் சென்று பாடினார். இவரது பாடல்கள் 'திருப்புகழ்' எனப் போற்றப்படுகின்றது.

அருணகிரிநாதர் கூடுவிட்டுக் கூடுபாயும் முறையில் கிளி வடிவு எடுத்தார். அப்போது பாடியது கந்தரனுபூதியாகும்.

திருப்புகழ் பல சந்தங்களாக முருகப் பெருமான் மீது பாடப்பெற்ற தோத்திரப் பாடல்கள் ஆகும். முருகப் பெருமானின் திருவருள் பெற்று உய்வதற்குரிய ஏற்புடைய சிறந்த நூல்களுள் தலையாயது இந்நூல்.

1005 பாடல்கள் பல்வேறு திருத்தலங்கள் மீது பாடப் பெற்றன. 314 பாடல்கள் பொதுப் பாடல்கள் ஆகும். ஒரு பாடல்

க்ஷேத்திரக் கோவையாகவும், விநாயகர் துதியாக 5 பாடல்களும் ஆக மொத்தம் 1325 பாடல்களே நமக்குக் கிடைத்துள்ளன.

தேவாரப் பாடல் பெற்ற தலங்களை நாம் கண்டு வணங்க வழிகாட்டும் நூல்கள் பல உள்ளன. இதுபோல் முருகப் பெருமானை அருணகிரியார் பாடிய முக்கியத் தலங்களைக் காண 100 திருப்புகழ் பாடல்களைத் தொகுத்து இந் நூலில் வழங்கியுள்ளோம்.

மேலும் அப்பாடல்களுக்கு மெய்ப் பொருள் தெளிவுரையும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நூல் இரு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலுக்கு அழகிய மெய்ப்பொருள் தெளிவுரை எழுதித் தந்த புலவர் த. கோவேந்தன் அவர்கட்கு எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருவாவடுதுறை ஆதீன வெளியீடான 'முருகன்' நூலில் உள்ள பல படங்களைப் பயன்படுத்தியுள்ளோம். அவர்களுக்கு எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமுருக அன்பர்கள் இந் நூல்களை வாங்கிப் பயன்பெறும்படி வேண்டுகிறோம்.

- பதிப்பகத்தார்



ஓம்

திருமுருகன் துணை

# சிறப்புப் பாயிரம்

## நூற் சிறப்பு

தந்திமுக னைக்குருவைத் தம்பிரானைத் தொழுவோம்,
சிந்தைதனில் அஞ்செழுத்தைச் செப்புவோம்,
கந்தனின்
பேரைக்கொண் டாடிப்ர தாபிப்போம், பின்னை
நமக்கு
ஆரைக் கொண்டு என்கா ரியம்.

வேதம்வேண் டாம்சகல வித்தைவேண் டாம்கீத
நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம், ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் தாள்போற்று
திருப்புகழைக் கேளீர் தினம்.

### நூற் பயன்

ஞானம் பெறலாம், நலம் பெறலாம், எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம், மோனவீ
ஏறலாம் யானைக்கு இளையான் திருப்புகழைக்,
கூறினார்க்கு ஆமேஇக் கூறு.

ஆறுமுகம் தோன்றும், அழகியவேல் தோன்றும்அவன்
ஏறுமயில் தோன்றும் எழில் தோன்றும் சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

பொருப்பது பொடிப்பட விடுத்திடு கைவேலா
இருப்பிடம் உனக்கெது எனக்குஅருள் இயம்பாய்
உருக்கநல் விழுக்கலம் ஒழுக்கம்இல ரேனும்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினில் இருப்போம்.

திருப்புகழ் படிக்கும்அவர் சிந்தைவலு வாலே
ஒருத்தரை மதிப்பதில்லை உன்றன் அருளாலே
பொருப்பாரை மிகப்பொருது வென்றுமயில் மீதே
தரித்துஒரு திருத்தணியில் நின்றபெரு மாளே,

ஓராறு மாமுகனும் உச்சிதமெய்ஞ் ஞானகுகன்
பேரால் அருணகிரி பேருலகில் - சீராரும்
தோத்திரம தாகத் துதிக்குந் திருப்புகழை
ஏத்தின் அவர் ஈடேறுவார்.

அருணகிரி நாதர் பதினாறு ஆயிரமென்று
உரைசெய் திருப்புகழை ஓதீர் - பரகதிக்கஃது
ஏணி அருட்கடலுக்கு ஏற்ற மனத்தளர்ச்சிக்கு
காணிப் பிறவிக் கரம்.

திருப்புகழைக் கற்கத், திருப்புகழைக் கேட்கத்,
திருப்புகழை நித்தஞ் செபிக்கத், திருப்புகழை
அர்ச்சிக்க முத்திஎளிதாகுமே கூற்றைவென்று
கர்ச்சிக்கல் ஆமே கெடீ.

* * *

# திருப்புகழ்

## மெய்ப்பொருள் தெளிவுரை

### சிறப்புப் பாயிரம்

எல்லாரும் ஞானத் தெளிஞரே கேளீர், சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ - பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கான மயில்வீரன்
திருப்புகழைக் கேட்கும் செவி.

உண்மை அறிவின் தெளிவை உடையவர்களே! இங்குக் கூறப்படுவதை நீங்கள் எல்லாரும் கேளுங்கள்! சொல்லப்பெறும் கற்கள் எல்லாம் கல் என்னும் பெயரினது அளவில் ஒத்திருந்தாலும் மாணிக்கக் கல்லுக்குச் சமானமாகுமோ? ஆகாது. அதுபோலக் காட்டில் வாழும் மயிலை வாகனமாக உடைய, வீரத்தன்மையைக் கொண்டுள்ள குமரக் கடவுளது அழகிய சிறப்பை, அதாவது முருகப்பெருமானின் இசையைக் கூறும் வண்ணப் பாட்டாகிய திருப்புகழ் என்னும் இச் சீரிய நூலை கேட்கின்ற காதுகள், பிறப்பினுக்குக் காரணமாக இருக்கும் கொடிய, கொடுந் துன்பங்களுக்கு ஏதுவாகிய இழிந்த பிறப்புடைய மனிதர் புகழைக் கேட்கச் செய்யுமோ? கேட்கமாட்டாது.

# விருத்தியுரை

ஞானத்து - ஞானம் + அத்து எனப் பிரியம்; அத்து; சாரியை சாரியையின் அகரம்,

"அத்தி னகரம் அகரமுனை இல்லை" என்ற தொல்காப்பியர் நூற்பாப்படி கெட்டது. தெளிஞர்: இதில் ஞகரம் பெயர் இடைநிலை. 'எல்லாம்' என்பது முழுமை உணர்த்த வந்த உரிச்சொல். பொல்லாத என்பது பொல்லா என ஈறு கெட்டு நின்றது. கேளீர்: முன்னிலைப் பன்மை ஏவல்; ஈர் - விகுதி, சொல் கல் - "சொல்லளவில் ஒத்து ஒளி உயர்வளவில் ஒவ்வாதிருக்கும் பல்லாயிரம் வகைப்பட்டு நிற்கும் கற்கள் எல்லாம்" எனப் பொருள் வந்து நின்றது.

"வெற்றிரும்பும் பொன்னும் தமனியப்போர் மேவியபோல்" என்ற சான்றோர் வாக்கும் கவனிக்கற்பாற்று.

'மாணிக்கம்' என்றது ஈண்டு நவமணிகளிற் சிறந்து விளங்கும் செம்மணியை 'பொல்லாக் கருப்புகழ்' பிறப்பு இறப்புக்குக் காரணமாகிய காமமாதிகளை உண்டாக்கி வைத்தலின் 'பொல்லா' என்றும், கொலையாகிய கொடுமைகளைச் செய்து பெற்ற புகழ் ஆதலின் 'கருப்புகழ்' என்றுங் கூறிய நயம் கருதற்பாலது. மாநிலத்துப் பிறந்திருந்த மக்கள் குறித்து நிற்கும் புகழ் எல்லாம் கேட்பாரை அவாவுக்கு உள்ளாக்கிப் பிறப்புத் தருந் தன்மையவாயும், எமது முருகப்பிரான் திருப்புகழ் அவாவைப் போக்கிப் பிறப்பறுத்து முத்திப் பதந் தருந் தன்மையவாயும் இருத்தல் பற்றி முறையே 'பொல்லாக் கருப்புகழ்' திருப்புகழ், என்ற சிறப்பு உற்று நோக்கத் தக்கது.

வீரன்: ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆண்ட சூரனைக் கொன்றதனால் என்பர். இன்னும் முருகன்

ஞான வீரனும் ஆம் வேதனைக் குட்டிச் சிறையிட்டதோடு போதமூர்த்தியாகிய இறைவர்க்கும் குருவாய் நின்றமை பற்றி ஞான வீரன் என்பர்.

கடல் சுவறவும். மலை பிளக்கவும் வல்ல சத்திவேலைத் தாங்கி அசுரரை ஒழித்த அமரரைக் காத்தருளியவர் ஆதலின் 'வீரன்' என்றார்.

ஞானம் என்றது ஈண்டுப் பதி.ஞானத்தை. கேட்குஞ் செவி என்றதனால் செப்பும் நாவு, கருதும் உள்ளம் என்பனவுங் கொள்ளக் கிடக்கின்றது.

"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குறித்தே" என்பது கட்டளை.

இச் செய்யுளில் திருப்புகழைக் கேட்குஞ் செவி ஏனைப் பொல்லாக் கருப்புகழைக் கேட்கா என்றமையால், ஞான மிலார்க்கும் எமது முருகன் பெருமையைக் கூறும் திருப்புகழ் ஞானத்தை உண்டாக்கி, புத்தி - பத்தி - சித்தி - முத்திகளை எய்துவிக்கும் என்பதும், சாரமற்ற மற்றவற்றிலும், சாவும் பிறப்பும் சாரச் செய்யும் தீய நூலிலும் சிந்தை செல்லாது என்பதும் பெறப்படும். இது அருணகிரியார் காலத்திற்குப் பிற்பட்ட ஒரு பெரியார் கூற்று.

*திருப்புகழ் படிக்கும்அவர் சிந்தை வலுவாலே*
*ஒருத்தரை மதிப்பதிலை உன்றன் அருளாலே*
*பொருப்பரை மிகப்பொருது வென்றும்மயில் மீதே*
*தரித்துஒரு திருத்தணிகை நின்றபெரு மாளே.*

வள்ளியம்மையாரைத் தன்னோடு கொண்டு போம்பொருட்டு மலைநாட்டில் வாழும் வேடருடன் போர் செய்து, அவர்களை வெற்றி கொண்டு, மயிலாகிய ஊர்தியின்

மேலே, அமர்ந்து பொருந்தி, ஒப்பற்ற திருத்தணிகை என்னும் திருப்பதியின்கண், நிலைபெற்ற முருகப் பெருமானே! திருப்புகழ் என்னும் நூலினைப் படிக்கும் அன்புடன் படிக்கின்ற அவர்கள், உன் அருளன்பால் தங்கட்கு உண்டாகும் மனபலத்தினால், ஒருவரையும் மதிக்க மாட்டார்கள்.

படிப்போர் எனற்பாலது 'படிக்குமவர்' என்று சுட்டொடு மருவியது வலியுறுத்தற்கு என்க. ஒருத்தர்; ஒன்று + அத்து + அர் எனப் பிரியும். ஒன்று என்பது 'ஒரு' என ஆயிற்று ஒன்று" என்பது.

*"ஈறே முல்லவற்றின்*
*ஈற்றுயிர் மெய்யும் ஏழ னுயிரும்*
*ஏகும் ஏற்புழி என்மனார் புலவர்"*

என்ற விதிப்படி 'ஒன்' என நின்று.

*"முதலி ரெண்ணி னொற்று ரகரம் ஆகும்*
*உகரம் வருதல் ஆவயினான."*

என்ற தொல்காப்பியர் நூற்பாபடி 'ஒரு' என நின்றது; இடை நின்ற அத்துச்சாரியையின் அகரங் கெட்டது; அர்; பலர்பால் விகுதி; 'அர்' என்னும் பலர்பால் விகுதி உயர்வு பற்றி வந்தது, போலும் - 'பிற காரணங்களால் உயர்வு பற்றிய ஒருத்தரை' என்க. 'பிற கரணங்களாவன - கல்வி, செல்வம், வீரம், இளமை, அழகு, திடம், வன்மை, ஈகை முதலியன. 'மதிப்பதிலை' என்றது 'பொருட்படுத்துவது இல்லை' என்பதாம்.

கல்வி முதலியவற்றாற் சிறந்த எவரையும் மதியாததற்குக் காரணம், உனதருளும், நின் திருப்புகழ் படித்து மனத்து அறிவு பெருகிய திடத்தாலும் என்க.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்னும் திருநாவுக்கரசர் திருவாக்குக் கருதத் தக்கது.

'பொருப்பரை மிகப்பொருது வென்று' என்றது முருகவேள் வள்ளியம்மையாரைக் களவாகக் கவர்ந்து செல்லுங்கால் எதிர்த்த வேடர் தம்மை வென்றதையாம்.

திருத்தணிகை - இது தொண்டை நாட்டிலுள்ள திருமுருகன் மலைக்கோயில்.

*அவனரு ளெற்றார் அனைவரும் அற்றார்*
*அவனரு ளுற்றார் அனைத்தும் பெற்றார்.*

ஆதலின், முருகப்பிரான் பெருமைகூறும் திருப்புகழ் படிப்பார்க்கு அப் பெருமானின் திருவருள் முறுகி வளரும். அவ் அருளால் எவரையும் மதியார். வேண்டுவது எல்லாம் பெற்று இன்புற்று வாழ்ந்து களித்திருப்பர்.

இதுவும் திருப்புகழைப் பற்றி இந்நூற் காலத்திற்குப் பின் ஒரு பெரியார் கூறிய கூற்றாகும்.

ஆசிரியச் சந்த விருத்தம்

*ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே*
*ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே*
*கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே*
*குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே*
*மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே*
*வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே*
*ஆறுமுகம் ஆனபொருள் நீ அருளல் ஒன்றே*
*ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமானே*

பழம் பதியாகிய, திருவண்ணாமலையின்கண், எழுந்தருளி நின்ற, முருகக் கடவுளே! ஆண் மயிலின் மீது, ஏறிக்கொண்டு, குன்றுகள்தோறும் விளையாடுகின்ற, திருமுகம் ஒன்றும்,

சிவபெருமானுடன் ஞானமொழி ஓம் என்ற பிரணவ மொழியைத் திருவாய் மலர்ந்தருளும் திருமுகம், ஒன்றும்; தன் கீர்த்தியை எடுத்துச் சொல்லும் அடியார்களுடைய தீய வினைகளை நீக்கி அருளுகின்ற திருமுகம் ஒன்றும், கிரௌஞ்சமலை பிளவுபடும்படி ஊடுருவிச் செல்லும்படி வேல்படையைச் செலுத்தி, யாவருங் கண்டு களிக்க நிலைபெற்று நின்ற திருமுகம் ஒன்றும்; தன்னைப் பகை கொண்ட, சூரபதுமன் முதலிய சூரர்களை, கொன்ற திருமுகம் ஒன்றும், வள்ளிக் குறத்தியை திருமணஞ் செய்து கொள்ளும்படி ஏற்பட்டு வந்தருளிய திருமுகம் ஒன்றும் ஆக ஆறு திருமுகங்களைக் கொண்டுடையவராக, மெய்ப்பொருளாகிய தெய்வமே அடியேனுக்குத் திருவருள் செய்தருள வேண்டும்.



ஏறுமயில் - ஆண் மயில்; இதனை

*"ஏறும் ஏற்றையும் ஒருத்தலுங் களிறும்*

..............................................................................

*யாத்த ஆண்பாற் பெயரென மொழிப"*

என்னும் தொல்காப்பியம் - மரபியல் 558 - ஆம் நூற்பாவால் அறிக. சேயோன் தோகைமயில் வாகனர். ஆண் மயிற்கே தோகை உண்டு ஆதலின் ஏறுமயில் என்றார்.

'விளையாடல்' இங்கு ஐந்தொழிலாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவற்றை, விளையாட் டென்றமையால் முருகன் இவ்வைந்தொழிலையும் களைப்பின்றி செய்தலைக் குறிப்பித்தார்.

*"அலகிலா விளையாட் டுடையார்"*

என்ற கம்பர் வாக்கு ஈண்டுக் கருதற்பாலது. ஈசன் என்றது 'எல்லா ஐசுவரியத்தையும் உடையவனாகி நின்று அடியார்க்கு வேண்டிய வேண்டியாங்குத் தந்தருள் செய்யும் தலைவன் என்பது பொருள்; இதனை வடமொழிச் சொல் என்பர்.

'ஞான் மொழி' என்றது ஓம் (பிரணவப்) பொருளை, முருகப் பெருமான் தன்னை இளையன் என்று எண்ணிய பிரமன் செருக்கை அடக்கப் பிரணவப் பொருளைக் கேட்டபோது, வாய் திறக்கும் வன்மை இன்றி வாளாவிருந்த வேதனைக் குட்டிச் சிறையிலிட்டார். நான்முகனுக்காகப் பரிந்து வந்த தந்தையாகிய சிவபெருமான், பிரணவப் பொருள் கேட்க, இறைவர்க்குக் குருவாக இருந்து அவர் நின்று செவி சாய்த்துக் கேட்க ஓகி யருளிய திறம் விளங்க, 'ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம்' என்றார்.

*"உழுன்மதில் சுட்ட தழனகைப் பெருமான்*
*வணங்கிநின் றேத்தக் குருமொழி வைத்தோய்"*

என்ற கல்லாட அடிகளாலும் இதனை அறியலாம்.



முருகக் கடவுள்; அகத்தியர், நக்கீரர், ஔவை, பொய்யாமொழி முதலியவர் துதி கூற அவர்க்கருளிய பரங்கருணைத் தடங்கடலாதலின், கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் என்றார். 'குன்றுருவ' என்றதில் குறித்தது கிரௌஞ்ச மலையை. இது அகத்தியர் சாபத்தால் முருகப்பிரான் வேலாற்பிளவுண்டது, இது.

*"குருகு பெயரிய குன்றம் பிளக்கப்*
*பெருவேள் விட்ட பேரான் சீயம்"*

என்ற பெரியார் வாக்கு இதனுடன் ஒப்பிடததக்கது.

மாறுபடு சூரர் - 'தேவர்க்குப் பகையாய் இருந்த சூரர்' என்பது பொருள். முருகன் தேவர்களுக்குச் சேனாபதியாகிச் சென்றாராதலின் இவர்க்கும் மாறுபடு சூரரே ஆயினர். அறத்துக்கு மாறுபட்டு மறத்தைத் தழுவி நின்றதனாலும், 'மாறுபடு சூரர்' என்றார். தேவர்களுக்குச் சேனாதிபதி யானமையை,

*"கோமேவிக் காக்குஞ் சரவணத்தான்"*

என்ற வெண்பாவின் அடி பண்பாக உணர்த்தும்.

"வள்ளியை மணம் புணர வந்த முகம்" என்றது காதல் நிலையை. வள்ளியை மணந்த போக நிலையில் நின்றது உலுகுய்தற் பொருட்டாதலின் இது கூறினார். இப்பெருமானுக்குக் காதல் நிலையும் உண்டு என்பது.

*"பரமனே பரமயோகி"*

எனப் புகழப்படுஞ். சிவபெருமானுக்குமே ஞான குருவாகிப் பரதேசிகன், சாமிநாதன், குருநாதன், ஐயாச்சாமி, அப்பாசாமி என்பனவாகித் திருப்பெயர்கள் பூண்டிருப்பதே நன்கு விளங்கும்.

இறைவன் காதலனாய் இருந்து உலகிற்குக் காதலின்பத்தையும், யோகியாய் இருந்து யோக முத்தியையும் அருளுவன் என மறைகள் முழங்கும். இதனை,

*"யோகியா யிருந்து யிர்க்குப் போகத்தை அளித்த லோரார்*
*யோகியாய் யோக முத்தி யுதவுத லதுவு மோரார்"*

என்ற **சிவஞான சித்தியார்** வாக்கானும் அறியலாம்.

இவ் வள்ளி அம்மையார் எம் முருகக் கடவுளுக்கு இச்சாசத்தி ஆவர். தேவயானையார் கிரியாசக்தி, சக்திவேல் ஞானசக்தி என்பர். இறைவரும் அவர் திருக்குமாரராகிய முருகக் கடவுளும் அபேதம். சிவபரஞ் சுடரே தனது ஈசானம், தற்புருஷம், வாமனம், அகோரம், சத்தியோசாரம் என்னும் ஐந்து

திருமுகங்களோடு, அதோ முகமாகிய ஆறு திருமுகமுந்தோன்ற, 'ஆறு முகமாக' அவதரித்து அருளியவன் ஆதலால் 'ஆறுமுக மான பொருள் நீ' என்றார். 'பொருள்' என்றது செம்பொருளை; இதனையே 'மெய்ப்பொருள், உண்மைப் பொருள், பதிப்பொருள்' எனப் பலபடக் கூறுவர் பெரியார். இவ் ஆறுமுகப் பெருமான் திருமுகச் சிறப்பையும் பன்னிரண்டு திருக்கைகளின் வளப்பத்தையும் நக்கீரர் தமது திருமுருகாற்றுப் படையில்,

*"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்க*

---

*பன்னிரு கையும் பாற்பட இயற்றி"*

என்ற அழகிய அடிகளால் கண்டறியலாம்.

★★★



# விநாயகர் துதி

1. தத்தன தனதன தத்தன தனதன
   தத்தன தனதன தனதான.

கைத்தலம் நிறைகனி அப்பமொடு அவல்பொரி
  கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி உறைபவ
  கற்பகம் என் வினை கடிதேகும்
மத்தும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
  மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
  மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
  முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
  அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயர் அதுகொடு சுப்பிர மணிபடும்
  அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
  அக்கண மணமருள் பெருமாளே.

திருக்கையிலே நிறைந்துள்ள பழங்களையும், அவலையும், பொரியையும், அப்பத்துடன் உண்கிற, யானை முகத்தையுடைய விநாயகப் பெருமானின் திருவடிகளைத் துதித்து, தனது உண்மையைத் தேர்ந்து தெளிய அறிந்து கொண்ட தொண்டர்களின், மனத்தில் வீற்றிருந்தருள் செய்பவரே! தன்னைத் சார்ந்தார்க்குக் கற்பக மரம் போல அருள்பவரே! என்று துதிக்க, கருமங்கள் வரைவில் நீங்கும்; மூன்றாகிய தமிழின் நூலை, மலைகளுக்கெல்லாம் முதன்மையாகிய மேருமலையின் மேல்,

முன்னாளில் தன் கொம்பால் எழுதிய, முதன்மையான கடவுளே! திரிபுரங்களை. எரித்து அருளிய, அந்தப் பெருமையையுடைய சிவபெருமான் எழுந்தருளி இருக்கும் தேரினுடைய அச்சை, முரிந்து துகளாகும்படி செய்த, மிகவுந் துணிவுடையவரே! வள்ளியம்மையாரை மணந்தருள வந்தபோழ்து எவ்வாறு வலிந்து வந்து அவளே அணையச் செய்வது என்னும் அம் மனத் துன்பத்துடன் சுப்பிரமணியப் பெருமான் சென்றிருந்த, வள்ளியம்மையார் இருந்த அந்தத் தினைப்புனத்தின்கண், பெரிய யானையாகி, அந்தக் குறக்கன்னியாகிய வள்ளி அம்மையோடு, அந்தத் தன் தம்பியாகிய முருகவேளை, அந்த நேரத்திலேயே, மணந்து கொள்ளுமாறு திரு அருளைச் செய்த பெருமானே! எனத் துதி செய்து உன்மத்த மலரையும் பிறை நிலாவினையும், சடைமகுடத்தில் சூடிக் கொள்ளுகின்ற சிவபெருமான் திருக்குமாரராகிய, மற்போர் செய்கின்ற, திரண்ட தோள்களையுடைய மதங்கள் ஒழுகும் யானை முகத்தை உடையவனை, மத்தளம் போன்றுள்ள திருவயிற்றை உடையவனை, உமா தேவியாரின் திருப்புதல்வனை, தேன் விரியும் பூக்களைக்கொண்டு வணங்குவேன்.

'கைத்தலம்' என்பது 'கையாகிய இடம்' என விரிந்து இரு பெயரொட்டுப் பண்புத்தொகை ஆயிற்று. நிறைகனி - இது 'கை நிரம்பிய பல்வகைக் கனி' எனவும், 'கை நிரம்பும் அளவினதாய பருத்த கனிகள்' எனவும் பொருள் தந்தது. கப்புதல் - வாய் நிரம்ப வைத்துக் குதட்டி உண்ணுதல், கரத்தோடுங் கூடியது கரி; ஏனைய மிருகங்களுக்கு இல்லாததாகிய தும்பிக்கை யானைக் குண்மையின் 'கரி' எனப் பேர் போர்ந்தது. இன்னும் 'கைம்மா, கைம்மலை' என யானைக்குப் பேரமைந்துள்ளவாறுங் கருதற்பாலது. 'கருத்த நிறத்தை உடையது. ஆதலின் கரி எனப் பெயராயிற்று' எனின் அது பொருந்தாது.

அடிபேணி; இஃது ஒருமைப்பன்மை மயக்கம்; 'திருவடிகளைத் துதித்து' என்றாயிற்று இனி 'திருவடியைத் துதித்து' எனவும் ஒருமையாற் பொருளுரைப்பர். நடக்க, நடிக்க வலத்தாளை ஊன்றி இடத்தாளை எடுக்கப்பெறுதலின் இடத்தாள் அருள்புரி தாள் என்பர். இதுபற்றி

*"எடுத்த தாளின் அருள் வயங்க*
*இருமுனிவர் பணிந்து போற்ற"*

என்றார் பெரியாரும். திருவடி ஒன்றையே குறிப்பின் அருள்புரி தாளாகிய இத்தாளை என்க. இனி இருதாளையுங் குறிப்பின் திரோபவ அனுக்கிரகஞ் செய்யும் வலத்தாளையும், திருவருள் அனுக்கிரகஞ் செய்யும் இடத்தாளையும் எனக் கொள்க; 'கிரியை, ஞானம்' எனும் இரண்டும் இறைவனுக்கு இரு தாள்களாம். ஆதலின் கிரியாசக்தி, ஞானசக்திகளை வணங்கி என்பாரும் உண்டு. இங்கும் ஒருமையாற் கூறின் ஞான சத்தியை அல்லது ஞான பாதத்தை வணங்கி என்க.

'கற்றிடும் அடியவர்' என்றது பதிநூல் கற்று ஞானம் பெற்றுள்ள அடியவர்களை.

*"கற்றவர் உள்ளத்து இறைவன் விருப்பொடு இருப்பன்"* என்பது வேதம்.

*'கற்றவர் விழுங்குக் கற்பகக் கனி* என்றும்

*'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்'* என்றும் பெரியார் கூறினவை ஈண்டு ஒப்பிடத்தக்கன.

*'வேண்டுவோர் வேண்டுவதே ஈவான் கண்டாய்'*
என்ற தேவாரச் செய்யுட்படி அடியார் வேண்டுவனவற்றையே இறைவன் தந்தருள் செய்பவன். ஆதலின் 'கற்பக' என்றார். 'கற்பகம் என்பது வடசொல்' என்பர். 'தன்னை அடைந்து

கேட்பார்க்கு வேண்டுவனவற்றைத் தன்னிடம் உண்டாக்கித் தருவது' என்னும் பொருளது என்பர்.

'வினை' என்பது சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்னும் மூன்றையும்

'மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்' என்றது மணம் இன்மையால் எவரும் பயனற்றது என்று விரும்பாத ஊமத்தம் பூவை (உன்மத்த மலரை) இறைவன் விரும்பிச் சூடி அருளியது. உலகுக்கும் தனக்கும் ஒரு பயனையும் செய்ய இயலாத அற்பராயினும், குற்றம் அற்றவராக இருப்பின் அவரையும் நாம் நம் தலைமேற் சுமந்து காப்போம் என்பதை உலகினார்க்கு உணர்த்தி அவரை உய்விப்பதற்கே என்பர் பெரியார்.

குருபத்தினியைப் புணர்தல், பக்கபாதஞ் செய்தல் முதலிய குற்றம் கொண்ட சந்திரன் தன்னை வந்தடைந்தபோது அவனைத் தலையில் சுமந்து காத்து அருள் செய்தார். தன்னை அடைந்தால் காப்பான் என்பதை உணர்ந்து வந்ததனால் அவனுக்கு 'மதி' என்னும் பேர் தந்தருளினார். இதனால் "இறைவன் திருக்குறிப்பு எத்துணைக் குற்றஞ் செய்து சண்டாளத்துவத்தை உடையராயினும் தன் பிழையை அறிந்து வருந்தித் தன்னைப் புகலென்று அடையில் அவனைத் தலைமேற்கொண்டு இறைவன் காப்பான் என்பதனை உலகு அறிந்து உய்ய வேண்டும் என்னும் கருணையினாலேயே சந்திரனைச் சடையிற் சூடி அருளினார்" என்பர் பெரியார். அழகே பிழம்பாக உள்ள இறைவர்க்கு, எல்லாப் பொருள்களுக்கும் அழகு அருள்பவர்க்கு, எல்லா அழகையும் உணரும் அறிவாக விளங்கும் இறைவர்க்கு அழகு செய்ய ஒன்றையும் அணிய வேண்டியதில்லை என்பதையும் அறிய வேண்டும்.

அரன் - 'அடியார் பாவங்களை அழிப்பவன்' என்பது பொருள். மகன் - இளமைத் தன்மை உடையவன்.

மத்தள வயிறனை - மத்தளம் போன்ற வயிறு உடையவனை என்பதாம். விநாயகர்க்குத் தலை மிருக உருவமும், வயிறுவரை தேவ ரூபமும், மார்புக்குக் கீழிருந்து பூத உடலும் ஆக மூன்றுருவோடு வந்த பெருமானாதலால் வயிறு பூத உருவப் பங்காதலின் பெரு வயிறாகி, மத்தளம் போன்று இருக்கின்றது என்றார். இஃது உரு உவமை.

'உத்தமி' என்றது உமாதேவியாரை, அருள் ஞானம் முதலியவற்றின் வடிவாகி, முப்பத்திரண்டு அறம் வளர்த்து அரனைவிட்டு நீங்காப் பாகத்தளாகி, எல்லா அண்டங் களையும் திரு வயிற்றில் வைத்துக் காத்துப் பெற்று அருளும் இறைவி ஆதலின், 'உத்தமி' என்றார்; எல்லா உத்தம குணங்களுமாக விளங்குபவள் என்பது குறித்து எனினும் ஆம்.

'மட்டவிழ் மலர்' என்றது புதுப் பூவை நாண்மலரை, நாள் மலரில் தான் மது விரியும் என்பதறிக, முத்தமிழ் நூல் ஒன்றை முன்னர் விநாயகர் மேருமலைமேல் எழுதினார் என்பது,

*'முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்*
*முற்பட எழுதிய முதல்வோனே!'*

என்றதனால் அறியக் கிடக்கின்றது.

'முத்தமிழிலும் அடைந்து வினைசெய வலதாகிய பாரதக் கதையை வியாசர் கூற, கொம்பொடித்து மேருமலையின் முன்னாளில் எழுதிய முதல்வனே!' எனப் பொருள் கூறுவர். இன்னும் பிற கதை கூறுவாரும் உளர். விரிக்கிற் பெருகும்.



'முதல்வோனே!' என்றது ஈசனும் விநாயகரும் அபேதம் ஆதலின் என்க. இனி 'முதல்வோனே!' என்பதற்கு 'எல்லோரும் எக்காரியஞ் செய்யத் தொடங்கினாலும் முதன் முதல் நினைத்துப் பூசிக்கும் முதன்மையுடையோனே!' என்பதும் பொருளாம். சிவபெருமானுக்கு முதற்பேறான புத்திரராதலால் இவரை 'முதல்வோனே' என்றார்.

முப்புரம் - திரிபுரம்; இறைவர் குறிப்பின் ஒழுகி விளையாடும் பிள்ளையார் இறைவர் தேரின் அச்சையே முரித்ததனால், 'அதி தீரா!' என்றார். "எவரும் எக்காரியஞ் செய்யினும் உன்னை முதலில் பூசிப்பாராக. அவ்வாறு பூசியாதிருப்பின் அவர்க்கு விக்கினம் ஆக்குக" எனக் கட்டளையிட்ட தந்தையே தன்னை நினையாது முப்புரத்தார் மேற் போருக்குச் சென்றாராதலின் இறைவன் தேரின் அச்சை முரித்தார். அவர் தன்னை நினைந்த பின்னே அவர்க்குத் துணையாய்

நின்றார் என்பது கதை. இறைவர் குறிப்பின் ஒழுகி விளையாடுபவர் விநாயகர் என்பதனை.

*"மார னெடுத்து வளைக்கும் ஒரு கரும்பை ஒடித்து*
*மலர்சிதறி*
*காரி யடுத்த அளிமாலைக் குலையத் துரந்து நயந்தோடி*
*வீரமனத்து வினைப்பாகர் குறிப்பின் ஒழுகி விளையாடும்*
*ஈர மதிச்செஞ் சடைகளிநல் யானை இணைத்தா*
*ளேத்துவாம்"*

என்ற பிரபுலிங்கலீலைச் செய்யுளாலும் அறியக் கிடக்கும்.

"இன்பம் வேண்டுவோன் துன்பந் தண்டான்" என்றபடி, இன்புற நிற்பான் துன்புற வேண்டுதலின் வள்ளியம்மை யாரைக் கூடி இன்புற நின்றார், துன்புற நாடகம் புரிந்தார். இது, உலகின் ஆன்மாக்களுக்காகச் செய்யும் அருள் விளையாட்டு. இதனானே அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும் அப்புன மதனிடை என்றார்.

'அத்துயர்' என்றதில் உள்ள அகரச்சுட்டுப் பண்டறி சுட்டாம். இபம் - பெரும் யானை.

முருகப்பிரான் விருப்பிற்கு இணங்கி, வள்ளியம்மையார் முன் பெரும் யானையாக விநாயகர் சென்று; அவளை மருட்டி முருகரை வலிந்திறுகத் தழுவிக் கொள்ளச் செய்தார். இதனை,




"முருகோட்டந் தரப்பாயும் மும்மதமும்
ஊற்றெடுப்ப முறிவிற் கோட்டு
ஒரு கோட்டு மழகளிற்றை இருகோட்டு
முதுகளிறா உலவக் காட்டிப்
பருகோட்ட நறைவேட்டுப் பைங்கோட்டுத்
தினைப்புனத்துப் பரண்மேற் கொண்டு
குருகோட்டும் பெடைமணந்த குமரகோட்
டத்தடிகள் குலத்தாள் போற்றி"

என்னும் மாதவச் சிவஞானயோகிகள் வாக்காலும் அறியலாம்.

இது விநாயக வணக்கம். இது வழிபடு கடவுள் வணக்கமாகும். இளைய பிள்ளைகளின் புகழைப் பாடுபவர் முன்னம் மூத்த பிள்ளையை வணக்கஞ் செய்தார். முருகர் துன்ப நீங்கி இன்புற என்று யானையாக வந்து வள்ளியை முருகருக்கு மணம் முடித்து வைத்த முதலவன் இளையருக்கு இன்பம் தரும் இத் திருப்புகழ் முட்டின்றி முடிவுற, அருள் செய்வான் என்பது கருதி, இளையோனுக்கு அருள் செய்த அருட்டிறமெடுத்தோதித் துதித்தார். இன்னும் இதனுள் பொதிந்துள பொருள் பல. வல்லார்வாய்க் கேட்டறிக.

★★★





## சுப்பிரமணியர் துதி

2. தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன - தனதான.

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்குஇறை சத்திச் சரவண
முத்திக்குஒரு வித்துக் குருபரன் என ஓதும்

முக்கண்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமூ வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருது ஒரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்

பத்தற்குஇர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்துடன் ரட்சித்து அருளுவது ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்குஒக்கந டிக்கக் கழுகொடு கழுதாட

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத்திரி கடக என ஓதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றுஅழ நட்பற்று அவுணரை
வெட்டிப்பலி இட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.

முத்தை நிகர்த்த, அழகிய தந்த பத்திகளையுடைய, தேவகுஞ்சரி அம்மையாருக்குக் கணவனே! சத்தி வேலாயுதத்தைத் தாங்கிய, கந்தக் கடவுளே! வீட்டிற்கு, ஒப்பு இல்லாத விதையைப் போன்றவனே! தந்தைக்கும் குருவாக இருந்தவனே! என்று துதிக்கின்ற, மூன்று திருக்கண்களை உடைய சிவபெருமானுக்கு, மறையின் முதன்மையாய்ச் சொல்லப் பெறுவதாகிய குடிலை மந்திரத்தை, உபதேசித்து, மாலும் அயனும் ஆகிய இருவரும், முப்பத்து முக்கோடி தேவர்களும், பாதங்களை வணங்கவும், தித்தித்தியெ என்னும் இசைத்தாள ஒலிக்குச் சரியாக, ஒத்து ஒலிக்கும் பாதச் சிலம்புகளை அணிந்திருக்கின்ற, நடனம் செய்யும் அழகிய பாதங்களை, அடியிட்டு, பயிரவி என்னும் ராகத்தை, திசைகளிற் பொருந்த, திருநடனஞ் செய்யவும், கழுகுகளோடு பேய்களுங் கூடி நின்றாடவும், எட்டுத் திசைகளிலுள்ள உலகத்தைக் காக்கின்ற எட்டுப் பயிரவர்களும், அழகிய நடனத்துக்கு, தொக்குத்தொகு தொக்குத்தொகு. தொகுதிரகடக என்னும் இவ் இசை ஓசையைக் கூறவும், கூட்டமாகிய பற்பல பறைகள், அடித்து முழக்கவும், போர்க்களத்தில், குக்குக்குகு குக்குக் குகுகுகு என்னும் ஒலியோடு, முதிர்ந்த கோட்டான், குத்திப் புதை, புகுந்து பிடி என்று குமுறவும், சுழன்று மேலே தாக்கி எழ, நட்புத் தன்மை இல்லாது பகை பாராட்டி வந்த அசுரர்களை, வெட்டிக் கொன்று, பலியாக இட்டு, உயர்வுடைய கிரெளஞ்ச வெற்பானது, குத்துப்படும்படி, பொருத்தமாகச் சண்டை செய்யும்படியான வல்லமையைக் கொண்டுள்ள, பெருமானே! பத்துச் சிகரங்களும் சிதறி விழ அம்பைச் செலுத்தி, ஒப்பற்ற மந்தரமலையாகும்,

மத்தால் திருப்பாற் கடலைக் கடைந்து, ஒரு நல்ல பகற்காலத்தை, வட்ட வடிவமாகிய தன்னுடைய சக்ராயுதத்தினால், இராக்காலம் ஆகும்படிச் செய்து, தன்னிடம் பக்தி உள்ளவனாகிய அருச்சுனனுக்குத் தேரைச் செலுத்திய பசிய மேகத்தின் நிறத்தைக் கொண்டுள்ள திருமால், விரும்பிப் போற்றத்தக்க பொருளாக உள்ளவனே! அன்பொடு, எங்களைக் காத்தருள்வதாகிய, ஒருநாளும் உண்டோ?

'முத்தைத் தரு' இதில் 'தரு' உவமப் பொருளது. நகை - 'நகு' என்னும் பகுதி அடியாகப் பிறந்தது, இதற்கு 'விளக்கமுடையது' 'பிரகாசிப்பது' என்பது பொருள்; பற்கள் பிரகாச முடைமை அறிக. 'அத்தி' என்றது ஈண்டு தேவகுஞ்சரியாரை. இறை - தலைவன், கணவன், சத்தி வேல்; இது பராசக்தியாரால் அருளப் பெற்றதால் சக்தி எனப் பெற்றது. ஞானசக்தியே வடிவேல் என்பதறிக.

சரவண: அண்மை விளி, கங்கையிலுள்ள சரவண மடுவில் முருகப்பிரான் அவதாரஞ்செய்து விளையாடி இருந்தவர். ஆதலின் அவருக்குச் 'சரவணோற்பவன்' என்னுந் திருநாமம் ஏற்பட்டது. சரவணோற்பவன் என்றது 'சரவண' என விகாரப்பட்டு நின்றது. "முத்திக்கொரு வித்து" என்றது முத்தியடைதல் எளிதென்பதை விளக்க, பரனுக்குங் குருவானமையால், 'குருபர' என்றார். பரமன் உயர்ந்தவன், பரம் - உயர்ந்த இடம்.

சுருதி - ஒலி வடிவாக இருப்பது என்பது பொருள். 'சுருதியின் முற்பட்டது' என்றது பிரணவமாகிய "ஓம்" என்பதனை.

*"உம்பல் உரித்தாற் கோம்பொருள் தந்த*
*செம்பொருளாவான் செவ்வேள் என்னும்"*

என்ற ஆன்றோர் வாக்கும் ஈண்டே கருதத்தக்கது. "ஓம்" அ - உ-ம் என்னும் மூன்றெழுத்தால் ஆயது; இவை முறையே தோற்றம், குவிவு, ஒடுக்கங்களை உணர்த்தும்.

கற்பித்தல் - கேட்பார் உணர ஐயம், திரிபு, விபரீதம் என்னும் முக்குற்றமும் அற உணர்த்தல், பேணல் - வணங்கல்; இது நச்சினார்க்கினியர் கொண்டது. தொடுதல் - கணையை ஏவுதல் விடுத்தல்; இறந்த காலத்தை எதிர்காலத்தாற் கூறினார். இஃது இலக்கண மரபு. 'ஒற்றை' ஒப்பற்ற உயர்வு காட்டிற்று. 'தனி' என்பதும் இப்பொருளதே. 'கிரி மத்தை' 'கிரியாகிய மத்தை' என விரிந்து இருபெயரொட்டாயிற்று.

'பத்துத்தலை தத்த' என்றது, திருமால் தசரத புத்திரராகி இராவணின் பத்துத் தலைகளுந் தத்தி விழச் செய்த கதையை.

'பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாக' என்றது, பாரத யுத்தத்தில் அருச்சுனன் தானிட்ட சபதப்படி சயத்திரதனைப் பொழுதுபடுமுன் கொல்லுமாறு பரிதியைச் சக்கரத்தால் மறைத்து சுயோதனன் அணி வகுப்புகள் கலையுமாறு செய்து, சக்கரத்தை மீண்டு வாங்கி, "ஈண்டும் பொழுதுளது சொல்லுக" என அருச்சுனனுக்குக் கட்டளையிட்ட கதையைக் குறித்தது.

எமன், இந்திரன் முதலிய தேவர்களை வென்ற இராவணனைக் கொன்றதனையும், பட்டப்பகலை இரவாகச் செய்ததையும், இங்குக் காட்டியது. திருமாலின் பேராற்றலையும், செயற்கரிய செய்பவன் என்பதையுங் குறித்ததற்கு. இவனே பின் அருச்சுனனுக்குத் தேர்ச் சாரதியாய் நின்றான் என்றது, காக்குங் கடவுளாகிய மால் அடியார் பொருட்டு எளிய செயலுஞ் செய்பவன் என்றது தோன்ற,

'பச்சை' இங்குப் பசுமையைக் குறித்தது. இதனானன்றோ,

*"பச்சை மேனியன் மரகத வண்ணன்"*
*"பச்சை மாமலைபோல் மேனி"*

என்றார் பிறரும். பச்சை: பண்புத்திரிபு கடவிய - செலுத்திய; கடாவுதல் - செலுத்தல். மெச்சல் - புகழ்தல்; 'விரும்புதல்'; புகழத்தக்கது விரும்பத்தக்கதே யாதலின். பொருள் என்றது செம்பொருள், மெய்ப்பொருள், முழுமுதற் பொருள் என்பதாம். ஆறுமுக மானபொருள் என்ற கருத்தே "தித்தித்தெய" என்பதை 'தித்தித்திசை' எனப் பாடம் ஓதுவாரும் உண்டு; இதற்குச் 'செவிக் கினிக்க ஒலிக்கும் இசையை உடைய' என்பது பொருளாம். நிர்த்தம் - பதம்; வடசொற்கள்; இதற்கு 'நடனத்தாள்' என்பது பொருளாம். பயிரவி - ஒருவகை இசை; இராகப் பெயர். பரி - தாங்கல், காத்தல், கொத்துப்பறை; கொத்து - கூட்டம். பறவைகளின் கூட்டம் என்க. களமிசை - அசுரர் போர் செய்த போர்க்களத்தினிடத்து. குக்குக்குகு... கோட்டான் ஒலிக்குறிப்பு.

கொட்பு - சுழற்சி என்றதானும் அறிக. நட்பற் றவுணரை "நட்புடைமை" இல்லா அசுரரை என்பது பொருள். 'நட்பற்ற அவுணரை' எனற்பாலது சந்தம் பற்றி நட்பற்றவுணரை என விகாரப்பட்டு நின்றது. அறத்தை இகழ்ந்து மறத்திற் புகுந்த அசுரரை வெறுத்தமை தோன்ற, நட்பு அற்று அவுணரை வெட்டினர் என்பார்.

இராவணன் பத்துத்தலை தத்தத் திருமால் கணை தொட்டதும், அசுரரை முருகப்பிரான் வெட்டிப் பலியிட்டதும் கருணையேயாம்; இவை மறக்கருணை எனப் பெறும். மறக்கருணை தப்புச் செய்த பிள்ளையைத் தாய் அடித்துத் திருத்துவது போன்ற கருணை. இனி, தப்புச் செய்த பிள்ளையை இன்மொழி கூறி, தின்பொருள் தந்து, 'அத் தீவழி செல்லாதே

எனத் தாய் தடுத்துக் கூறுவது போன்றது. **அறக்கருணை** எனப்பெறும். இவ்விரு கருணையும் இறைவர்க்கு உண்டு. இதனை,

*"அடித்துதன் சேயைத் தாம்தான் ஆம்வழி ஆக்கல் தானே*
*படித்தனில் வெம்மை காட்டும் பகர்மறக் கருணை யாமால்*
*பிடித்தலின் சொல்லைக் கூறிப் பிரியமே செய்து செம்மை*
*வடித்தெழு வழியி லாக்கல் வழுத்தறக் கருணை யாமே"*

*"அறமறம் என்னு மிந்த அருந்திறற் கருணை தம்மைத்*
*திறமுறக் கொண்டு பொம்மான் றிகழலு கெல்லாங் காப்பன்*
*உறமிகு மீசன் செய்யும் உயர்புகழ்க் கருணை யாறு*
*பிறரெவ ணறிய வல்லார் பேணுவ னறிவ தொன்றே"*

என்னும் தனிச் செய்யுள்களாலும் அறியலாம்.

முருகனுக்கு அன்புடையவர் முத்திவித்தைக் கைப்பெறுவர் என்பதும் பெற்றாம். இறைவர்க்கும் முத்தர் எனுநாமம் உண்டு. இதனை,

*"வேயீன்ற முத்தர்தமை*
*வெட்டினா னேயிடையன் - தாயீன்ற*
*மேனி தயங்கவே"*

என்ற இரட்டையர் வாக்கானும் அறியலாம். "முருகரோ முத்தீன்ற முத்து" இதனாலன்றோ **முத்துகுமாரசுவாமி** எனுந் திருநாமமும் வழங்கி வருகின்றது. முத்தர் என்ற சொல், 'முத்திக்கு உரியவர்' 'முத்தியைத் தருபவர்' என்னும் பொருள் தருதல் கவனிக்கத் தக்கதாம். முக்கண் பரமர் - சிவபெருமான்; சிவபெருமானினும் உயர்ந்தா ரின்மையானும், ஒப்பாரும் இல்லையாதலானும், 'பரமர்' என்றார். பரமன் - உயர்ந்தோன்,, இறைவர்க்கு இருக்கும் தீயும் மூன்று கண்ணாக இயைந்துள்ளதென வேதங்கள் கூறும்.

'என் பாவங்கள் என்னை உன் கருணைக்குப் புறம்பாக்கினும் சூரரை அழித்தருள் செய்து நிற்கும் முருகப் பெருமானே! நீ எந்த விதத்திலும் ஒரு நாளில் என்னைக் கெடுக்கும் பாவங்களை அழித்து என்னை அருள் செய்து காப்பாய் என்பது என் மனவுறுதியே' எனவும் பொருள் பெற நின்றது.



## திருப்பரங்கிரி

3. தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன தனதான.

அருக்கு மங்கையர் மலரடி வருடியும்
கருத்த றிந்தபின் அரைதனில் உடைதனை
அவிழ்த்தும் அங்குள அரசிலைத்தடவியும்
இருதோளுற்று

அணைத்து மங்கையின் அடிதொறு நகம்எழ
உதட்டை மென்றுப லிடுகுறி களுமிட
அடிக்க ளந்தனில் மயில்குயில் புறவென
மிகவாய்விட்டு

உருக்கு மங்கையின் மெழுகென உருகிய
சிரத்தை மிஞ்சிடும் அனுபவம் உறுபலம்
உறக்கை யின்கனி நிகர்என இலகிய
முலைமேல் வீழ்ந்து

உருக்க லங்கிமெய் உருகிட அமுதுகு
பெருத்த உந்தியின் முழுகிமெய் உணர்வற
உழைத்தி டுங்கண கலவியை மகிழ்வது
தவிர்வேனோ

இருக்கு மந்திர மொழிவகை முனிபெற
உரைத்த சம்ப்ரம சரவண பவகுக,
இதத்த இங்கிதம் இலகிய அறுமுக
எழில்வேள் என்று

இலக்க ணங்களும் இயலிசை களுமிக
விரிக்கும் அபல மதுரித கவிதனை
இயற்று செந்தமிழ் விதுமொடு புயமிசை
புனைவோனே

செருக்கும் அம்பல மிசைதனில் அசைவுற
நடித்த சங்கரர் வழிவழி அடியவர்
திருக்கு ருந்தடி அருள்பெற அருளிய குருநாதா

திருக்கு ழந்தையு மெனவவர் வழிபடு
குருக்க ளின்திறம் எனவரு பெரியவ,
திருப்ப ரங்கிரி உறைபவ சரவண பெருமாளே.

இருக்குவேத மந்திரங்களின், சொல்லின் பாகுபாடுகளை, அகத்திய முனிவர் அடையுமாறு கூறி அருள் செய்த மேன்மையோனே; சரவண மடுவில் உதித்தருளியவனே; குகன் என்னும் திருநாமம் பூண்டுள்ளவனே! நன்மைகள் நிறைந்தவனே! இன்பம் விளங்குறும், ஆறு திருமுகங்கள் உடையவனே! அழகு மிக்க முருகவேளே! என்று, இலக்கணங்களும் இயற்றமிழ் இசைத் தமிழ்களும், மிக விரித்துரைக்கும், அழகிய பலவாகிய காதுக்கும் கருத்துக்கும் இன்பமான, பாட்டை, பாடப் பெற்றுள்ள செந்தமிழ் நூல்களை, விதம் விதமாக, அழகிய தோள்களின் மேல் அணிந்து கொண்டிருப்பவனே! மேம்பாடுடைய, பொன்னம்பலனிடத்து, ஐந்தொழில் நடைபெற, திருநடனஞ் செய்தருளிய கூத்தர்களின் பரம்பரையாக வந்த அடியவர்கள், அழகிய சிறந்த குருந்தைமரத்தடியில், திருவருளைப் பெறும் பொருட்டு, அருளச் செய்த சிவபெருமானுக்கும், சிறந்த குருவாக விளங்குவோனே! தனது அழகிய குழந்தையும் இவராம் என்று அந்தச் சிவபெருமான் வழிபடுகின்ற, ஆசிரியரின் தன்மை உடையவர் எனவும், வருகின்ற பெரியவனே! திருப்பரங்கிரி என்னும் சிறந்த

தலத்தில், வாழ்ந்தருள்கின்றவனே! குமரக் கடவுளே! அருமையாக விளங்கும்: பெண்களின், செந்தாமரையை ஒத்த சிவந்த மெல்லிய பாதங்களை, வருடியும் தடவிக் கொடுத்தும் அவர் கூடக் கொண்டுள்ள கருத்தை அறிந்துகொண்ட பிற்பாடு, இடையிற் கட்டியுள்ள சீலையை அவிழ்த்தும், அங்கு இருக்கும், அரசின் இலையை ஒத்து விளங்கும் அல்குலைத் தடவிக் கொடுத்தும், இரு தோள்களோடும் இரு தோள்கள் (முலைகள்) பொருந்தி, அணைத்துக் கொண்டும், அழகிய கையினால் நகக்குறி வைக்கும் இடங்களிலெல்லாம், நகக்குறி தோன்றவும், இதழைச் சுவைத்து, பல்லாற் செய்யப்படுவனவாகிய அடையாளங்களை இயற்ற, கழுத்தின் அடிப்பக்கத்தில், மயில், குயில், புறா என்று சொல்லப் பெறும்படி; வாயினால் அவைகளைப்போல் புள்ளொலிகாட்ட, இளகச் செய்யும் நெருப்பில் வைத்த, மெழுகைப் போல் மனம் இளகி; ஆதாரம் மிகுந்த, இன்பநுகர்ச்சியின் பலமானது, அதிகரிக்கும்படி, கையிலுள்ள பழத்திற்கு ஒப்பானது என்று கூறுமாறு, விளங்குகின்ற கொங்கைகளின் மேலே படிய வீழ்ந்து, உருவம் மாறுபாடடைந்து, உடம்பும் உருக, அமிர்தம் சொரிகின்ற, பெரிதாகிய உந்திச் சுழியில், அழுந்தி, மெய் அறிவு கெட இன்பப் பரவசமாகி வருந்தும், மிக்க புணர்ச்சி இன்பத்தினிடத்தில் அறியாமையினால் அதில் விருப்பங்கொண்டு மகிழ்ந்திருப்பது உய்யும் வண்ணம் அதினின்றும் நீங்கவுஞ் செய்வோனே.

அருக்கு மங்கையர் - அருமையான பெண்கள் 'மங்கை' என்னும் பருவப் பெயர் அதனையுடைய பெண்கள் மேல் நின்றது. கருத்தறிதலாவது - அப் பெண்களின் கருத்தும் கனிந்து கூடல் விரும்பி நிற்குங் கருத்து. 'அரசிலை' அது போன்றுள்ள அவயவத்தைக் குறித்தது; இது ஓர் உவமம், 'கனி நிகரென இலகிய முலை' என்பதற்கு, 'கூவிளங்கனி, மாதுளங்கனி நிகர்த்த முலை' எனினும் ஆம். ஈண்டு 'கையின் நிகரென இலகிய முலை மேல்

வீழ்ந்து' என்பதற்கு 'ஒழுக்கத்தால் பலாக்கனிச் சுளையில் வீழ்ந்து ஒட்டி உருச்சிதைந்தழியும் ஈயைப்போல' என்பாரும் உண்டு. 'பெருத்த உந்தி' முழுகி என்பதற்குப் பொருந்தப் 'பெருத்த' என்றார். பெருத்த உந்தி - பெரிய உந்திச் சுழி, ஏனெனின், அதன்கண் அகப்பட்டாரைச் சுழித்து இழித்து உள்ளுறவாக்கி அழிக்கும் இயல்புடைமையால், உயர்ந்த இடமாகிய முலை மேல் வீழ்ந்தவன் உருண்டு மருண்டு துன்பப் படலையும், ஆழமாகிய சுழி நீரிற் பட்டவன் தன்னிலை கெட்டு முழுகி அழிந்து ஒழிதலையும் குறிக்கும் நயம் இங்கு காணத்தக்கது. 'கன கலவி' மிகுந்த இன்ப ஆடல். முத்திப்பேறு பெறாதபடி ஒருவனைத் தடுப்பன முன்றாசை. அவை: மண், பெண். பொன் என்பன. இவற்றுள் நடுநின்ற பெண் பற்றியே மண்ணினிடத்தும் பொன்னினிடத்தும் ஆசை பிறக்கும். பெண்ணாசை விட்டார்க்கு ஏனை இரண்டாசையும் தானே நீங்கும்; நீங்க உடனே வீடு கூடும். ஆதலின், 'கனகலவியை மகிழ்வது தவிர்வேனோ' என்றார். இதனை,

*"காதென்று மூக்கென்று கண்ணென்று*
*காட்டியென் கண்ணெதிரே*
*மாதென்று சொல்லி வருமாயை*
*தன்னை மறலிவிட்ட*
*தூதென்றெண் ணாமற் சுகமென்று*
*நாடுமித் தூர்ப்புத்தியை*
*ஏதென் றெடுத்துரைப் பேன்இறை*
*வாகச்சி ஏகம்பனே"*

என்ற பட்டினத்தடிகள் வாக்கானும் அறியலாம்.

இருக்கு மந்திரம் 'மந்திர வடிவாகிய இருக்கு வேதத்தை'. 'முனி' என்றது ஈண்டு அகத்திய முனியை அடியார்களின் உள்ளக் குகைகளில் வசிப்பவன் ஆதலின் 'குகன்' என்னும்

பெயர் முருகப்பிரானுக்கு ஆயிற்று. 'குறிஞ்சி நிலத்து மலைக் குகைகளில் வசிப்பவன்' எனினும் ஆம்; செருக்கு - பெருமை. அம்பலம் - ஞானசபை. அசைவுற - ஐந்தொழில் நடைபெற. இதனை,

*"தோற்றமொரு கைத்துடியிற் றிதியபயந்*
*தருசரத்திற் றொலைவோர் செங்கை*
*ஏற்றகலைக் கொழுந்தழலிற் றிரபவமூன்*
*றியதாளில் எடுத்த தாளில்*
*மாற்றரிய அருள்வயங்க இருமுனிவர்*
*பணிந்துதுதி மகிழ்ந்து போற்ற*
*சாற்றரிய அம்பலத்துள் நடநவிலும்*
*பெருமானைச் சார்ந்து வாழ்வாம்"*

என்னும் உறந்தை புராணத்தானும் அறியலாம்.

'வழிவழி அடியவர்' என்றது மணிவாசகப் பெருமானை, சிவபெருமான் மணிவாசகர்க்குக் குருந்த மரத்தின் நிழலிலிருந்து உபதேசித்து அருளினர் என்பது புராணம். இதனை,

*"பெருந்துறையிற் சிவபெருமான் அருளுதலும்*
*பெருங்கருணைப் பெற்றி நோக்கி"*

என்ற சிவஞான முனிவர் வாக்கானும்,

*"சீரார் பெருந்துறையில்,*
*எளிவந் திருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்*
*ஒளிவந்தென் னுள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ்*
*அளிவந்த அந்தணனை"*

என்ற மாணிக்கவாசகத்தாலும் அறியலாம்.

'குரு' என்ற வடசொல் 'அஞ்ஞானமாகிய இருட்டைப் போக்குபவன்' என்னும் பொருளது. வழிபடல் - வணங்கல், 'திருப்பரங்கிரி' என்றது திருப்பரங்குன்றத்தை.

குருத்த மரத்தடியிற் குருவாக நின்ற பரமர்க்கும் குருவானவன் நீயாகையால் நாயேனால் நீங்கற்கரிய கொடிய கேட்டைத் தரும் பெண்ணாசையை நீக்கி நின் திருவடிக்கே ஆசைவைக்கும் வழியைக் காட்டியருள் செய்வாயாக என்பது குறிப்பித்ததாகும்.

4. தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன
தனத்தனந்தன தனதன தனதன தனதான.

கருக்கும் அஞ்சன விழிஇணை அயில்கொடு
நெருக்கி நெஞ்சுற எறிதரு பொழுதொரு
கனிக்கு ளின்சுவை அமுதுகு மொருசிறு
நகையாலே

களக்கொ டுங்லி வலைகொடு விசிறிஎம்
மனைக்கு எழுந்திரும் எனமனம் உருகுஓர்
கவற்சி கொண்டிட மனைதனில் அழகொடு
கொடுபோகி

நறைத்த பஞ்சணை மிசைதனில் மனமுற
வளைத்த னந்தலின் இணைமுலை யெதிர்பொர
நகத்த ழுந்திட அமுதிதழ் பருகிய மிடறூடே

நடித்தெ ழுங்குரல் குமுகுமு குமுவென
இசைத்து நன்கொடு மனம்அது மறுகிட
நழுப்பு நஞ்சன சிறுமிகள் துயர்அற அருள்வாயே;

நிறைத்த தெண்டிரை மொகுமொகு மொகுவென
உரத்த கஞ்சுகி முடிநெறு நெறுவென
நிரைத்த அண்டமு கிடுகிடு கிடுவென
வரைபோலும்

நிவத்த திண்கழல் நிசிசர ருரமொடு
சிரக்கொ டுங்குவை மலைபுரை தரஇரு
நிணக்கு ழம்பொடு குருதிகள் சொரிதர அடுதீரா!

திறற்க ருங்குழல் உமையவள் அருளுறு
புழைக்கை மும்மத கயமுக மிகஉள
சிவக்கொ ழுந்தென கணபதி யுடன்வரும்
இளையோனே!

சினத்தொ டுஞ்சமன் உதைபட நிறுவிய
பரற்குள அன்புறு புதல்வ! நன் மணியுகு
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

கடலை நிரம்பச் செய்து எழும் தெள்ளிய அலைகள், மொகு மொகு மொகு என்னும் ஒலியைக் கிளப்பவும், மார்பாலூர்ந்து செல்லும் தன்மையை உடையதாகிய பாம்பாகிய ஆதிசேஷனது, தலையானது, நெறுநெறு என்ற ஓசையோடு முரியவும், வரிசை வரிசையாகிய உலகங்களும், கிடு கிடு கிடு என்று நடுங்கிடவும், மலையைப் போன்று, உயர்ந்தோங்கிய, உறுதியாகிய வீரக்கழலை அணிந்த, அசுரர்களுடைய மார்போடு, தலைகளினுடைய கொடிய குவியல்களும், மலைபோலக் குவியலாக விளங்கி நிற்க, பெரிய கொழுப்பின் குழம்புடனே, பெருகிய இரத்தங்கள், வழியவும், போரைச் செய்யும் தைரியத்தை உடையவனே! வல்லமையையுடைய கருமை நிறம் வாய்ந்த கேசத்தை உடைய உமாதேவியாரின், கருணையைப் பெற்றுள்ள, துளையோடுள்ள தும்பிக்கையையும், மூன்று மதங்களை

யுமுடைய, யானையின் முகம், சிறக்க உண்டாகிய, விநாயகக் கடவுளோடு, சிவக்கொழுந்தென்று கூறும்படி, தோன்றி வரும்படியான இளமைக்கோலம் உடையவனே; கோபத்தோடும், யமனானவன் உதைபடுமாறு, திருவடியைத் தூக்கியருளிய சிவபெருமானுக்கு, உள்ளத்து அன்பு தங்கிய புத்திரனே! நல்ல முத்துக்களைச் சொரிதரச் செய்யும், திருப்பரங்கிரி என்னும் சிறந்த திருத்தலத்தில் வசித்திருக்கும், சரவணம் என்னும் மடுவில் தோன்றி அருளிய பெருமானே! கறுமையாகிய மைதீட்டப் பெற்ற, இரண்டு கண்களாகிய வேலாயுதத்தைக் கொண்டு, கிட்டிச் சென்று மனத்திற்பட, வீசுகின்ற காலத்தில் ஒப்புச் சொல்லற்கரிய கொவ்வைக் கனியை ஒத்த இதழில், மதுரச்சுவை பொருந்திய, இதழமுதைச் சொரிகின்ற, ஒப்பற்ற புன் நகையினால், வளைந்த கழுத்தின் கண்ணே உண்டாவதாகிய ஓசை என்னும் வலையைக்கொண்டு வீசி, எமது வீட்டிற்கு எழுந்து வருவீராக! என்று மனது இளகும்படிக்கும், ஒரு கவலையைக் கொள்ளும்படிக்கும், வீட்டில் அழகாக இட்டுக்கொண்டு சென்று, வாசனையை உடைய பஞ்சணைகளாலாகிய அமளியின்மேல், ஆவல் உண்டாகும்படி, கழுத்தைத் தழுவி வளைத்து, இன்ப ஆடற் செருக்கில், மார்பின் இரண்டு கொங்கைகளும், காளையர்களின் மார்பத்து நேரிலே பொருந்த, உகிரால் அழுந்த, இதழ் அமழ்தத்தைச் சுவைத்து அருந்திய, கழுத்தின் மத்தி இடத்தில், பாவனையாகக் கிளம்புகின்ற ஒலி, குமு குமு குமு என்னும் ஓசையோடு, ஒலியை உண்டாக்கிட, நன்றாக, மனமானது சுழன்றிட வஞ்சிக்கும், விடத்தை ஒத்த, இளைய பெண்களால் வரும் துன்பமானது என்னை விட்டு நீங்க, தொண்டனாகிய எனக்குக் கிருபையைச் செய்வாயாக.

'கறுக்கும் அஞ்ஞன விழிஇணை' கறுக்கும் விழி - கோபிக்கும் விழி, எனக் கறுக்கும் என்பதனை விழிக்கும்

அடைமொழியாக்குக; 'கறுக்கும்' என்பதற்குக் 'கருப்பு நிறங் கொள்ளும்' எனப் பொருள் கோடலும் ஒன்று.

*"கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள"*
*"நிறத்துரு வுணர்த்தற்கு முரிய வென்ப"*

என்பன தொல்நூல் ஆதலின் இவ்வாறெல்லாம் பொருள் கொள்ள அமையும்.

'கழுத்தினின்றும் உண்டாகும், கொடும் கலி - ஆடவர் மனத்தை வலிந்திழுக்குங் கொடுமை உடையதாகிய ஓசை'. அவர் கண்டத்திலிருந்து வரும் ஒலி ஆடவர் மனத்தைப் பிணிக்குத் தன்மையது என்பது தோன்ற, "களக்கொ டுங்கலி கொடு விசிறி" என்றார்.

எமது வீடு, நாங்கள் பதியிலாராகையால் நீங்கள் பயமின்றி வரலாம் என்னும் பொருள்பட 'எம்மனை' என்றார். இதனாலன்றோ,

*"மைவிழியார் மனையகல்"*

என்றார் ஔவையாரும். முன்னர், 'வலைகொடு விசிறி' என்றதற் கேற்ப 'மனமுற வளைத்து' என்ற நயம் கருதற்பாலது. 'மனமுற' இது 'மயக்கம் ஆடவர் மனதுற' என்றும், 'தமது மனது பொருந்த' என்றும் பொருள் தந்து நின்றது. 'நழுப்பு நஞ்சன சிறுமிகள்': நழுப்புதல் - வஞ்சித்தல்.

நிறைத்த தொண்டிரை - 'நீரை நிறைத்துக் கொண்டுள்ள அலை' "நிரை எனற்பாலது 'நிறை' என விகாரப்பட்டு வந்தது" இவர்க்கு;

*"அறையு மாடரங் கும்படப் பிள்ளைகள்*
*தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ"*

என்றதில் 'தரை' என்ற இடத்து 'தறை' என்றதே பேராதார மாயிற்று.

'வரைபோலும் நிதிசரர்' தோற்றத்தான் மலைக்கு உவமேயம் ஆயினர்; ஒப்பு நிசிசரர் - இரவிற் சஞ்சரிப்போர் என்பது பொருள். அசுரர், அரக்கர் இராவலி பெற்றோர். 'திறற் கருங்குழல் உமையவள், 'திறம்' உமையவளை விசேடிக்க வந்தது, பெருமானை ஐந்தொழிலும் செய்யுமாறு ஆட்டுவிக்குந் திறல் உடையவள். இதுபற்றியே

*"பெருமானை அம்பலத்தில் ஆட்டியருள்*
*ஐந்தொழிலும் பிறங்க வாக்கி*
*வருமானைத் திருமானும் கலைமானும்*
*தொழுமேனை மகவாந் தேனை*
*உருமானை முகத்தானைப் பெற்றாளைக்*
*குறமானை உவந்து கொண்ட*
*தருமானை நாதற்குந் நலத்தாயை*
*நாடிமனந் தழைக்கு மாதே"*

என்ற ஓர் பெரியார் வாக்கானும் அறியக் கிடக்கும். நிவத்தல் - ஓங்குதல், 'புழைக்கை மும்மத கயமுகம்; துதிக்கை யானைக்கு மூக்காகவும் உதவும்படி துவாரத்தோடிருப்பதனால் 'புழைக்கை' என்றார்.

இளையோனே - 'விநாயகரின் தம்பியே' என்றும், 'இளமைக்கோலம் உடையவனே' என்றும் பொருள் தந்து நின்றது.

தன் அடியார்க்குப் பிறர் இன்னல் விளைக்கப்பெறார் ஆதலின், தன்னிடத்து அன்பனாகிய மார்க்கண்டனைக் கொண்டு போக வந்த யமனைச் சினத்தோடு உதைத்தார் என்றார். காலகாலன் கான்முளையாகிய கந்தன் நீ யாதலாலும்,

*"மகனறிவு தந்தை அறிவு"*

என்பதற் கேற்பச் சிவக்கொழுந்தாக விளங்குவதாலும், என்னைத் தொடரும் அடரும் இன்னல் தரும் மாயா காரியங்களை எல்லாம்

நீங்கிநின் அருட்கு இலக்காக்கிக் கொள்வாயாக என்பதாம். 'மணியுகு' என்பதற்கு 'முத்துக்கள்' என்றாம். மூங்கில் முத்து, யானைத் தந்தத்தில் விளைந்த முத்து, பன்றியின் பல்லில் விளைந்த முத்துக்கள் முதலியன சொரிதரப் பெறுதலின், இனி, 'மணி' என்பதற்கு 'ரத்தினங்கள்' என உரைப்பாரும் உண்டு; நாகமணிகளும் முத்துக்களும் மலை சொரிதலின்.

5. தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன – தனதான

கருவும்படி வந்தனன் இங்கித
மதன்நின்றிட அம்புலி யும்சுடு
தழல்கொண்டிட மங்கையர் கண்களில் வசமாகி

சயிலங்கொளும் மன்றல் பொருந்திய
பொழிலின் பயில் தென்றலும் ஒன்றிய
தடவஞ்சுனை துன்றி எழுந்திட திறமான

இரவும் பகல் அந்தியும் நின்றிட
குயில்வந்திசை தந்தன என்றிட
இருகண்கள் துயின்றிடல் இன்றியும் மயலான

விவனெஞ்சு பதன்பதன் என்றிடு
உடல்கொண்டு வருந்திய வஞ்சகன்
இனிஉன்றன் மலர்ந்தில கும்பதம் அடைவேனோ

திருவொன்றி விளங்கிய அண்டர்கள்
மனையின்தயிர் உண்டவன் எண்டிசை
திகழும்புகழ் கொண்டவன் வண்டமிழ்
பயில்வோர்பின்

திரிகின்றவன் மஞ்சுநி றம்புனை
பவன்மிஞ்சுதி றங்கொள வென்று அடல்
செய்துங்க முகுந்தன் மகிழ்ந்தருள் மருகோனே

மருவுக்கட றுந்துமி யுங்குட
முழவங்கள்கு மின்குமின் என்றிட
வயமொன்றிய செந்திலில் வந்தருள் முருகோனே

மதியுங்க திரும்புய லுந்தின
மருகும்படி அண்டம் இலங்கிட
வளர்கின்ற பரங்கிரி வந்தருள் பெருமாளே!

செல்வம் அமைந்த, ஆயர்களது, வீடுகளிலே உள்ள தயிரை உண்டவனும், எட்டுத் திக்குகளிலும் விளக்கமுறும் புகழைக் கொண்டுள்ளவனும், வளப்பம் பொருந்திய தமிழை; கற்பவர்களின் பின், திரிகின்றவனும், கொண்டலின் நிறத்தைப் பொருந்தி உள்ளவனும், மிகுதியாகிய வெற்றிவன்மை தனக்கமைய, போர்க்களத்தில் சத்துருக்களைக் கொன்று, வெற்றியின் உயர்வைக் கொண்டுள்ளவனுமாகிய திருமால், மகிழ்ச்சி கூர்ந்து கொண்டாடும் மருகனே! நிலத்தைத் தோய்ந்து நிற்கும் கடலைப்போல, பேரிகையும் குடத்தைப்போன்ற உருவத்தையுடைய மத்தளங்களும் குமின் குமின் என்ற ஒலியைச் செய்ய வளப்பம் பொருந்திய திருச்செந்தூர் என்னும் சிறந்த தலத்தில் வந்து வசித்து அடியார்க்கு அருளைச் செய்கின்ற முருகக் கடவுளே! திங்களும், ஞாயிறும், மேகமும், தினந்தினம் மயங்கும்படி, விண்ணளவும் விளங்கும்படி, ஓங்கி உயர்ந்துள்ள, திருப்பரங்குன்றம் என்னும் அழகிய பதியில், வந்து வாழ்ந்திருந்து அருளைச் செய்கின்ற பெருமானே, அணைத்தற்கு, வந்தவனாகி மனக்குறிப்பை உணர்த்தும் மதவேள் மத்தியில் நிற்க, சந்திரனும், சுடுகின்ற நெருப்பைப் போலும் வெப்பத்தைக் கொள்ள, பெண்களது விழிகளின் வயப்பட்டு, பொதிய மலையிலுள்ள

மணமோடு கூடிய சோலைகளிலே சஞ்சரிப்பதாகிய, தென்றற் காற்றும், குளிர்ச்சி பொருந்திய விசாலமாகிய அழகிய சுனைகளிலே, நெருங்கி வர, பிரிவினையுடைய இரவிலும் பகலிலும் மாலைப்பொழுதிலும், காமத்தை மிகுக்கவே நிற்கும் குயில், வந்து தனது இசையை தந்தன என்று சொல்ல, இருவிழிகளும்., நித்திரை செய்வதில்லாமலும், காம மயக்கத்தைக் கொண்டு என்னுடைய மனது பதைபதைப்படைய இத்தேகத்தைப் பெற்று வருந்துகின்ற கபடம் மிகுந்த செயலை உடையவனாகிய நான், இனிமேல் கடவுளே உம்முடைய, தாமரைப் பூவைப் போல் மலர்ந்து விளங்குகின்ற, திருவடிகளைப் பெற்றிடுவேனோ?

சருவுதல் - அணைத்தல்; 'மலர்க்கணை எய்ய மதனன் அணைந்தனன், என்பாருமுளர் 'அம்புலியும், தென்றலும்' என்றவற்றின் உம்மைகள் எண் உம்மைகள். காமிகளை மதன்; அம்புலி, தென்றல், குயில், இரவு முதலியன துன்பு செயும் என்பர்.

*"வாரியொன்று பாயிரண்டு மாலைமூன்று நாலுவேய்*
*மதியம் ஐந்த கங்குலாறு மாரனேழு வாடையெட்டு*
*ஆரமொன்ப தன்றில்பத் தடங்களும் ஒறுக்குமால்*
*அத்தனைக் கெலாமிலக் கென்னாவியொன்று காணுமே"*

என்ற தனிப்பாடல் அடிகள் நோக்கத் தக்கன.

"சயிலம் தென்றல்" என்ற குறிப்பால் பொதியத்தைக் குறித்தது. அண்டர் - திருமாலின் அருளுக்கு அண்மையானவர் என்பது பொருள். பத்தவதாரத்தால் புவியில் அவதரித்து, உலகைப் போற்றியதால் "எண்டிசை திகழும் புகழ் கொண்டவன்" என்று திருமாலைக் கூறினார். கச்சிக்கணிகண்ணர் என்பார் பாடலைக் கேட்டு அவரைப் பின்றொடர்ந்து சென்றதால் 'வண்டமிழ் பயில்வோர்பின் திரிகின்றவன்' என்றார். இதனை,

*"பணிகொண்ட துத்திப் படப்பாய்ச்*
*சுருட்டுப் பணைத்தோ ளொருத்தலைப்பப்*

*பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப்
பின்சென்ற பச்சைப்பசுங் கொண்டலே!"*

என்ற குமரகுருபரர் வாக்கானும் அறியலாம். நாளைக்கும் தமிழ் வேதமாகிய நாலாயிரப் பிரபந்தம் முன்னர் படித்தேக அதனைப் பின்பற்றிப் பெருமான் செல்ல, அப் பெருமாளைப் பின்பற்றிக் கதறிக்கொண்டு வேதஞ் செய்வதையுங் கண்கூடாகக் காணலாம். மதியும், கதிரும், புயலும் திருப்பரங்குன்றை 'மகாமேருவோ' என மயங்கும்படி எனவும், மதியும், கதிரும், புயலும் வான வீதியில் தாம் செலற்கு வழியின்றித் திருப்பரங்குன்றம் அண்டமுகட்டுக்கு அப்பாலும் ஓங்கி வளர்ந்திருத்தல் கண்டு 'எவ்வாறு செல்வேம்' என மயங்கும் எனவும் பொருள்.

மாயையில் வல்லவனாகிய திருமால் எளியனாகி ஆயரின் மனைகளில் புகுந்து தயிருண்டு அவர்களை அண்டராகியவன், தமிழ் நாட்டு அன்பு பூண்டு தமிழ்ப் பாவலர் பின்னே சென்றவன். உலகைக் காத்தருளத் துட்டராகிய அரக்கரை அழித்துக் குற்றமற்ற புகழாலோங்கியவன் மருகன் ஆதலினால் தாய்மாமன் குணம் ஆண்டிருப்பவனே ஆவன்.

என் மாயகாரிய மாதர் ஆசையை நீத்து, எளியவனாகிய எனக்கு இரங்கி, என் தமிழை ஏற்று இன்புற்று, துட்டவினைகளை அழித்து, முத்தி இன்பளித்துக் காத்தருள்வன் என்பது கருத்தாம்.

**6. தனத்தனந் தந்ததான**
**தனத்தனந் தந்ததான**
**தனத்தனந் தந்ததான – தனதான.**

வரைத் தடங் கொங்கையாலும்
வளைப்படும் செங்கையாலும்
அமர்ந்திடும் கெண்டையாலும் அனைவோரும்

வடுப்படும் தொண்டையாலும்
விரைத்திடும் கொண்டையாலும்
மருட்டிடுஞ் சிந்தைமாதர் வசமாகி

எரிப்படும் பஞ்சுபோல
மிகக்கெடும் தொண்டனேனும்
இனற்படும் தொந்தவாரி கரையேற

இசைத்திடும் சந்தபேதம்
ஒலித்திடுந் தண்டைசூழும்
இணைப்பதம் புண்டரீகம் அருள்வாயே;

சுரர்க்குவஞ் சம்செய்சூரன்
இளக்கிரௌஞ் சஞ்சன்தனோடு
துளக்கெழுந் தண்டகோளம் அளவாகத்

துரத்தியன்று இந்த்ரலோகம்
அழித்தவன் சம்ப்ரதாயம்
சுடப்பிர சண்டவேலை விடுவோனே!

செழுக்கெழுந் தும்பர்சேனை
துளக்கவென் ரண்டமுடுந்
தொனித்திடும் சங்கபாணி மருகோனே!

தினைப்புனஞ் சென்றுலாவும்
குறத்தியின் அன்பராகுந்
திருப்பரங் குன்றமேவு பெருமாளே!

தேவர்களுக்கு, வஞ்சனையாகக் கொடுமையைச் செய்கின்ற, சூரபதுமன் தம்பியாகிய கிரௌஞ்சன் என்பவனோடு, அசுரர்கள் நடுங்கும்படி எழுந்து, வானமண்டலம் வரையிலும், துரத்திக்கொண்டு சென்ற அந்நாளிலே, தேவேந்திரனின் நாட்டை அழித்தவனாகிய அவ்வசுரனின், வழிவந்த அசுரர்களை, எரித்திட, மிகப்பெரிய வலிய வேலாயுதத்தை, செலுத்தியவனே!, அமரர்களுடைய படையானது, மகிழ்ச்சிகொண்டு, சத்துருக்களின் சேனா வெள்ளத்தை நடுங்கி அஞ்சுமாறு செய்யும் ஊக்கங் கொள்ளும்படி விண்மண்டலத்துள்ளும் புகுந்தோங்கிச் செல்லுமாறு, முழுக்கஞ் செய்யும், பாஞ்சசன்னியம் என்னும் சங்கத்தைக் கையிலே தரித்திருக்கின்ற பெருமாளுக்கு மருகனே! தினைவிளையுஞ் சாரற் கொல்லையிலே, போய் உலாவுகின்ற வள்ளி அம்மையாரின், காதலர் ஆகவுள்ள, திருப்பரங்குன்றத்தில் வசிக்கும் பெருமானே! மலைபோன்ற, பெருத்த தனங்களாலும், வளையல்களைப் பூண்டுள்ள, செவ்விய கைகளாலும், செழித்திருக்கும் கயல்மீனை ஒத்த விழிகளாலும், எல்லோரும், வடுவைச் செய்கின்ற கோவைப்பழத்தை நிகர்த்துள்ள உதடுகளாலும் நறுமணங் கமழுகின்ற கொண்டையினாலும், மயங்கச் செய்கின்ற வஞ்சனை எண்ணத்தையுடைய பெண்களின் அவர் வயப்பட்டு அக்கினியிற்பட்ட பஞ்சைப்போன்று, மிகவும் கெட்டழிகின்ற அடியனேனும், துன்பத்தோடு கூடிய ஆசைக் கடலிலிருந்தும், முத்திரைக்கரை ஏற, சிறப்பாகக் கூறப்பெறும் சந்த வேறுபாடுகளை, ஒலிக்கின்ற தண்டைகளால் சூழப்பெற்ற, இரண்டு திருப்பாதங்களாகிய, செந்தாமரை மலர்களை, அடியேனுக்குத் தந்தருள்வாயாக.

வரைத்தடங் கொங்கை - மலைபோலும் தோற்றத்தை யுடைய இடமகன்ற முலை வரை - இருமடியாகு பெயர்; வரை கோட்டிற்கு ஆகி, அதனுடைய மூங்கிலுக்காகி, அது விளையும்

மலைக்காயிற்று. வளைப்படுஞ் செங்கை - வளையல் பூண்ட செவ்விய கை, வளை - 'வளைவை உடையது'; 'வளைத்துச் செய்யப்பட்டது' என்பது பொருள். 'செங்கை' அழகிய கை; உருண்டு திரண்டு நீண்டு சிவந்து அழகுறப் பொலிந்து நிற்குங்கை; மதர்த்தல் - செவ்வரி பரந்து கடை சிவந்து செழித்திருத்தல். வடுப்படுந் தொண்டை; வடுவைச் செய்யும் என்றாம். பல்லால் பற்குறி வைத்து வடுசெய்யப் படுதலின்; இனி, 'காளையர் மனத்தை வடுப்படுத்தும்' என்றும், 'இருபிளவாகப் பிளந்து வடுச் செய்யப்பட்ட கொவ்வைக் கனி போன்ற இதழ். எனினும் ஆம். 'கெண்டை' என்றது கெண்டை மீனை ஒத்த வடிவம் பிறழ்ச்சி உடைய கண்ணை; 'தொண்டை' என்றது நிறத்தால் கொவ்வைக் கனியை ஒத்த இதழை. இவை இரண்டும் உருவகம். விரைத்திடுங் கொண்டை - நறுமணம் வீசும் கொண்டை. கூந்தற்கு நறுமணம் மலர்களாலும் வாசனைத் தைலங்களாலும் அமைந்தது.

ஆடவரை மருட்டுவது கொங்கை, கண், இதழ், குழலாதலின் முறையே கூறினார். சிந்தை மாதர் - 'ஆழமாகிய சிந்தையை உடைய மாதர்', 'பல்வகைப்பட்ட சிந்தையை உடைய மாதர்' என்பனவும் ஆம்.

'எரிப்படும் பஞ்சு' என்றது ஒரு பயனும் பெறாது அழிந்தொழிதலைக் குறித்தது - இனற்படுந் தொந்தவாரி - 'துன்பத்திற்கிடமாகிய பற்றுதலாலுண்டாகிய பிறவிக்கடல்' என்பது பொருளாம். பிறவிக் கடலிற்பட்டு ஆசாபாசத்தால் இன்னல் அடையாதிருக்க இறைவன் திருவடிக் கமலமாகிய கலனைத் துணைக் கொண்டால் பிறவிக் கடல் கடந்து முத்திரைக்கரை ஏறுவர். இதனாலன்றோ.

*'பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்*
*இறைவனடி சேரா தார்'*

என்றார் திருக்குறளுடையாரும்.

*"சீறும் வினையது பெண்ணுரு வாகித் திரண்டுருண்டு*
*கூறு முலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினாற்*
*பீறு மலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்*
*டேறுங் கரைகண்டி லேனிறை வா! கச்சி ஏகம்பனே!"*

என்ற பட்டினத்தார் வாக்கும்,

*"மாதர்யம் னாமவர்தம் மைவிழியே வன்பாசம்*
*பீதிதரு மல்குல் பெருநரகம் - ஓதிலதில்*
*வீழ்ந்தோர்க்கும் ஏற விதியில்லைப் போரூரைத்*
*தாழ்ந்தோர்க்கும் இல்லை தவறு"*

என்ற திருப்போரூர்ச் சந்நிதிமுறைப் பாட்டும் ஒப்பிடத் தக்கது.

இசைத்திடுஞ் சந்தபேத மொலிந்திடுந் தண்டை சூழும் - 'புகழும் சந்த பேதங்களோடு கூடிய வேதத்தை இசைக்கும் சிலம் பணிந்துள்ள திருவடி' எனப் பொருளுரைப்பினும் ஆம்.

தேவர்க்கு இடுக்கண் செய்சூரரை அழிக்க அறிவாற்றலாகிய வேலைச் செலுத்திய முருகேசா! தேவர் துயர் நீங்கி அயர் நீங்கித் தமக்கு இடுக்கண் செய் அசுரரை வெல்ல உள்ளக் கிலி நீங்க, சங்க ஒலி செய் திருமால் மருகா! விருப்பாற்றலாகிய குறமான் கணவா! மாயந் தொடர்பால் துன்பேரும் அவாவால் வந்திடும் இந்தப் பிறவிக் கடலைத் தாண்டி முத்திக்கரை ஏற நின் திருமலர்த் தாளிணைத் தந்தருள் என்றது நுட்பம்.

சங்க ஒலியாற் கிலி போக்கி யாண்ட மாயன் மருமகன் நீயும் வேலாற் சுரர் கோலாகலம் அடக்கி அமரரைக் காத்தவன்

உலகிற்காக இச்சா சக்தியாகிய வள்ளியாரை மணந்த ஆறுமுகன், ஆகையால், என் துயர் போக்கி இன்பருளல் உனக்கொரு பாரமன்று இலேசாம் என்பது உள்ளக்கிடை.

7. தனன தந்த தத்தத்த தந்த
தனன தந்த தத்தத்த தந்த
தனன தந்த தத்தத்த தந்த - தனதான

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப்ப யின்று
கடையில்வந்து தித்துக்கு ழந்தை வடிவாகி

கழுவியங்கெ டுத்துச் சுரந்த
முலையருந்து விக்கக் கிடந்து
கதறியங்கை கொட்டித் தவழ்ந்து நடமாடி

அரைவடங்கள் கட்டிச்ச தங்கை
இடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவையணிந்து முற்றிக்கி ளர்ந்து வயதேறி

அரியபெண்கள் நட்பைப்பு ணர்ந்து
பிணி உழன்று சுற்றித்தி ரிந்த
தமையுமுன் கிரு பைச்சித்தம் என்று பெறுவேனோ

இரவி இந்த்ரன் வெற்றிக்கு ரங்கின்
அரசர் என்றும் ஒப்பற்ற வுந்தி
இறைவனெண்கி னக்கர்த்தன் என்றும் நெடுநீலன்

"எரியதென்றும் ருத்ரச்சி றந்த
அனுமன் என்றும் ஒப்பற்ற அண்டர்
எவருமிந்த வர்க்கத்தில் வந்து புனமேவ

அரியதன்ப டைக்கர்த்தர் என்று
அசுரர் தம்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே

அயனையும் புடைத்துச்சி னந்து
உலகமும்ப டைத்துப் பரிந்துள்
அருள்பரங்கி ரிக்குட் சிறந்த பெருமாளே.

கதிரவனும் இந்திரனும், வெற்றியோடு கூடிய குரங்குகளுக்கு, அரசர்களாகிய சுக்கிரீவன் வாலியென்றும், உவமையில்லாத, விண்டுவின் உந்தியினின்றும் பிறந்த தேவன், கரடியின் கூட்டங்களுக்குத் தலைவன் ஆகிய சாம்பவன் என்றும்; அக்னிக் கடவுள், புகழ்மிகுந்த நீலன் என்னும் சேனைத் தலைவன் என்றும், உருத்திரக் கடவுள், மேன்மை வாய்ந்த அனுமான் என்றும், இணை கூறுதற்கரிய தேவர்கள் எல்லோரும், இந்த வானரக் கூட்டத்திலே தோன்றி, புவியில் அடைய, அவர்களைத் தனது மிகச் சிறந்த சேனைகளுக்கு, படைத் தலைவர்களாகக் கொண்டு, அரக்கர்களுடைய, சுற்றத்தார்களின் கூட்டத்தைக் கொண்டு அழித்துவென்ற, நெடுமாலின், புகழ்ந்து கொண்டாடப் பெறும், சிறப்பினைக் கொண்டுள்ள, மருகனே! பிரமனையும், தலையில் குட்டி, சீற்றமுற்று உலகத்தையும் உண்டாக்கி, அதனை ஆதரவோடு காத்து, அருள் மிகுந்த திருப்பரங்கிரி என்னும் திருத்தலத்தில், சிறப்போடு எழுந்தருளி இருக்கும், பெருமானே! தாயாரின் கருப்பத்திற் பொருந்தி, பத்துமாதம் அளவும், தாயாரின் வயிற்றில் தங்கி யிருந்து, அங்கேயே முதிர்ந்து வளர்ந்து, பத்து மாதமும் முடிந்தபின் கடைசியாகத் தாயார் வயிற்றினின்றும் வெளிப்பட்டுப் பிறந்து, குழந்தை உருவத்தைப் பெற்று, அந்தக் குழந்தை உருவத்தைக் கழுவி அங்கேயே கையில் தாங்கி, பாலானது சுரந்து கொண்டிருக்கும் முலைகளை, ஊட்டுவிக்க, நிலத்திலே படுத்துக்

கிடந்து, வாய்விட்டுக் கதறி அழுது, உள்ளங்கையால் தட்டி, தவழ்ந்து தவழ்ந்து நடந்து, இடுப்பிற் கட்டும் கயிறுகளை கட்டிக்கொண்டு, சதங்கைகளோடு இன்னும் இடக் கூடியதாகிய குதம்பைகளும், பொன்னாற் செய்த சுட்டியும், தண்டை முதலியவைகளையும் பூண்டு, முதிர்ந்து மேலாக வளர்ந்து வாலிப வயதைப் பெற்று, விட்டு நீங்குதற்கு அருமையாகிய மாதர்களுடைய, நேயத்திலே கூடி, காதல் நோயினால் வருந்தி, மனம் ஒரு நிலை நில்லாது சுழன்று திரிந்தது. அடியேனுக்கு இனி போதும்; முருகக் கடவுளே! தேவரீருடைய திரு உள்ளக் கருணையினை, அடியேன் எந்நாளிற் கிடைக்கப் பெறுவேனோ, அறியேன்.

முற்றிப் பயின்று - வளர்ந்து பழகி தாய் வயிற்றிலிருந்தே இன்ப துன்பங்களை நுகர்ந்து பழகி, 'முதிர்ந்து வசித்து' என்னலும் ஆம். 'கழுவியங்கெடுத்து: குழந்தை தரையில் விழுந்ததும் நீரிட்டுக் கழுவியே பிறர் கையில் கொடுப்பர் மருத்துவச்சிகள், நீரிட்டுக் கழுவுவது தூய்மைக்கு மாத்திரமன்று; குழந்தையின் மூக்கையும், நலத்தையும் கருதியே. 'சுரந்தமுலை'; குழந்தை பிறந்ததும் தாய்க்குப் பால் சுரத்தல் உலகு இயற்கை.

தாய் வயிற்றுக் கருப்பாசயத்தில் வந்ததுமுதல் இவ் உலகைவிட்டு நீங்கும்வரை துன்பு தருவது ஆதலின், இப் பிறவித் துன்பினின்று நீங்கி முத்தி இன்பு அடைதற்கு உன் அருள் சித்தம் எப்பொழுது பெறுவேனோ? என்றார். இதனை,

*"கருப்பையிற் பல்நாள் கட்டிக் கிடந்து*
*நெருப்பில் வெந்து நீரில் நனைந்து*
*தாய்படு துயரெலாந் தானும் பெற்று*
*நோய்படு மண்டம் நுவலப் பயின்று*
*காற்று மொத்தக் கால்சிறு வழியால்*

*ஆற்ற அரிய அல்லலின் வந்து*
*குழவி பாலன் குமரன் விருத்தனென்*
*பழகுறு பருவப் படரெலாம் பட்டே*
*எமன் கைக்கே இரையாம் எற்குச்*
*சேமநின் கழலிணை சீரிதின் அருளி*
*உய்வித் திடுவது முண்டோ*
*மெய்ப்பொருள் மாறற்கருள் மேதரு குகனே"*

எனப் பின்னர் வந்த பெரியார் ஒருவர் பாடிய பாட்டானும் அறியலாம்.

தேவர்களெல்லாம் வானரத் தலைவர்களாகத் திருமால் தசரத புத்திரராகி வந்து இராவணனை வென்றார் என்பது இராமாயணக் கதை. இதனை,

*"வானுளோ ரனைவரும் வான ரங்களாய்க்*
*கானினும் வரையினுங் கடித டத்தினும்*
*சேனையோ டவதரித் திடுமின் என்னவே*
*ஆனை மலர்ந்தனன் அருளின் ஆழியான்"*

*"மசரத மனையவர் வரமும் வாழ்வுமோர்*
*நிசரத கணைகளால் நீறு செய்யலாம்*
*கசரத மாக்கடல் சூழுங் காவலன்*
*தசரதன் மதலையாய் வருதுந் தாரணி"*

என்ற கம்பர் கவிகளாலும் அறியலாம்.

'அரிமுகுந்தன்' இருபெய ரொட்டு; அரி - 'அடியவர் பாவங்களை அழிப்பவன்' என்பது பொருள்; முகுந்தன் - முத்திப் பதந்தருவோன்' என்பது பொருள். 'அயனையும்' என்றதில் உள்ள உம்மை உயர்வு சிறப்பு உம்மை.

படைத்தற் கடவுளைத் தண்டிக்கும் ஆற்றலோடு அத்தொழில் தடைபடாதபடி படைத்தற் தொழிலையுஞ் செய்த கருணை உடையோனாதலின், "பிறவி போதும்; பிறவாப் பேறாகிய முத்திப் பேறு எப்போது தந்தருள்வாய்" என்று வினாவினார் என்று அருளையே செய்பவன் ஆதலின், 'கிருபைச் சித்தம்' என்றார்.

'என்று பெறுவேனோ என்றதால், நின் கருணை விரைந்து யான் பெறமாட்டேனோ' என்பது.

8. தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன - தனதான

மன் றலங் கொந்துமிசை
தெந்தனந் தெந்ததென
வண்டினங் கண்டுதொடர் குழல்மாதர்

மண்டிடும் தொண்டயமு
துண்டுகொண்டு அன்புமிக
வம்பிடுங் கும்பகன் தனமார்பில்

ஒன்றஅம் பொன் றுவிழி
கன்றஅங் கங்குழைய
உந்திஎன் கின்றமடு விழுவேனை

உன்சிலம் புங்கனக
தண்டையும் கிண்கிணியும்
ஒண்கடம் பும்புனையும் அடிசேராய்;

பன் றியங் கொம்புகம
டம்புயம் கஞ்சுரர்கள்
பண்டைஎன் பங்கமணி பவர்சேயே!

பஞ்சரங் கொஞ்சுகிளி
வந்துவந்து ஐந்துகர
பண்டிதன் தம்பியெனும் வயலூரா!

சென்றமுன் குன்றவர்கள்
தந்தபெண் கொண்டுவளர்
செண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை

திங்களுஞ் செங்கதிரும்
அங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றில் உறை பெருமாளே!

பன்றியினது அழகிய பல்லையும் ஆமை ஓட்டையும், பாம்பினையும் தேவர்களின் பழமைப் பட்டதாகிய எலும்புகளையும், தன்னுடைய திருமேனியில் அணிந்து கொள்பவராகிய சிவபெருமானுக்கும், திருமகனே! கூட்டில் கொஞ்சிப் பேசுகின்ற கிள்ளைகள், பல்காலும் வந்து, ஐந்து கைகளையுடைய விநாயகக் கடவுளின், தம்பி என்னும் முறையால் அழைக்கப்பெறும், வயலூர் என்னும் அழகிய திருத்தலத்தை உடையவனே! தினைவிளையும் புனத்திற்குப் போய், முற்பட்ட குறிஞ்சி நிலத்தவராகிய குறவர்கள், தவத்தாற் பெற்றுக் கொடுத்த வள்ளி அம்மையாராகிய பெண்ணை, மனைவியாகும்படி திருமணம் செய்துகொண்ட, உயர்ந்து வளர்கின்ற, சண்பக மரங்களில் பசுமையாகிய பொன்போல் மலர்கள் மலரும்படியான, சண்பக மலர்கள் அடர்ந்த சோலையோடு விளங்குவதும், நிலவும் ஞாயிறும் முகிலும் தங்குகின்ற, உயர்ந்த தென்பாண்டி நாட்டிலுள்ள திருப்பரங்குன்றத்

திருத்தலத்தில் வீற்றிருக்கின்ற பெருமானே! மணமுடைய, அழகிய பூக்கொத்தின் மேலே, தெந்தனந் தெந்ததென என்னும் இசையோடு, தேனிக் கூட்டங்கள் தேனின் மணத்தைக் கொண்டு தொடர்கின்ற, கூந்தலையுடைய பெண்களின், நெருங்கியுள்ள கோவைக் கனிபோலும் இதழ் அமிழ்தத்தை உண்டு, காதல் பரவ இரவிக்கையை அணிந்துள்ள யானைத் தலையை ஒத்த, பாரமாகிய கொங்கைகளைச் சுமந்தொளிரும் மார்பிலே, படியவும், கணையை ஒத்த கண்கள் சோர, உடல் உருக, உந்தியாகிய மடுவில் விழுகின்றவனாகிய அடியேனை, தேவரீருடைய, திருவடிச் சிலம்புகளையும், பொன்னாற் செய்துள்ள தண்டைகளையும், கிண்கிணி என்கிற காலணியையும் பிரகாசத்தோடு விளங்கும் கடப்பமாலையும், அழகுற அணிந்து கொள்ளும் கந்தக் கடவுளே! உமது அழகிய பாதங்களிற் சேர்த்தருள் செய்வாயாக!

மன்றல் அம் கொந்து, மணமும் அழகையும் கொண்டுள்ள பூங்கொத்து, 'கொத்து' என்பது 'கொந்து' என்றானது மெலித்தல் விகாரம்; இது சந்த நோக்கி வந்தது. 'வண்டினம் - வண்டின் வகை' எனினும் ஆம். கும்ப கனதன மார்பு - குடத்தை ஒத்த கொங்கை' என்பாரும் உண்டு. உந்தி என்கின்ற மடு - 'தேர்த்தட்டை ஒத்த அல்குற்தடம்' என்பாரும் உண்டு.

நாராயணன் வராகாவதாரத்தில் செருக்குண்டு இருந்ததாகவும், அவர் செருக்கை அடக்கி அவர் பல்லாகிய கொம்பைப் பிடுங்கி மார்பில் அணிந்து கொண்டதாகவும் தொன்மம் கூறும்.

அவ்வாறே நாராயணன் கூர்மாவதாரத்தில் செருக்குற்ற காலத்து அவரைக் கொன்று அவர் ஓட்டைத் தான் ஈறில்லான்

என்பதை ஆன்மாக்கள் அறிந்து உய்தற் பொருட்டு அணிந்து கொண்டார் என்பதுவும் கதை.

'சுரர்கள் பண்டை என்பு' என்றது பிரமம் திருமால்களின் எலும்புகளை, இவ் எலும்புகளை அரன் அணிவதும் தன் ஈறில்லாமையை ஆன்மாக்கள் அறிந்து தன்னை வந்து அடைய வேண்டும் என்னுங் கருணையினாலேயாம். இதனை,

*"கண்டவிடம் நித்தியத்தைக் காட்டவுங்கங் காளமுதல்*
*அண்டவிடம் வைத்தனையே அம்புயஞ்செய் குற்றமென்ன"*

என்ற வாட்போக்கிக் கலம்பகத்தாலும் அறியலாம்.

விநாயகர்; ஔவை முதலியவர்களின் செந்தமிழ்ப் பாக்களைக் கேட்டு அருள் செய்பவர் ஆதலினாலும், ஒவ்வொருவர் நூலிலும் முதலிற் பாடப் பெறும் பாடல் சான்றவர் ஆதலினாலும் 'ஐந்துகர பண்டிதன்' என விநாயகரைக் கூறினமை காண்க.

உந்தித்தடத்து வீழ்ந்து முழுகி அழிவேற்கு நின் திருவடிகளாகிய புணை தந்து முத்திக்கரை சேர்ந்தருள் என்றதாம்.

★★★



## திருச்செந்தில்

9. தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன - தனதான

கமல மாதுடன் இந்திரை யும்சரி
சொல்வொ ணாதம டந்தையர் சந்தன
களபசீதள கொங்கையில் அங்கையில்
இருபோதேய்

களவு நூல்தெரி வஞ்சனை அஞ்சன
விழியில் மோகித கந்தசு சுந்தரும்
கரிய ஓதியில் இந்துமு கந்தனின் முருளாதே

அமல மாகிய சிந்தைஅ டைந்ததல்
தொலைவி லாதஅ றம்பொருள் இன்பமும்,
அடைய ஓதியு ணர்ந்துத ணந்தபின் அருள்தானே

அறியு மாறுபெ றும்படி அன்பினின்
இனிய நாதசி லம்பு புலம்பிடும்
அருண் ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்;

குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை அம்பிகை
குடிலை மோகினி சண்டினி குண்டலி எமதாயி

குறைவி லாள்உமை மந்திரி அந்திரி
வெகுவி தாகம சுந்தரி தந்தருள்
குமல மூசிக முந்திய ஐங்கர கணராயன்

நமவி நாயகன் நஞ்சுமிழ் கஞ்சுகி
அணிக சானன விம்பனோர் அம்புலி
மவுலி யான்உறு சிந்தைஉ கந்தருள்இளையோனே!

வளரும் வாழையும் மஞ்சளும் இஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே!

கெடாததாகிய கன்னிப் பருவத்தை உடையவளும் கருப்புநிற முடைமையாற் காளி என்னுந் திருநாமத்தை உடையவளும், பாவிகளுக்கு அச்சத்தைத் தருகின்றவளும், அனைத்துயிர் கோடிகளுக்கும் இன்பத்தைச் செய்தருள்பவளும், பச்சை நிறத்தாற் கவுரி என்னுந் திருநாமம் பூண்டிருப்பவளும், நீல நிறத்தோடு விளங்கி துர்க்கை எனப் பெயர் பூண்டிருப்பவளும், தனக்கு மேல் உயர்வின்றித் தானேதாய் உயர்ந்திருப்பவளும், எல்லா உலகங்களுக்கும் தாயாய் விளங்குபவளும், மூல மந்திரமாகிய குண்டலி ஆற்றலாய் விளங்குபவளும், மாயாரூபியும், சண்டன் என்பவனை வதைத்தவளும், கடைப்பட்ட எம்மனோர்க்கும் அன்னையாய் இருப்பவளும், எந்தவிதமான குறைவும் இல்லாது நிறைவாக நிற்பவளும், உமாதேவி என்னும் திருநாமம் பூண்டுள்ளவளும், மந்திர வடிவமாக விளங்குபவளும், விண்ணில் வசிப்பவளும், பற்பல வகைப்பட்டதாகிய ஆகமங்களிலேயும், புகழ்ந்து கூறப்பெறும் அழகை உடையவளுமாகிய மலைமகள் தேவி, பெற்றருளிய அழகிய புத்திரனே! பெருச்சாளியை வாகனமாக ஏறிச் செலுத்திய ஐந்து கைகளைக் கொண்டுள்ள கணாதிபதியும், நம்முடைய விநாயகக் கடவுளும், அழகிய களிற்றின் முகத்தை உடையவரும் ஆன கணேசப் பெருமானுக்கும், விடத்தைக் கக்குகின்ற பாம்பை அணிந்தருள்பவனுமாகிய, பிறை சூடியுள்ள விரிசடை பாரத்தையுடைய சிவபெருமானும், மேலான



தம்முடைய உள்ளத்தில் விரும்பியருளிய, முருகக் கடவுளே! வளரும் இயல்புடையதாகிய வாழை மரமும், மஞ்சட் செடியும் இஞ்சிச் செடியும் சிறிதும் வெற்றிடம் விடாது நெருங்கி விளைந்துள்ள, அழகிய விளக்கம் பெற்ற, பெருமையையுடைய, திருவருள் பெற்ற சிறந்த நகரமாகிய திருச்செந்தூரில் வந்து வீற்றிருந்தருளும், முருகப் பெருமானே! செந்தாமரை மலரில் வசிக்கும் திருமகளோடு, இந்திராணியும், ஒப்புச் சொல்ல முடியாத, பெண்களது சந்தனத்தையும் கலவைச் சாந்தையும் பூசியுள்ள குளிர்ச்சியாகிய முலைகளினாலே, அழகிய கைகளினாலே இரண்டு நீலோற்பலங்களை ஒத்த, காமக் களவைப் பற்றிச் சொல்லும் நூலைத் தெரிந்த, கபடம் பொலியும், மைதீட்டிய கண்களினாலே, காம மயக்கத்தைத் தரும்படியான நறுமணம் வீசி இன்பந்தருவதாகிய, கருமை நிறம் பொருந்திய குழலினாலே நிலவுக்கு நிகரான முகத்தினாலே மயங்காதபடி தூய்மையான மனத்தைப்பெற்று, விரிந்த, அழிவு இல்லாத, அறத்தையும் பொருளையும் இன்பத்தையும் பெறுதற்கு, படித்துக் கற்றுத் தேர்ந்து அறிந்து, கற்பன முற்றுப் பெற்றமையால் இனிக் கற்பன இன்றிக் கற்றலினின்றும், நீங்கிய பிற்பாடு திருவருளை, அறியும்படியான ஞான வழியை அடியேன் அடையும்படி, அன்பினாலே இன்புறச் செய்யும் ஓசையைக் கொண்டுள்ள, சிலம்பு புலம்பிடும், சிலம்பணிகள் ஒலிக்கும்படியாகிய, செம்பொன்னாலாகிய, கிண்கிணி பொருந்தியுள்ள முருகக் கடவுளே! தேவரீரது திருவடி மலர்களை அருள் செய்வீராக!

மோகினி - மாயா ரூபியும் இறைவனையும் மயக்குபவள் ஆதலின் - 'மோகினி' என்றார். சண்டினி - 'சண்டன் என்பவனை வதைத்தவள்' என்பது பொருள். மந்திரி - 'இனிய மந்த சாந்த குரலை உடையவள்' எனப் பொருள் உரைத்தலும் ஆம். ஆகம சுந்தரி - ஆகம வடிவையும், 'சுந்தர வடிவையும் உடையவள்'

எனப் பொருள் கோடலும் உண்டு. விநாயகரைத் தேவி பெற்றதனால் 'சுந்தரி தந்தருள்' என்றார். முருகப் பிரான் உமையாரின் நோக்கால் சிவபெருமான் நுதல்விழி வந்தவராதலின், 'இறைவர் சேய்' என்ப்ர். இளையோன் - என்றும் முதிராத இளமைத் திருக்கோலம் உடையவர். செல்வம் மிகுந்து மங்கலப் பெருமையுடையதாதலின், 'மங்கல மகிமை மாநகர்' என்றார்.

இறைவி ஞானசக்தி முதல் ஏனைய சத்தியாய் விளங்குபவள் ஆதலினாலும், விநாயகர் பிரணவரூபர் ஆதலினாலும், பரமசிவன் மோகத்தை முனிந்து நின்ற பரமயோகி யாதலினாலும், அவர்களது சம்பந்தத்தோடு அவர்கள் சிந்தைக்கு உகந்து அருள் புரிபவனாதலினாலும், அம்மூவரின் அபேதமாய் நின்றொளிர்பவன் முருகன் ஆதலினாலும், ஞானம்தர வல்லவன், மருள் போக்கக்கூடியவன் என்பது குறிப்பித்ததாயிற்று.

* * *

10. தனனதன தந்த தந்தன
தனனதன தந்த தந்தன
தனனதன தந்த தந்தன - தனதான.

இருகுழை எறிந்த கெண்டைகள்
ஒருகுமிழ் அடர்ந்து வந்திட
இணைசிலை நெரிந்தெ ழுந்திட அணைமீதே

இருள் அளக பந்தி வந்தியின்
இருகயையுடன் குலைந்திட
இதழ் அமுதருந்து சிங்கியின் மனமாய

முருகொடுக லந்த சந்தன
அளறுபடு குங்கு மங்கமழ்
முலைமுகடு கொண்டெ ழுந்தொறு முருகார

முழுமதிபு ரிந்த சிந்துர
அரிவைய ருடன்க லந்திடும்
அறிவிலன்ந லம்பி றத்திட அருள்வாயே;

எரிவிடநி மிர்ந்த குஞ்சியின்
நிலமொடுமெ ழுந்த கங்கையும்
இதழியொடு அணிந்த சங்கரர் களிகூரும்

இமவரைத ருங்க ருங்குயில்
மரகதநி றந்த ருங்கிளி
எனதுயிர் எனுந்த்ரி யம்பிகை பெருவாழ்வே!

அரைவடம் அலம்பு கிண்கிணி
பரிபுரநெ ருங்கு தண்டைகள்
அணிமணிச தங்கை கொஞ்சிட மயில்மீதே

அகமகிழ்வு கொண்டு சந்ததம்
வருகுமர! முன்றி லின்புறம்
அலைபொருத செந்தில் தங்கிய பெருமாளே!

நெருப்பைப்போல் ஒளிவிட, ஓங்கி வளர்ந்திருக்கின்ற முடியில், மூன்றாம் பிறையுடனே ஆரவாரத்துடன் வந்த, கங்கா நதியையும், கொன்றை மாலையுடனே அணிந்து கொண்டிருக்கின்ற சிவபெருமான், மகிழ்ச்சியை மிகக் கொள்ளும், பனிமலை அரசன் மகளாகப் பெற்ற கரிய குயிலைப் போன்றவரும், பசுமை நிறத்தை உடைய கிள்ளையைப் போன்றவரும் எனது உயிரே என்று கூறப்படும் முக்கண்களை உடையவளுமாகிய உமாதேவியாரது, பெரிய வாழ்வை ஒத்த

திருமகனே! இடையில் அணியும் மாலையும், ஒலி செய்கின்ற கிண்கிணி மணியும், சிலம்புரம், நெருங்கியுள்ள தண்டைகளும், அழகிய மணிகளால் ஆகிய சதங்கையும், மிழற்றும்படி, மயிலின் மேல், உள்ளக் களிப்போடு, எப்பொழுதும் வருகின்ற குமரக் கடவுளே! திரு ஆலயத்தின் முன் வாயிலிலே, அலைகள் மோதுகின்ற திருசெந்தூர் என்னும் அழகிய பதியில் வீற்றிருந் தருள்கின்ற பெருமானே! காதணிகளாகிய இரண்டு குண்டலங்கயையும், தாக்கி மோதும் கெண்டை மீன் போலும் கண்கள், ஒப்பற்ற குமிழமலரை ஒத்த நாசியை நெருங்கி வரவும் இரண்டு வில்லையொத்த புருவங்களும் நெரிப்புக் கொண்டு உயர்ந்து தோன்றவும், பஞ்சணையின் மேலே கருத்த இருளை ஒத்த கூந்தலின் வரிசை, வஞ்சிக் கொடியைப்போன்ற அரையிலே, தரித்திருக்கும் பெரிய ஆடையுடனே அவிழ்ந்து கோரவும் அதரபானத்தை பருகிச் சுவைக்கின்ற நாக்கினால் நெஞ்சு அவசமாகவும், வாசனையோடு சேர்த்த சந்தனக் குழம்பும் சேறாகவுள்ள குங்குமம் பரிமளிக்கின்ற முலைகளின் உச்சியைப்பற்றி, எழும்போதெல்லாம், நறுமணத்தை நுகருமாறு, உவாமதியை ஒத்த அழகிய முகத்திலே நல்ல மணமிகு சிந்தூரத் திலகத்தை விரும்பி அணிந்துள்ள மாதர்களுடன் கூடி வாழும் மூடனாகிய அடியேனுக்கு அறிவு நன்மை உண்டாகும்படி, திரு. அருளைச் செய்வாயாக.

குழை - காதணி, காதளவு நீண்டு பரந்த கண்ணார் ஆதலின் இருகுழை யெறிந்த கெண்டைகள்' என்றார்.

இதனை,

*"கெண்டைவிழி"*

*"காதள வோடிய கலகக் கண்ணார்"*

என்றார் பிறரும். நாசி குமிழமலரை ஒத்திருத்தலின், 'ஒரு குமிழடர்ந்து வந்திட' என்றார்.

இணை சிலை - இரட்டைவில் போலும் புருவங்கள்; சிலைபோலிருத்தலின் புருவத்தைச் 'சிலை' என்றார்; இது உருவகம். இதழமுதருந்து சிங்கி - அதரபானம் செய்யும் நாக்கு. 'சிங்குவை' என்றது 'சிங்கினை' என மருவி நின்றது. மாதரின் இதழமுது காளையரால் விரும்பப் பெறுவதொன்றாம் என்பது.

*"பருகோட்ட நறைவேட்டுத் பைங்கோட்டுத்*
*திணைப்புனத்திற் பரண்மேற் கொண்ட*
*குருகோட்டும் பெடைமணந்த குமரகோட்*
*டத்தடிகள் குலத்தாள் போற்றி"*

என்ற காஞ்சிப் புராண அடிகளால் அறியலாம். முலை முகடு - 'முலையாகிய உச்சி' என்றும் பொருள். 'அரிவை' பருவப் பெயர் அதனை உடைய பெண்களுக் காயிற்று.

*'அருந்திணைப் போதே அவரின்பம்'*

என்றதையும்

*"சின்னீரவின்பம் பிற்பயக்கும் பீழை பெரிது, புறம்"*

என்பதை அறிந்து அழியாத உயர்ந்த பேரின்பம் எய்த முயலாமையால், 'அறிவிலன்' என்றார். அடியேன் அறியாமை நீங்கவும் அறிவு நலம் பெறவும் நின் திருவருள் வேண்டுமாதலின், 'அருள்வாயே' என்றுங் கூறினார்.

எரிவிட நிமிர்ந்த குஞ்சி 'எரிகின்ற நஞ்சு' ஓங்கிய சடை, என்பாரும் உண்டு; ஈண்டு, 'விடம்' என்றது நஞ்சினையுடைய அரவு பூண்டமையாற் போலும்; (எரி+விட) எனப் பிரித்து, 'நெருப்பைப்போல் ஒளி விட்டுக் கொண்டிருக்குமாறு ஓங்கிய சடை' என்றாம்.

*"மின்னார் செஞ்சடை," "எரிநிகர் செஞ்சடை"*
*"பொன்னார் செஞ்சடை"*

எனப் பிறருங் கூறியமை காண்க. கங்கையைச் சடையில் அணிந்தது பகீரதன் தவத்திற்கு உவந்து கங்கையின் வீறு அடங்க என்பது கதை.

இதழி ஓங்காரவடிவமாக இருத்தலினால், தாம் பிரணவப் பொருள் என்பதை ஆன்மாக்கள் அறிந்து தம்மை வழிபட்டு உய்ய வேண்டும் என்னும் கருணை பற்றியே. இதழி - கொன்றை. சிவ பெருமான் உயிர்களுக்கு இன்பம் அருளுவோன் ஆதலின் 'சங்கரன்' என்னும் திருநாமம் உண்டாயிற்று. இதனை,

*"இன்பஞ் செய்தலிற் சங்கரன்"*

என்றதானும் அறியலாம்

இமவரை - பனி மலை; பார்வதி பனிமலை பயந்த பாவை யாதலின், 'இமவரை தருங் கருங்குயில்' என்றார்.

குரல் இனிமையாலும் நிறத்தாலும் குயில் அம்பிகைக்கு உவமம் ஆயிற்று. தேவியார் பசுமை நிறமுடைமையானும் அழகுடைமையானும், உயிர்கட்கு இன்பம் பயக்கும் இதந்தரு சொற்களை மிழற்றி உயிர்களை உய்வித்தலானும், 'மரகத நிறந்தருங் கிளி' என்றார். நாதப் பிரமமாக விளங்கும் இறைவரும் இன்புற இசைக்கும் மிழற்றும் பெற்றியன் ஆதலின் உமாதேவியரைக் 'குயில்' என்றும், 'கிள்ளை' என்றுங் கூறினர். எனினும் பொருந்தும் எல்லா உயிர்களுக்கும் உயிராக இருந்து இயக்குபவள் ஆதலின், 'எனது உயிர்' என்றார்.

இறைவனைப் போலவே இறைவிக்கும் முக்கண் உடைமையால், 'திரியம்பிகை' என்றார்; அம்பகம் - கண். 'பெருவாழ்வு' என்றது பெருஞ் செல்வத்தை, செல்வம் இன்றேல் வாழ்வு இல்லை யாதலின்,

*"அருளில்லார்க் கவ்வுலக மில்லை, பொருளில்லார்க்*
*கிவ்வுலக மில்லா கியாங்கு"*

என்ற திருக்குறளாலும் அறியலாம். மக்களே செல்வம் எனப்படுவர்; மக்கள் செல்வத்தினுஞ் சிறந்தவராவர். இதனான் அன்றோ,

*"தம் பொருள் என்ப தம்மக்கள்"*

எனவும்,

*"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த*
*மக்கட்பே றல்ல பிற"*

எனவும் திருக்குறளாரும்,

*"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்*
*றென்னையுடைய ரேனும் உடையரோ – இன்னடிசில்*
*புக்களையுந் தாமரைக்கை பூநாறுஞ் செய்யவாய்*
*மக்களையிங் கில்லா தவர்"*

எனப் புகழேந்தியாரும் புகன்றனர்.

இச் செய்யுளால் பராசத்தியார்க்குப் புத்திரச் செல்வமாகி அவர்க்கு மகழ்ச்சி தரும் முருகக் கடவுளே! அறியாமையால் உலகில் மயங்கிக் கிடக்கும் என்னை மீட்டு உள் தாளதுணை சேரும் நன் அறிவு தந்தருள் என வேண்டின ராயிற்று.

11. தந்த தானன தானன தந்த தானன தானன
தந்த தானன தானன – தனதான

வெம்ச ரோருக மோகடு நஞ்ச மோ, கய லோ, நெடு
விள்ப சாகர மோ, வடு வகிரோ, முன்

வெந்து போன்பு ராதன சம்பராரிபு ராரியை
வென்ற சாயக மோகரு விளையோ, கண்

தஞ்ச மோ, யம தூதுவர் நெஞ்ச மோ, என மாமத
சங்க மாதர்ப் யோதர மிகமூழ்கி

சங்கையோ இரு கூதள கந்த மாலிகை தோய்தரு
தண்டை சேர்கழல் ஈவதம் ஒருநாளே;

பஞ்ச பாதக தாருக கண்டன் நிறுஎழ வானவர்
பண்டுபோல் அம்ராபதி குடியேறப்

பங்க யாசனர் கேசவ ரஞ்ச லேயென மால்வரை
பங்கம்நீறுஎழ வேல்விடும் இளையோனே!

செஞ்ச டாட்வி மீமிசை கங்கை மாமதி தாதகி
திங்கள் சூடிய நாயகர் பெருவாழ்வே!

செண்ப காடவி நீடிய துங்க மாமதில் சூழ்தரு
செந்தில் மாநகர் மேவிய பெருமாளே.

பஞ்சமகா பாதகங்களைச் செய்து வந்தவனாகிய தாருகாசுரன் அழிவெய்தவும், தேவர்கள் முன்போலவே பொன்னுலகத்திற் குடி புகவும், பிரமன் திருமாலும் தஞ்சமென்று சொல்லி குறை இரந்து வேண்டவும், பெரிதாகிய கிரௌஞ்ச மலையை சிதைந்து கெட்டுச் சாம்பராகவும், வேலாயுதத்தைச் செலுத்தும் இளமைக் கோலம் வாய்ந்த முருகப்பெருமானே! சிவந்த சடையாகிய கானின் மேலே, கங்கை நீரையும், சீரியதாக மதிக்கப்பெறும் ஆத்தி மாலையையும் பிறையும் அணிந்துள்ள இறைவரது பெரிய செல்வமே! சண்பகக்காடு, சிறந்து மிகுந்து விளங்கும், உயர்ந்த பெரிய மதில்கள், நெருங்கியுள்ள திருச்செந்தூர் என்னும் பெரிய திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள, பெருமானே! விரும்பத்தக்க தாமரை மலரோ மிகக் கொடிய

ஆலகால விடமோ, மீனோ, நீண்ட இன்பக் கடலோ, மாம்பிஞ்சின் பிளவோ, முன்னொருகால் வெந்தழிந்த, பழைய, நகைத்தெரித்த சிவபெருமான், வெற்றிகொண்ட அம்போ, கருவிளை மலரோ, கண்கள் தஞ்சமோ, யம தூதுவர்களுடைய மனமோ, என்ற சொல்லும், மிக்க மதம் பொருந்திய, சங்கு வளையல்களை அணிந்துள்ள பெண்களின், முலைகளில் மிகவும் முழுகுகின்ற பயம், கெட பெரிய கூதளத்தாலாகிய மணம் பொருந்திய மாலை, பொருந்தியுள்ள, தண்டை அணிந்துள்ள தேவரீரது அழகிய திருவடிகளைத் தந்தருள்வதும், எந்த நாளோ?

*'வெஞ்சரோருகம்:' வெம்மை + சரோருகம்.*

*"வெம்மை வேண்டல்"*

என்ற தொல்காப்பியத்தால் 'விரும்பத்தக்க தாமரை என்று பொருள் உரைத்தாம். சரோருகம் - தாமரை; இது வடசொல். 'வடு' என்றது மாவடுவை, வகில் - வகிர்க்கப்பட்டது; வகிர்த்தல் - விளத்தல். சம்பராரி - மன்மதன்: சம்புவினால் (சிவபிரானால்) அழிக்கப்பட்டவன் என்பது பொருளாம். சாயகம் – 'வடசொல்' என்பர் வடநூலார்; தமிழ்மொழியாகக் கொண்டு 'உடல் உள்ளே புகுந்து உயிரைப் போக்கி உடலை அழிப்பது' என்பது பொருள். 'சம்பராரியைப் புராரி வென்ற சாயகம்' என்றதில் சிவபெருமான் நெற்றிக் கண்ணால் மதனை எரித்திருக்கச் சாயகத்தால் வென்றது என்றது கவி மரபு. நெற்றிக் கண்ணாகிய அம்போ எனினும் ஆம். 'சத்துருக்களின் ஆணவத்தை அடக்குவது' என்பது பொருளாம். கருவிளை - கண்ணுக்கு உவமையாக எடுத்தோதப்பெறும் ஒருவகை மலர்.

*"கடலைக் கறுவிக் கயலைச் செருவிப்*
*படபொற் பிணையைப் படவித் - தடமற்*
*குவளைக் ககலக் குலமுற் றமுதைத்*

*திவளச் சிதறிச் செறுவிக் – கவலைச்*
*சுரும்பைப் பழிப்பித்துச் சுத்தவே லொத்துப்*
*பெரும்பொற் குழையைப் பிடித்துத் - திரும்பிக்*
*கொலைபழகிச் செம்பொற் குமிழ்சிகரக் காமன்*
*கலையுடைவு மந்நிலையே கற்று - நிலையிற்*
*கருகிவெளுத் துச்சிவந்து கற்றோ ருளத்தைப்*
*பருகியமு துங்கடுவும் பாய்ந்து - திருகிக்*
*குளிர்ந்து வடுவகிரை வென்று கிளர்ந்துசெயங்*
*கொண்டுபெருங் கூற்றின் குருபீட மாயுலகிற்*
*கண்டவரைச் சட்டையிடுங் கண்ணினாள்"*

என்ற காளமேகத்தின் வாக்குக் கவனிக்கற்பாலது.

'தஞ்சமோ' என்பதை 'நஞ்சமோ' எனப் பாடம் ஓதுவர். அப்போழ்து மோனை அழகு சிந்துதல் அறிக. தஞ்சமோ - 'துன்பம் நீங்கி இன்பம் பெறுதற்குத் தஞ்சமாகக் கருதப்படுவதொன்றோ' என்பது பொருளாம்.

'மாதர்' என்பது பெண்கள்; 'காதலை உண்டாக்குபவர்', என்னுங் காரணத்து;

"மாதர் காதல்" என்னும் தொல்காப்பியத்தாலும் அறியலாம். பஞ்சபாதகம் - ஐவகைக் குற்றம்; அவை: பொய், கொலை, களவு, கள், காமம் என்பவனாம். அமராவதி - தேவரூர். பங்கயாசனர் - பிரமன்; 'திருமாலின் உந்தியந் தாமரையில் உதித்தவன்' என்பது பொருள். கேசவர் - திருமால்; அழகிய கேசத்தை (கூந்தலை) உடையவர் என்பது பொருள். 'சடாடவி' வடமொழிச் சந்தி; சடையாகிய காடு என்பது பொருள். மீமிசை - 'மிக உயர்ந்த இடத்தில்' என்னும் பொருள்; இவை ஒரு பொருட் பன்மொழி. "மாதவி தாதகி" என்பதற்கு, "மாட்சிமை பெற்ற நிலவினையும் ஆத்தி மாலையையும்' எனப் பொருளுரைத்தார் சிலர். இது

பொருந்தாது. ஏனெனில் பின்னால் பக்கத்தே 'திங்கள் சூடிய நாயகர்' என்கின்றாராதலின் அவ்வாறு கூறின் "கூறியது கூறல்" என்னுங் குற்றமும் ஆம். முன்னைப் பாட்டில், 'திரியம்பிகை பெரும் வாழ்வே' என்றார். இந்தப் பாட்டில், 'திங்கள் சூடிய நாயகர் பெரு வாழ்வே' என்றார். பெற்றோர்க்குப் பிள்ளைகளே பெருஞ் செல்வம் என்பதாம்.

*"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கல நன்மக்கட் பேறு"*

என்றார் வள்ளுவரும். கடலலைக்கு அசையாது ஓங்கி நிற்றலின் 'துங்கமாமதில்' என்றார். மேவல் - விரும்பி அமர்தல்.

"பெண்கள் மாயையில் மூழ்கிக் கெட்டழியாது நின் திருமலர்த்தாள் தந்து ஆண்டருள்வது எந்த நாளோ" என்பது கருத்தாம்.

12. தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன - தனதான

**களபம் ஒழுகிய புளகித முலையினர்**
**கடுவும் அமிர்தமும் விரவிய விழியினர்**
**கழுவு சரிபுழுகு ஒழுகிய குழலினர் எவரோடும்**
**கலகம் இடுகயல் எறிகுழை விரகியர்**
**பொருளில் இளைஞரை வழிகொடு மொழிகொடு**
**தளர விடுபவர் தெருவினில் எவரையும் நகையாடி**
**பிளவு பெறில் அதில் அளவளவு ஒழுகியர்**
**நடையில் உடையினில் அழகொடு திரிபவர்**
**பெருகு பொருள் பெறில் அமளியில் இதமொடு**
**குழைவோடே**

பிணமும் அணைபவர் வெறிதரு புனல் உணும்
அவச வனிதையர் முடுகொடு மணைபவர்
பெருமை உடையவர் உறவினை விடவருள்
புரிவாயே;

அளையில் உறைபுலி பெறுமுக வயிறரு
பசுவின் நிரைமுலை அமுதுண நிரைமகள்
வசவ னொடுபுலி முலையுண மலையுடன்
உருகாநீள்

அடவி தனில்உள உலவைகள் தளிவிட
மருள மதகொடு களிறுகள் பிடியுடன்
அகல வெளியுயர் பறவைக ணிலம்வர
விரல்சேரேழ்

தொளைகள் விடுகழை விரல்முறை தடவிய
இசைகள் பலபல தொனிதரு கருமுகில்
சுருதி யுடையவன் கொடியவன் மனமகிழ்
மருகோனே!

துணைவ! குணதர! சரவண! பவ! நம
முருக! குருபர! வளர்அறு முக! குக!
துறையில் அலைஎறி திருநகர் உறைதரு
பெருமாளே.

குகையில், வசித்துக் கொண்டிருக்கும் புலி பெற்ற குட்டி, புல்லையும் நீரையும் உண்ணும் பசுவினது, முலைகளினின்றும் வழிந்தொழுகும் பாலைக் குடிக்க, பசுவின் பெண் கன்ர, ஆண் கன்றுடன், புலியினுடைய முலையிலுள்ள பாலை ஊட்டிக் குடிக்க, மலையோடு உருகுகின்ற நீளமாகிய காட்டினிடத்தே, உள்ளவனாகிய மரங்கள், தளிர்த்து இருக்க, ஆண் யானைகள், பெட்டை யானைகளோடு மதம் பெருகி மயங்க, அகன்று பரவிய

ஆகாயத்தின் கண், உயரப் பறக்கின்ற பறவைகள் மண்ணிலே வர, விரலைச் சேர்க்கின்ற ஏழு துளைகள் செய்துள்ள புல்லாங்குழலை, விரலால் முறையாகத் தடவப்பெற்ற, பல் வகையாகிய பண்கள், இசைத்து ஒலிக்கின்ற கருத்த மேகம் போலும் திருமேனியை உடையவனும், வேதங்களால் துதிக்கப் பெறுபவனும் உலகமுகடு அளாவ நீண்டவனும் ஆகிய திருமால், மன மகிழ்ச்சி அடைதற்கு உரிய மருமகனே! எல்லார்க்கும் அருள் செய்து துணையாய் இருப்பவனே! நற்குணங்களை உடையவனே! சரவணப் பொய்கையில் உதித்தவனே! யாவரும் வணங்கத் தகுந்த முருகக் கடவுளே! மேன்மை பொருந்திய குருவாக இருப்பவனே!, ஊழி ஊழிதோறும் அழகொடு வளர்கின்ற ஆறு திருமுகங்களை உடையவனே! குகன் என்னுந் திருநாமம் பூண்டவனே! துறையிலே திரை வீசி எறியப் பெற்ற, அழகிய திருச்செந்தூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்து அருளும் பெருமானே! களப கத்தூரிச் சாந்து பூசி வழியும் பூரித்த பாரித்த முலைகளை உடையவரும், நஞ்சும் அமிழ்தமும் கலந்த கண்களை உடையவரும், நீர் தயிலம் முதலிய இட்டுக் கழுவி நல்ல மயிர்ச் சாந்து முதலிய தடவி அவை வழி தரு கூந்தலையுடையவரும், எப்படிப்பட்டவர்களோடும் காமக் கலக்கத்தைச் செய்யும், கயல் மீனை ஒத்த கண்களால் எறியப்படும் குழை என்னும் காதணிகளையுடைய தந்திரக்காரரும், கைப்பொருள் இல்லாத வாலிபர்களை, தந்திர வழியைக் கொண்டு நடந்தும், பலவிதமாகிய சொற்களைக் கொண்டு பேசியும் தம்மை விட்டுப் பிரிந்து போகும்படி விடுகின்றவரும், தெருவழிகளிலேயே எப்படிப்பட்டவர் களிடத்தும் புன்னகை செய்து, அதனால் அவர்கள் மனம் பிளவுபட்டால், அளவு ஒழுகியர், அதைக் கொண்டு அவர்கள் ஆசைக்கும் அவர்கள் தரும் பொருளுக்கும் தக்கதாக நடந்து கொள்பவரும், நடையினாலும் உடையினாலும், அழகுடனே

உலாவித் திரிகின்றவரும், அதிகப் பொருளைத் தாம் பெற்றால், பஞ்சணைப் படுக்கையில், நயமாகவும் இளக்கமாகவும், பிணைத்தையுந் தழுவுகின்றவரும், உமிழும் எச்சிலையும், உண்ணும்படியான தன் வசமற்றவருமாகிய விலை மாதரை, ஆத்திரத்தோடு சென்று புணர்கின்றவர்களாகிய, இகழ்ச்சியை உடையவர்களின், நட்பினை விட்டு நீங்குமாறு அருள் செய்வாயாக.

புளகித முலை - பூரித்துப் பாரிக்கும் முலை; இது இதன் இயற்கை.

*"வாரிட்டு விம்மிப் புடைத்திறுகி யிளகிமணி*
*மார்பிட மெலாங் கவர்ந்து*
*வட்டமிட் டடியிட்டு நாளுக்கு நாண்மேல்*
*வளர்ந்து பூரித்து *** தான்*
*சீரிட்டு நின்றுதந் தலைவணங் காமற்*
*றிரண்பூண் முலைகள்"*

என்ற சுப்பிரமணியப் புலவர் வாக்காலும் அறிக.

'கடுவும் அமிர்தமும் விரவிய விழியினர்' என்றது காளையர்க்குத் துன்பஞ் செய்யும் நோக்கும் இன்பஞ் செய்யும் நோக்கும் உடையவர் ஆதலின், இதனை,

*"பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும்*
*பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே"*

என்ற திருக்கோவையாரானும் உணரலாம். பொருளுடையவர் எத்தகைய இழிந்தோர் ஆயினும் அவரோடு கூடி அவர் பொருளைக் கவர்ந் தொழிப்பர்; பொருளில்லார் எவ்வளவு உயர்வுடையோராயினும் அவர்களை விட்டு அகல்வர். இதுவே விலைமாதர் இயற்கை.

*"ஆணமில் நெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குக்*
*காரண மில்லாதால் கடுவனையர் – காணவே*
*செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையார்*
*அக்கார மன்னா ரவர்க்கு"*

என்னும் நாலடியாரினாலும் உணரலாம். 'பிணமும் அணைபவர்' என்றதில் உள்ள உம்மை இழிவு சிறப்பும்மை. 'பெருமை உடையவர்' என்பது பிறிது நவிற்சி.

*"தீயாரைக் காண்பதுவுந் தீதே*
*திருவற்ற *** அவரோ*
*டிணங்கி இருப்பதுவும் தீது"*

என்றதனால் 'பெருமை உடையவர் உறவினை விட அருள் புரிவாயே' என்றார்.

புலிக்குட்டி பசுமுலை உண்ணவும், பசுங் கன்றுகள் புலி முலை உண்ணவும், மலை உருகவும், பட்டமரந் தளிர்க்கவும், மதயானையும் பிடியும் மதங்கொண்டு ம்முழங்கவும், விண்ணிற் பறக்கும் பறவைகளும் மண்ணில் இறங்கி வரவும், குழல்வாய் வைத்தூதும் திருமால் மருகனே என்றார். இதில் குழல் இசையின் சிறப்புக் கூறினார்.

"கல்லும் உருகக் கனலும் புனலாக" எனவும், "பட்டமரம் தழைய" எனவும், "சித்திரமுங் கூடச் சிரமசைக்க", எனவும் பிறர் கூறியமையுங் காண்க.

'நெடியவன்' என்றது வாமனாவதாரத்தில் திருமால் நீண்ட உருவம் பூண்டதை உணர்த்திற்று. துணைவ - அனைத்து உயிர்களுக்கும் முத்திப் பேறடைவதற்குத் துணையாக நிற்பவன், குணதர - மங்கலக் குணங்களைப் பூண்டுள்ளவன், எண் குணங்களைப் பூண்டுள்ளோன் எனினும் பொருந்தும். சரவணபவ - 'கங்கையின் கண் உள்ள நாணல் மடுவில் அவதரித்தவன்'

என்பது பொருள். நம் 'எல்லாராலும் வணங்கப் பெறும் பெருமையை உடையவனே!' என்பதாம். முருக 'அழகை உடையவனே! என்பது பொருள். குருபர - 'உயர்ந்த ஆசானாக விளங்குபவனே! என்றும், 'பரனுக்கும் குருவாக விளங்கி நின்றவனே!' என்றும் பொருள் தரும். வளர் அறுமுக - 'அழகும் அருளும் வளரும் ஆறு திருமுகங்களை உடையவனே! என்பது பொருள். குக - அடியார் உள்ளக் குகையில் உறைபவனே! இவை அனைத்தும் அண்மை விளிகள்.

'துறையில் அலை எறி திருநகர் உறைதரு பெருமாளே' என்றதில் "தன்னிடத்தே சார்ந்தார்க்குப் பிறப்பாகிய அலைச்சலைச் சுழித்தெறியும் அழகிய நகராகிய திருச்செந்தூர் எனவும் பொருள்பட நின்றது" என்பர் ஒரு பிறர்.

குழலோசையாலேயே செயற்கு அரியன செய்பவனும், வேதங்களால் புகழப்படுபவனும், நீண்டோனுமாகிய திருமாலின் மருகனாகிய எவ்வுயிர்க்கும் துணைவனே! குணதர! சரவணபவ! நம! முருக! குருபர! வளர்! அறுமுக! குக! தீயார் தொடர்பை நீக்கிவிடுவாயாக என்பது குறித்தது.

பிணி நீங்கச் சுகம் வருவதுபோலத், தீயார் தொடர்பு நீங்க நல்லார் தொடர்பு எய்தும்; அதனால் ஞானம் பெருகி வானவர் வழுத்தும் வீடு பெறுவேன்; இது செய்தற்கு நீயே வல்லவன்; நீயே தக்கவன்; நீயே துணையாவோன் என்றனர்.

13. தந்ததன தான் தந்ததன தான
தந்ததன தான - தனதான

கன்றிவரு நீல குங்கும படீர
கஞ்சமலர் மேவும் முலைகாட்டிக்

கங்குல்செறி கேச நின்றுகுலை யாமை
கண்கள்கடை காட்டி விலைகாட்டி

நன்று பொருள் இது வென்றுவிலை பேசி
நம்பி விடுமாதர் உடனாட்ட

நஞ்சுபுரி தேரை அங்கம்அது வாக
நைந்துவிடும் எற்கு ஒன்று அருள்வாயே;

குன்றிமணி போலச் செங்கண்வரி நாகம்
கொண்டபடம் வீசு மணிகூர்வாய்

கொண்டமயி லேறிக் குன்றிடிய மோதிச்
சென்றவடி வேலைக் கொடுபோர்செய்

மன்றல்கமழ் பூகம் தெங்குதிரள் சோலை
வண்டுபடு வாவி புடைசூழ

மந்திநட மாடுஞ் செந்தில்நகர் மேவும்
மந்தசுர காலப் பெருமாளே!

குன்றி மணியினது நிறத்தை நிகர்த்ததாயுள்ள, சிவந்த கண்களையும் கோடுகளையும் உடைய பாம்பு, தான் பெற்றிருக்கும் படத்தை ஆட்டும், அழகிய கூர்மையான வாயை, கொண்டுள்ள மஞ்ஞையின் மேல் ஏறிக்கொண்டு வரைகளெல்லாம் தகர்ந்து சரியும்படி தாக்கி, குற்றமகன்ற வடித்தெடுக்கப்பட்ட வேலாயுதத்தை, கையிற்கொண்டு போரைச் செய்கின்ற, நறுமணம் வீசுகின்ற, பாக்கு மரங்களும் தென்னை

மரங்களும் நெருங்கியுள்ள சோலைகளும், தேன் வண்டுகள் பொருந்தியுள்ள பொய்கைகளும், நான்கு பக்கங்களிலும் சூழ்ந்திருக்க, குரங்குகள் கூத்தாடிக் கொண்டிருக்கப் பெற்ற, திருச்செந்தூர் என்னும் புனிதக் கோயிலில் வீற்றிருக்கும், சூரன் முதலாய அந்த அசுரர்களுக்கு யமன் போன்ற பெருமானே! மிகுந்த நீல நிறத்தையுடைய, குங்குமமும் சந்தனமுந் திமிர்ந்த, கமலமலரை ஒத்த, கொங்கைகளைக் காட்டி, இருளை ஒத்த குழல், நிலைத்து நின்று முடித்த குழல் குலையாதபடி, கடைக் கண்களாற் காட்டி, முலை விலையைத் தோன்ற எடுத்துக்காட்டி, இந்தப் பொருள் நல்லது இந்தப் பொருள் தீயது என்று கூறி விலையைப் பேசி, இயைந்த ஆடவர்களுக்கு அவர்களை நம்பித் தன் தேகத்தைப் பொருள் விரும்பி விடுகின்ற பெண்கள், அவர்களுடனே, அவர் கண்களிலுள்ள கடுநிகர்த்த காமத்தை விரும்பி, தேரையின் உடம்புபோலத் தேகம் மெலிவடைய, வருந்திக் கெட்டு விடுகின்றவனாகிய அடியேனுக்கு, நின் திருவருளைச் செய்வாயாக.

கன்றி வரு நீலம் - 'ஆடவர் மனம் வருந்துமாறு வந்துள்ள நீலமலர்போலுங் கண்' என்பது பொருள்; இனி, 'துன்புறுத்தி உயிர்வாங்க வரும் மன்மதனின் நீலமலர்போலுங் கண்' எனலும் ஆம். மன்மதன் கணைகளில் ஐந்தாவதாகிய நீலமலர் உயிர் வாங்குந் தன்மையது என்பர் இதனாலன்றோ.

*"சூலக் கரத்தர் திருவெங்கை வாணர்முன் சுட்ட மதன்*
*நீலக் கணையிற்கை வைத்தான் இனிச்சற்று நேரநிற்பில்*
*காலர்க் கிரையிடும் என்ன வியையந்தக் காரிகையார்*
*கோலக் களபக்குன் றன்றோ மருவக் குறுகியதே"*

என்ற வெங்கைக் கோவையாருங் கூறினார்.

இனி, 'கன்றின் வரு நீலம்' எனக் கொண்டு, மான் கன்று போன்று வரும் நீலமலர்க் கண்கள் எனப் பொருள் கொள்ளலாம்.

கன்றின் வரு - 'கன்றிவரு' என ஆனது விகாரம். கண் காட்டி முலைகாட்டி மயலூட்டி விலைகாட்டும் வேசையர் மயக்கில் வீழ்ந்து தேரைபோல் தேய்ந்து நைந்து அழிவேற்கு அருள்வாயாக என்றார். இதனை,

*"காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென்*
*கண்ணெதிரே*
*மாதென்று சொல்லி வருமாயை தன்னை*
*மறலிவிட்ட*
*தூதென் றெண்ணாமற் சுகமென்று நாடுமித்*
*தூர்ப்புத்தியை*
*ஏதென் றெடுத்துரைப்பேன்? இறைவா! கச்சி*
*ஏகம்பனே!"*

என்ற பட்டினத்தடிகள் வாக்கொடு ஒப்பிட்டறிக.

இன்னும் மாதர் கட்கடை வேகமுடையது. போக காம மூட்டுவது.

*"எடுதரு மலர்க்குழலார் முலைதலைக்கே இடைக்கே*
*எறிவிழியின் படுகடைக்கே"*

என்னும் அருணந்தி சிவனார் திருவாக்கும் ஈங்கே எண்ணத்தக்கது. இதனாலன்றோ,

*"வீண்டு மொழிகுளறி வேட்கைமது மொண்டுதரும்*
*தொண்டியர்கள் கட்கடையில் சுற்றொழிவ தெந்நாளோ"*

என்றார் தாயுமானவரும்.

தேவர்களை வருத்திய சூரனை அழித்து அருளிய நினக்கு, என்னை நைவிக்கும் மாதர் மயக்கத்தைப் போக்கல் அசாத்தியமானதன்று என்பது குறிப்பு.

பிறரை வருத்தும் நஞ்சு சூடிகொண்ட படத்தையுடைய பாம்பைத் தன் வாயில் வைத்து ஆட்டும் ஆற்றல் நின் ஊர்தியாகிய மயிலுக்கே அமைந்திருக்கும் போழ்து, என்னை வாட்டும் அரவகல் அல்குல் மாதர் மாயைப் பாம்பு என்னைக் கௌவாது செய்ய உன்னால் முடியா தெனவும் நினைப்பனோ என்பது குறிப்பித்ததுங் காண்க. இக் கருத்தை.

*"வெய்யவிட வேக நாக மேவுகொடு வாயி னின்று*
*தய்யுதய வென்ன ஆட தரணிமிசை வந்த மஞ்ஞை*
*செய்யபரி ஏவு வேல சினவுவேற் கண்ண ராசைப்*
*பையரவு பற்றி என்னைப் படுத்திடா வகையிற் காவே"*

எனற தனிச் செய்யுளாலும் அறியலாம்.

14. தனத்தனந் தானன தானன தானன
தனத்தனந் தானன தானன தானன
தனத்தனந் தானன தானன தானன - தனதான

அனிச்சம் கார்முகம் வீசிட மாசறு
துவட்பஞ் சானத டாகம்வி டாமட
அனத்தின் தூவிகு லாவிய சீறடி மடமானார்

அருக்கன் போல்ஒளி வீசிய மாமர
கதப்பைம் பூண்அணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாலியை ஆவியி டேறிய நெறிபாரா

வினைச்சண் டாளனை வீணனை நீள்நிதி
தனைக்கன் டாணவ மானநிர் மூடனை
விடக்கண் பாய்நுகர் பாழனை யோர்மொழி
பகராதே

விகற்பம் கூறிடும் மோக விசாரனை
அறத்தின் பால்ஒழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெருவேனோ!

முனைச்சங் கோலிடு நீல மகோநதி
அடைத்தஞ் சாத இராவணன் நீள்பல
முடிக்கண் றோர்கணை ஏவும் இராகவன்
மருகோனே!

முளைக்குஞ் சீதநி லவொட ராவிரி
திரைக்கங் காநதி தாதகி கூவிளம்
முடிக்குஞ் சேகரர் பேரரு ளால்வரு முருகோனே!

தினைச்செங் கானக வேடுவ ரானவர்
திகைத்தந் தோவென வேகணி யாகிய
திறற்கந் தா! வளி நாயகி காமுறும் எழில்வேலா!

சிறக்குந் தாமரை ஓடையின் மேடையில்
நிறக்குஞ் சூல்வளை பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னே! சுரர் பெருமாளே!

கூரிய முகத்தைக் கொண்டுள்ள சங்கங்கள் ஒலிக்கும், நீல நிறங் கொண்ட பெரிய கடலைத் திரு அணைகட்டி, யாருக்கும் பயப்படாத இராவணனுடைய, அழியாத நீண்ட வர வன்மையை உடைய தலைக்கு, அதனைக் கொய்யுமாறு இணையற்ற ஒரு கணையைச் செலுத்திய இராமபிரானுடைய மருமகனே! பிறக்கும் இயல்புடைய குளிர்ந்த நிலவினோடு, படத்தை விரிக்கும்

பாம்பையும், பரந்த அலைகளை உடைய கங்கா நதியையும் ஆத்தி மலரையும் வில்வத்தையும், திருமுடியில் அணிந்து கொள்ளும் சிவபெருமானது, மிக்க அருளால் தோன்றியருளிய முருகக் கடவுளே! தினை விளைகின்ற செவ்விய குறிஞ்சி நிலத் தினைப்புனத்தில் வாழும், வேடர்கள் ஆனவர்கள், மருண்டு ஐயோ! என்று வியந்து கூற, வேங்கைமரமாக நின்ற கந்தவேளே! வள்ளிநாயகி காமுறும் வள்ளியம்மையார் ஆசை கொள்ளும்படியான அழகைக் கொண்ட வேலாயுதக் கடவுளே! பூக்களினால் விளக்கங் கொண்டிருக்கின்ற தாமரை பூத்துள்ள ஓடைகளிலும், மேடையில் மேட்டுப் பாங்கான நிலங்களிலும் அழகான நிறத்தோடு விளங்குகின்ற கருப்பங் கொண்ட சங்குகள், பால்போலும் வெண்மை நிறத்தையுடைய முத்துக்களை வீசும் திருச்செந்தூர் என்னும் திவ்விய தலத்தில் வந்தருளி வீற்றிருக்கும் வீரனே, தேவர்களுக்கெல்லாம் தலைவனே! அனிச்சப் பூவின் மேலும், வில்லால் அடித்ததனால், குற்றமற்ற நுண்ணிய பொடியாகிய பஞ்சின் மேலும், குளிர்ச்சி உடையதான வாவியை விட்டு நீங்காத, இளமை பொருந்திய அன்னப் பட்சியின் இறகின் மேலும், சிறந்து விளங்குகின்ற சிறிய பாதங்களைக்கொண்டுள்ள இளமை பொருந்திய மங்கையர்களின், சூரியனைப்போல ஒளிக்கின்ற, மரகத மணிகளினால் ஆகிய பசுமையான ஆபரணங்கள் விளங்குகின்ற, கச்சணிந்த முலைகளின் மேல், முகத்தை அழுத்தி அணைகின்ற பாபச் செயலுடையவனும், உயிரானது கடைத்தேறும்படியான நல்வழியைக் கவனியாத, தீவினைகளை உடையவனாகிய சண்டாளனும், பயனற்றவனும், மிக்க பொருளைப் பார்த்து அகங்காரம் கொண்ட அறிவற்ற மூடனும், பிற உயிர்களின் தசையைப் பிரியத்தோடு உண்ணும் பாழானவனும், ஓர் சொல்லும் எதிர் கூறாது, மன மாறுபாட்டைக் கூறும் காம விகாரனும், அறத்தின் நெறியில் செல்லாத மூதேவியும் ஆகிய அடியேனை, விளித்து, ஓ முருகக் கடவுளே!

நீர் அழைத்து, உன் பாதுகை தேவரீரது திருவடியில் அணியும் பாதுகையைக் கொடுத்தருளும், நான் அந்தப் பெருங் கருணைக்கு இலக்காகுவனோ?

அனிச்சம் - இது ஒருவகை மலர்; மிக மென்மையை உடையது; மோந்த மாத்திரத்தில் குழைந்துபடுந் தன்மையது.

*"மோப்பக் குழையும் அனிச்சம்"*

என்னும் திருக்குறளால் அறியலாம். கார்முகம் - வில்; இங்குப் பஞ்சு கொட்டும் வில்லைக் குறித்தது. பஞ்சின் கோதுகளை நீக்கி நுண்மைப் படுத்துவதற்கு வில்லாலடிப்பது வழக்கு. துவட்பஞ்சு - தூளாகிய பஞ்சு, 'துகட்பஞ்சு' என்றது 'துவட்பஞ்சு' என மருவியது; இனி 'துவண்டபஞ்சு' எனினும் ஆம். தடாகம் விடா அனம்; அன்னம் 'அனம்' என்றானது தொகுத்தல் விகாரம். அன்னத்தின் இயல்பு தடாகத்தில் வசிப்பதாதலின், 'தடாகம் விடா' என்றார். தூவி - சிறகு. அன்னத்தின் மெல்லிய சிறகுகளை அணையாக்குதல் நம் நாட்டுப் பண்டைக்கால வழக்கு. இன்று மேலை நாட்டினர் பறவைகளின் சிறகுகளை அணையாக்கி பயன்படுத்து கின்றனர். மாதர்கள் பாதம் மென்மைய தாதலின், துவட்பஞ்சினும் அன்னத்தின் தூவியினுங் குலாவிய சீறடி என்றார். சீறடி - சிறிய பாதம். சிறுமை + அடி, 'சீறடி' என்றாயிற்று; சிறுமை என்ற பண்பின் ஈற்று மை கெட்டு, இடை உகரம் இகரமாகி, ஆதி நீண்டது. இதற்கு,

*"ஈறு போதல் இடை உகரம் இயாதல்*
*ஆதிநீடல் அடி அகரம் ஐயாதல்,*
*தன்னொற்று இரட்டல் முன்னின்ற மெய் திரிதல்*
*இன மிகல் இனையவும் பண்பிற் கியல்பே"*

என்றது நன்னூல் சூத்திர விதி.

அருக்கன் - சூரியன். மாதர்கள் பாத மென்மையை,

*"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்*
*அடிக்கு நெருஞ்சிப் பழம்"*

என்ற திருக்குறளும்,

*"கைத்தாயர்*
*பஞ்சிப்போ"தையூட்டிப் பார்த்தாலோ வென்றுரைக்கும்*
*செஞ்சொற்கேட் டேசிவக்குஞ் சீறடியாள்"*

என்ற சித்தரமடலும் இவ்வாறே உணர்த்தினமை காண்க.

மடமானார் - இளமையுடைய பெண்கள். 'ஆர்' பலர் பால் விகுதி. பெண்களை 'மானார்' என்றது உருவகம். பெண்கள் கொங்கை ஆடவரை மயக்கி மனத்தை வலிக்கும் தன்மையுடையது. ஆதலின் அதனைக் கூறினர். இதனானன்றோ,

*"பூணிற் பொலி கொங்கை ஆவியை ஓவியப் பொற்*
*கொழுந்தை"*

என மணிவாசகரும்,

*"கோலக் களபக் குன்றன்றோ மருவக் - குறுகியதே"*

எனச் சிவப்பிரகாசரும் தம் கோவைகளுள் கூறியருளினர்.

தாயுமானவரும் இதனானன்றோ,

*"கச்சிருக்குங் கொங்கை கரும்பிருக்கு மின்நாற்றம்*
*வச்சிருக்கும் மாதர் மயக்கொழிவ தெந்நாளோ"*

என்றார். "முலை மேல் முகம் அழுத்தும் பாவியை" முலைமேன் முயங்கி மயங்கி வழியறியாது நெறி விடலின், 'பாவி' என்றார். 'நெறி' என்றது நன்னெறியை, அறிவு நெறியை, முத்திநெறியை.

*"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை"*

என்ற திருவாசகமும் ஈண்டு கருதத் தக்கது. வினைச் சண்டாளனை, 'பிறப்பினாலன்றி' வினையினால் சண்டாளத்துவத்தைக் கொண்டேனை என்பது பொருள். தனக்கும்

உலகுக்கும் பயனில்லா வீண் காரியங்களைச் செய்து பாவத்தைச் சுமந்து அழிய நிற்றலின், 'வீணனை' என்றார். இதனாலன்றோ திருவள்ளுவரும்,

*"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்*
*அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு"*

என்றனர்.

செல்வம் வந்த ஞான்று அறிவை மயக்கி ஆணவத்தை ஓங்குவிக்கும், இதுபற்றியே "நீள நீதிதனைக் கண் டாணவமான நிர்மூட" என்றார். இதனை,

*"பொருளாகக் கொள்ளாத புல்லியரைச் சார்ந்து*
*மருளா லவரை மடிப்பாள்"*

எனவும்,

*"தேனா ரிதழ்செறிந்த செந்தா மரைக்கோலின்*
*மானா ரிணைவிழிப்பொன் மாதியைந்தால் – ஆனாத*
*வாப்பெருகும் பொய்யோடு அழுக்காறு மல்குமேற்*
*காப்பில் சினம்பகைவன் கண்மைமிகும் – யாப்பின்றித்*
*தன்னை உயர்த்தி மதித்தல் பிறரிகழ்தல்*
*சொன்னயஞ்சேர் வின்மையன்பு தோய்வின்மை –முன்னாக்*
*கொலைகளவு கட்காம மின்னகூ டாத*
*தலைசிறந்து தம்மிடத்தைத் தாக்கும் – நிலனமைந்த*
*வாழ்க்கையெந் நாளும் வலிய துயராம் பின்னர்*
*வீழ்க்கை கொடுநிரய வெவ்வாயிற் – காழ்க்கு*
*அறிவிலதா வெல்லாந்தீங் காமேற் பொருளின்*
*செறிவினா லென்னநலஞ் சேரும்"*

எனவும் கூறிய தமிழவிடு தூதானும் அறியலாம்.

விடக்கு - ஊன், உயிர்களைக் கொன்று அதன் ஊனை உண்பார் பாழாதல் திண்ணமாதலின், 'விடக்கண் பாய்நுகர் பாழனை' என்றார்.

*"ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினதே"*
என்றார் இனியவை நாற்பதினும்,

*"உண்ணாமை உள்ள துயிர்நிலை யூனுண்ண*
*அண்ணாத்தல் செய்யா தளறு"*
என்ற திருவள்ளுவர் திருவாக்கும்,

*"கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங்*
*கோள்களவு*
*கல்லாமற் கைதவ ரோடிணங் காமற் கனவினும் பொய்*
*சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர்*
*மாலையிலே*
*செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே"*
என்ற பட்டினத்தடிகள் திருவாக்கும் கருதத்தக்கன.

மூதேவி என்ற சொல் சந்தம் பற்றி 'முதேவி' எனக் குறுக்கல் விகாரம் பெற்றது. 'மகோததி': மகா + உததி - 'பெருஞ் சமுத்திரம்' என்பது பொருள்; இது வடமொழிப் புணர்ச்சி. கடல் ஆழத்தால் நீல நிறமாகக் காணும்; வானம் நீலநிறம் எதிரொலிப்பதாலும் நீல நிறமாகக் காணும்; ஆதலின், 'நீலமகோததி' என்றார்.

'அஞ்சாத ராவணன்' உயிர்களை அஞ்சுவிக்கும் மயனுக்கும் அஞ்சாதவன் ஆதலின், இராவணன் யமனையுந் தோற்றோடச் செய்தவன். இதனை,

*"ஆர்த்தானைக் கரசுந்தி அமரரக்கணத் தொடுமேடர்ந்த*
*போர்த்தானை இந்திரனைப் பொருதவனைப்*
*போர்தொலைத்து*

*வேர்த்தானை உயிருண்டு மீண்டானை வெரிப்புண்டு*
*பார்த்தானே யான்பட்ட பழிவந்து பாராயோ"*

என்ற கம்பர் வாக்கானும் அறியலாம்.

முடிக்கன்றோர் கணை - 'பத்துத் தலைகளுக்கும் அவை தத்தி விழ ஒப்பற்ற ஒருகணை விட்டோன்' என்ப் பொருளுரைத்தலும் ஆம். இராமர் கணை குறி பிழையாது செல்லும் ஆற்றலுடையது. இது மராமரம் ஏழுக்கும் ஒரு கணை விட்டதனால் அறியலாம். இதனாலன்றோ,

*"வைதவைவின் மராமர மேழ் தொளைஎய்த வெய்தவர்"*

எனவும்,

*"சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல்*
*அல்லொக்கும் நிறத்தி னாண்மேல் விடுதலும் வயிரக்*
*குன்றக்*
*கல்லொக்கும் நெஞ்சிற் றங்கா தப்புறங் கழன்று கல்லாப்*
*புல்லர்க்கு நல்லோர்சொன்ன பொருளெனப் போயிற்றன்றே"*

என்ற கம்பர் வாக்குகளாலும் அறியலாம்.

'இரகு' என்னும் சூரிய குலத்துச் சிறந்த அரசன் வழியில் வந்தமையால் இராமருக்கு இராகவன் எனப் பெயராயிற்று. நிலவு முழுமையாகி நாளுநாளுங் குறைந்து வந்து, ஒரு நாள் இல்லாதே இருந்து, பின் தோன்றுகின்றான்; ஆதலின் 'முளைக்குஞ் சீத நிலா' என்றார். இதுபற்றியே 'பிறை' என்ற பேரும் பிறை நிலவுக்கு ஏற்பட்டது; இதற்குப் 'பிற' என்பது பகுதி; பிற - 'உதி' தோன்றுமுளை என்பது பொருளாம். 'அம்தோ' - அச்சங் காட்டும் வியப்புரை, கணி - வேங்கைமரம், வள்ளியம்மையார் பொருட்டு வேங்கை மரமாக நின்றது கந்தபுராணக் கதை, வள்ளி நாயகி என்பது சந்தம்பற்றி 'வளிநாயகி' எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது.

சுரர் பயந் தீர்த்து அருள் செய்த பெருமானே! அஞ்சாது தேவரையும் வென்று வெற்றிக் கொடி நாட்டிய பத்துத்தலை இராவணன் தலை பத்துந் தந்த ஒரு கணை விட்டுக் கொன்றருளி உலகைக் காத்த பெருமாளின் மருகா! முருகா! அன்பு பூண்ட வள்ளி நாயகிக்காக வேடர் அந்தோ என்று அஞ்சி மயங்க வேங்கையான வேலாயுதனே! கடைப்பட்ட அடியேனைக் காப்பதுன் கடன் என வேண்டிக்கொள்ளும் இவ் வேண்டுகோளில் பல நுனித்தறியகத்தக்கன உள. முருகனருளால் உன்னிக் கற்பார்க்குத் தோன்றாது போகா.



## திருப்பழநிமலை (திருவாவிநன்குடி)

15. தனனதன தான தந்த தனனதன தான தந்த
தனனதன தான தந்த - தனதான

கருவில் உருவாகி வந்து வயதளவி லேவ ளர்ந்து
கலைகள் பல வெதெ ரிந்து மதனாலே

கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்பு தைந்து
கவலை பெரி தாகிநொந்து மிகவாடி

அரகரசி வாயவென்று தினைமுநினை யானின்று
அறுசமய நீதி ஒன்றும் அறியாமல்

அசனமிடு வார்கள் தங்கண் மனைகடலை வாசல்நின்று
அனுதினமு நாண மின்றி அழிவேனோ;

உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள் அரங்கர்
உலகளவு மால்ம கிழ்ந்த மருவோனே!

உபயகுல தீப வங்க விருதுகவி ராசசிங்க
உறைபுகலி யூரி லன்று வருவோனே!

பரவைமனை மீதி லன்று இருபொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா!

பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழநிமலை மீதி னின்றி பெருமாளே!

ஆதிசேடனது படத்தின் மேலே, அறிதுயில் கொண்ட, பெரிய பெருமாள் என அடியார்களால் அழைக்கப்பெறும் திருவரங்கப் பெருமானும், நிலவுலகத்தைத் தன் ஓரடியால் அளந்தருளியவருமாகிய திருமால், மகிழும் படியான மருகனே! இரண்டு குலங்களுக்கும் தீபம் போன்றவனே! வெற்றிக்கு

அடையாளமாகிய விருதுகளைப்-பெற்ற பாவேந்தராக வசிக்கத் தகுந்த சீகாழியில் முன்னாளில் திருஞான சம்பந்த மூர்த்தியாக அவதரித்தருளி வந்தவனே! திருவாரூரில் பரவை நாச்சியாருடைய திருமனைக்கு அக்காலத்தில் இரண்டு முறை, சுந்தர மூர்த்திகளுக்காகத் தூதுபோன, சிவ பெருமான் திரு. அருளினால், வளர்ந்தருளிய குமரேசனே! பகைவர்களாகிய அசுரர்களின், படைகளைத் தலைவர்களோடு கொன்றழித்து தேவர்கள் சிறையினின்றும் மீளும்படிக்கு. வெற்றியைக் கொண்டு, பழநிமலையின் மேலே, நிலைபெறத்தங்கி, நின்றருளும் பெருமானே!

தாய் வயிற்றுக் கருப்பையில் உருவடைந்து பின் வெளிப்பட்டு வந்து, வயசு ஏறும்படியான அளவுகளுக்குத் தக்கபடி உடல் வளர்ச்சி அடைந்து, கலை அறிவுகள் பலவற்றை உணர்ந்து, மன்மதனாலே, கருத்த நிறத்தையுடைய கூந்தலைக் கொண்டுள்ள பெண்கள், அந்தப் பெண்களின் அடியின் குறி மார்பிலே அழுந்தப் பதியப் பெற்று மன வியாகூலம் அதிகரித்து, மன தழிந்து, அதிகமான வாட்டத்தையடைந்து, அரகர சிவாய என வாயினாற் கூறி, ஒருநாளும் நினையாது, இருந்தும், ஆறு சமயங்களின் ஒழுங்குகளை, யாதொன்றையும் தெரிந்து கொள்ளாமல், சோறு கொடுப்போருடைய, வீடுகளின் தலைவாசலிலே நின்று, ஒவ்வொரு நாளும் வெட்கம் இல்லாதபடி, அழிந்து கெட்டுப்போவேனோ.

நீர்த்தன்மையவாய சுக்கில சுரோணிதம் கூடிக் கருப்பையிலே உருவடைதலின், 'கருவின் உருவாகி' என்றார். வயதுக்கேற்றபடி உடல் வளரும் ஆதலின், 'வயதளவிலே வளர்ந்து' என்றார். நின்னருள் இல்லாமையால் பல கலைகளைக் கற்றும் பெண்கள் மாயையிற் சிக்கினேன் என்பார். 'கலைகள் பலவே' தெரிந்து மதனாலே *** மிகவாடி' என்றார்.

'மாதர் தங்கள் அடிசுவடு மார்பிற் புதைதல்' ஊடற் காலத்து நிகழ்வது. ஆறு சமயங்களாவன; சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமமுகம், வைரவம் என்னும் அகச் சமயங்களை இனி புறச் சமயம் ஆறுள. அவை:- உலோகாயதம், பௌத்தம், ஆருகதம், மீமாஞ்சம், மாயாவாதம், பாஞ்சராத்திதம் என்பனவாம்.

அரங்கர் - 'திருவரங்கத்தில் இருப்பவர்' என்பது பொருள். அரங்கம் - ஆற்றிடைக் குறை. உலகளவு மால்:- 'உலகளாவ வளர்ந்த மால்' எனினும் ஆம். திருமாலின் திரு விக்கிரமாவதாரத்தை 'உபய குல தீப' என்றது தாய் வழியையும் தந்தை வழியையும், முருகர்க்குத் தாய்வழி: நாரணனின் கூட்டம்; தந்தை வழி; சிவபெருமானின் கூட்டம்.

"திருஞானசம்பந்தராக முருகக் கடவுளே அவதரித்தார்" என்னுங் கொள்கையுடைய ராதலின், 'உறைபுகலி யூரிலன்று வருவோனே' என்றார். 'புகலி' என்றது சீர்காழியை.

'இருபொழுது தூது சென்ற' என்பதனை சிவபெருமான் இரவில் பரவையார் மனைக்குத் தூது சென்றதைக் காளமேகமும்,

*"ஆனா ரிலையே அயனுந் திருமாலும்*
*கானா ரடிமுடிமுன் காண்பதற்கு - மேனாள்*
*இரவுதிரு வாரூரி லெந்தைபிரான் சென்ற*
*பரவை திரு வாயிற் படி"*

என்றார்.

'குமரன்' - 'மன்மதனையும் அழகில்லாதவன் என்று சொல்லும்படி மிகுந்த அழகு உடையவன்' எனவும், 'என்றும் கௌமார பருவத்தை (வாலிப கோலத்தை) உடையவன் எனவும் பொருள் செய்வார். கு+மாரன்: கு-குற்சிதப் படுத்தல். மாரன் - மன்மதன்: மன்மதனையும் குற்சிதப் படுத்துவோன், பகை: 'பகு' என்னும் பகுதியடியாகப் பிறந்த பெயர்; மனம் ஒட்டாது

பிளவுபட்டிருப்போர்; இதே பொருளில் ஒன்னார், ஒட்டார், மாற்றார் எனவந்துளவற்றைக் காண்க. திருவாவிநன்குடியில் உள்ள பழநி மலையில் முருகர் கனிபெறாது தந்தையிடம் சினம் கொண்டு தவவேடத்தோடு வந்திருந்தபொழுது இறைவர் வந்து "பழம் நீ" நீயே ஞானப்பழம் என்பது பொருள் என்றதனால் இத் திருக்குன்றில் தலத்திற்குப் 'பழநி' என்றாயிற்று. 'நீ' என்றது 'நி' என நின்றது குறுக்கல் விகாரம்.

"அடியார் பொருட்டு நீண்டு வளர்ந்து ஓரடியால் உலகை அளந்து காத்தவன் மருகனே! சுந்தர மூர்த்திகள் பொருட்டுப் பரவையார் திருமனைக்கு இருமுறை நடு இரவில் தூது சென்ற கருணையுடையவர் அருளாற் பிறந்து வளர்ந்த குமரனே! துட்ட அசுரரை வேல்விட்டு அழித்துத் தேவர் சிறை மீட்ட கருணையை உடைய பெருமானே! நின்னை நினையாது மாதரை நினைந்து உருகி நைந்து அழிவேனைக் காக்காயோ" என்பது.

16. தனதன தத்த தானன
தனதன தத்த தானன
தனதன தத்த தானன - தனதான

கதியைவி லக்கு மாதர்கள்
புதியவி ரத்த பூஷண
கனதன வெற்பு மேன்மிகு மயலான

கவலைம னத்த னாகிலும்
உனதுப்ர சித்த மாகிய
கனதன மொத்த மேனியும் முகமாறும்

அதிபல வச்ர வாகுவும்
அயினுனை வெற்றி வேலதும்
அரவுபி டித்த தோகையும் உலகேழும்

அதிரவ ரற்று கோழியும்
அடியர்வ ழுத்தி வாழ்வுறும்
அபிநவ பத்ம பாதமும் மறவேனே;

இரவிகு லத் இராசதம்
மருவியெ திர்த்து வீழ்கடு
இரணமுக சுத்த வீரிய குணமான

இளையவ னுக்கு நீண்முடி
அரசது பெற்று வாழ்வுற
இதமொடு அளித்த ராகவன் மருகோனே!

பதினொரு ருத்தி ராதிகள்
தபனம்வி ளங்கு மாளிகை
பரிவொடு நிற்க மீசுர! சுரலோக

பரிமள கற்ப காடவி
வரியளி சுற்று பூவுதிர்
பழநிம லைக்குள் மேவிய பெருமாளே!

செங்கதிர் மரபில் உரிய, இராசத குணத்தைப் பொருந்தி எதிர்த்து, பகைவர்களை எதிர்த்து விரும்பத் தகுந்த கடுமையான போர் முனையில், தூய வீர குணத்தைக் கொண்ட, தம்பியாகிய பரதாழ்வானுக்கு, புகழ் மிகுந்த முடியையும், அரசாட்சியையும் பெற்று வாழும் பொருட்டு பிரியத்தோடு தந்த, இராமருடைய மருகனே! பதினொரு உருத்திரர்களது, ஒளி விளங்கும் கோவிலில், பிரியத்தோடு நின்றருளிச் செய்யும் ஈச்சுரனே! தேவரின் உலகத்தில் மிகுந்த நறுமணங் கொண்ட கற்பகச்

சோலையிலுள்ள, செவ்வரிகள் பொருந்திய வண்டுகள், சூழ்கின்ற மலர்கள் உதிர்ந்துள்ள பழநிமலை என்னும் திருக் குன்றில் வீற்றிருந்தருளும் பெருமானே! உயர்ந்த வீட்டுக் கதியைத் தடுக்கும், பெண்களின் புதுமையான மணியணிகள் பூண்ட மிகப் பெரிய முலைகளாகிய மலைகளின்மேல் மிகவுங் காதல் மயக்கங்கொண்டுள்ள, கவலைப் படுகின்ற மனத்தை உடையவனானாலும், முருகக் கடவுளே! உம்முடைய கீர்த்திவாய்ந்த, சிறந்த மாற்றுயர்ந்த பொன்னை நிகர்க்கும் அழகிய மேனியும், ஆறு அழகிய முகங்களும் மிகுந்த வல்லமை வாய்ந்த, வயிரமணி போலும் புயங்களையும், கூராகிய முனையைக் கொண்டுள்ள, வெற்றி பொருந்திய வேலாயுதத்தையும், அரவைப் பற்றிக் கொண்டிருக்கின்ற, மயிலையும், ஏழாகிய உலகங்களும் நடுங்கும்படி, கூவுஞ் சேவலையும் தொண்டர்கள் துதித்து, தங்கள் வாழ்வைப் பெறுகின்ற புதிதாகிய தாமரைப் பூவை நிகர்த்த திருத்தாள்களையும், ஒரு காலத்தும் நான் மறக்க மாட்டேன்.

விலைப் பெண்கள் உயர்ந்த பரகதியைக் கெடுத்து நரகத்திலிடர்ப்பட விடுவோர்கள் ஆதல்பற்றி, 'கதியை விலக்கும் மாதர்கள்' என்றார்.

*"பரகதியைப் போக்கு பொதுப்பாவையாரை விட்டொழியின்*
*நரகதிக் காளகேன் நான்"*

என்றதும் மெய்ப்பிக்கும். 'மாதர்: காதலை உண்டாக்குவோர்' என்னுங் காரணம் பற்றி வந்த பெயர். வெற்பு தனத்துக்குவமை ஆதலின், 'கனதன வெற்பு' என்றார்.

பாகு என்னும் வடமொழி 'வாகு' எனத் தமிழில் வந்தது. அயில் - கூர்மை. வெற்றி - வென்றதன் மேல் ஆகிய புகழ். வேல் - 'வெல்வது' என்னும் பொருளது. 'தோகை';

தோகையையுடைய மயிலைக் குறித்தது. இது சினையாகு பெயர். மயிலும் கோழியும் மாவாக நின்ற அசுரன், வேலாற் பிளவுபெற்றபோது மாறிய உருவங்கள். அவை முறையே முன்னைத் தவத்தால் முருகர்க்கு ஊர்தியுங் கொடியும் ஆயின.

திருமால் தாமத குணன் ஆதலினாலும், இராமாவதாரத்தில் இராசத குணங் காட்டினமையாலும், 'இரவி குலுத்து இராசத மருவி' என்றார். 'இளையவன்' என்றது பரதரை. தபனன் - அக்கினி; 'பொருள்களைத் தபிப்பவன்' என்பது பொருள்; தபித்தல் - அழிததல். வாட்டல். ஈசுரன் - 'அடியார் வேண்டும் ஐசுவரியங்களை எல்லாம் தருவோன்' என்றும், 'மோட்சமாகிய ஐசுவரியத்திற்குத் தலைவன்' என்றும் பொருளாம். கற்பக + அடவி = கற்பகாடவி என வடமொழித் தீர்க்க சந்தி பெற்றது.

"அன்புடைத் தம்பிக்கு அரசு தந்த இராமரின் மருகா! ஈசுரனே! நான் மாதர் மயலால் கவலை மனத்தை உடையவன். ஆனாலும் உன்னை மறந்திலன்; எனக்கு அருள் செய்" என்றதாம்.

**17. தானனந் தனனத் தானனந் தன்னத்**
**தானனந் தன்னத் – தனதான**

**காரணிந் தவரைப் பாரடைந் துவினைக்**
**காதல் நெஞ் சயரத் தடுமாறி**

**கானரம் புதிரத் தோல்வழும் புறுபொய்க்**
**காயமொன் றுபொறுத்து அடியேனும்**

**தார்அணங் குகுழல் கூரணிந் தவிழிச்**
**சாபமொன் றுநுதற் கொடியார்தம்**

தாள் பணிந்தவர்பொற் றோர்விரும் பிமிகத்
தான்மெலிந் துவிடத் தகுமோதான்

சூரர்துண் டுபடப் போர்கடந் துதொழத்
தோயமும் சுவறப் பொருவேலா!

தூய்மைகொண் டகுறத் தோகைநின் றபுனம்
சூழ்பெருங் கிரியில் திரிவோனே!

ஆரணன் கருடத்து ஆரணன் புகழ்தல்
காலமுண் டவருக் குரியோனே!

ஆலயம் பழனச் சோலையின் புடைசுற்று
ஆவிநன் குடியிற் பெருமானே!

அசுரர்கள் துண்டு பட்டழிய, அசுரப் போரில் வென்று, எல்லோரும் வணங்கும்படி, கடல் நீரும் வற்ற; போரைச் செய்த வேலாயுதத்தை உடையவனே! தூய்மை உடைய, மயில்போலும் வள்ளியம்மையார், வசித்துக் கொண்டிருந்த தினைப்புனமானது, சூழ்ந்துள்ளதாகிய பெரிய மலையினிடத்து, வள்ளி அம்மையார் பொருட்டு உலாவினவனே! பிரமாவும், கருடனைக் கொடியாகக் கொண்டுள்ள திருமாலும், தன்னைப் புகழும்படி, திருப்பாற் கடலிற் தோன்றிய ஆலகால விடத்தை அமுது செய்த சிவபெருமானுக்கு, அன்பிற்கு உரிய புத்திரனே! கோயில்களும், வயல்களும், சோலைகளும் இனிய பக்கங்களில் சூழ்ந்திருக்கப்பெற்ற திருவாவிநன்குடி என்னுந் திருத்தலத்தில் எழுந்தருளி இருக்கும் பெருமானே! மேகத்தைப் பூண்ட மலைகளுடைய நிலத்திலே பிறந்து, முன்னை வினைகளினாலே இப் பிறப்பிலே ஏற்பட்டுள்ள காம மயக்கத்தால், மனம் மெலிந்து அறிவு கலங்கி, காலையும் நரம்பையும் இரத்தத்தையும் தோலையும், கொழுப்பையும் பெற்றுள்ள, பொய்யான தேகமாகிய இந்த ஒன்றை, சுமந்து கொண்டு, தொண்டனாகிய நான், மலர்

மாலை சூடிய கூந்தலையும், மையை அழகமையப் பெற்ற கண்களையும், வில்லை நிகர்த்த நெற்றியையும் பெற்றுள்ள, வஞ்சிக் கொடியை ஒத்த மாதர்களின் அடிகளை வணங்கி, அழகிய தோள்களை விரும்பி, மிகவும் மெலிவடைந்து விட, தகுதியுடைய தாகுமோ.

கார் - மேகம்; (ஆகுபெயர்) வரை - மலை 'மூங்கில் விளைவது' என்னும் பொருளது; இதுவும் ஆகுபெயர். (இது இருமடி) பார் - நிலம்; 'பருமை உடையது' என்னும் பொருளது.

தேகம் - என்பு, தசை, நரம்பு முதலிய பலவகைத் தாதுக்களால் ஏற்பட்டதாதலின், 'கானரம் புதிரத்... காயமொன்று' என்றார். இதனை,

*"குடருங் கொழுவுங் குருதியு மென்பும்*
*தொடரு நரம்பொடு தோலும் - இடையிடையே*
*வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்றுள்*
*எத்திறத்த ளீர்ங்கோதை யாள்"*

என்னும் நாலடியாரானும் அறியலாம்.

இதனாலன்றோ தாயுமானவரும்,

*"மும்மச் சேறான் முழுக்கும்பி பாகமெனும்*
*"இம்மலக் காயத்துள் இகழ்ச்சிவைப்ப தெந்நாளோ?"*

என்றார்.

கூரணிந்த விழி - 'மை மிகத் தீட்டப்பெற்ற கூர்மையான கண்,' கொடியார் - 'மின்னற் கொடியை ஒத்தவர்' 'பூங்கொடியை ஒத்தவர்' எனினும் அமையும்; 'கொடுமையை உடையவர்' என்னும் பொருளுந் தொனித்தல் காண்க. 'தாள் பணிதல் - புல்லியல் மாதர் தாளை வணங்குவர் என்பது கவி மரபு.

இதனைத் துறவியாகிய சிவப்பிரகாசரும் "இறைவனே புலவியில் உமைதாள் பணிந்தார்' என்றார். இதனை,

*"ஆதி பகவன் தனது ஊடல்*
*தணிப்பான் பணிய அவ்விறைவன்*
*பாத மிறைஞ்சு மதற்கும் நெற்றிப்*
*பகையும் அல்குற் பகையுமாம்*
*சீத மதியும் அரவும்விழுஞ்*
*செயற்கு முவகை செயாமலவை*
*மாது பணியும் அதற்குமனம்*
*மகிழுமுமை தாளை வணங்குவாம்"*

என்றதனானும் அறிக.

*"தோயம் சுவற" என்றது கடல் சுவற வேல் விட்டதைக் குறிக்கும்.*

இதனை,

*'கறங்குதிரைப் பெருங்கடலும் காரவுணப்*
*பெருங்கடலுங் கலங்கக் கார்வந்*
*துறங்குசிகைப் பொருப்புஞ்சூர் உரப்பொருப்பும்*
*பிளப்பமறை உணர்ந்தோர் ஆற்றும்*
*அறங்கு வும் மகத்தழலும் அவுணமட*
*வார்வயிற்றின் அழலு மூள*
*மறங்குலவு வேலெடுத்த குமரவேள்*
*சேவடிகள் வணக்கஞ் செய்வாம்"*

என்ற பரஞ்சோதியார் வாக்கானும் அறிக.

தூய்மை - மனச் செம்மை, 'தோகை': வள்ளியம்மையார் 'தோகைபோலுஞ் சாயலை உடையவள்' என்பது பொருள்; இதில் தோகை இறக்கையைக் குறிக்கும் சொல். மயிலைக் குறிக்கும்போழ்து சினை ஆகுபெயர். 'மயில்' என்றது

வள்ளியம்மையாரைக் குறிக்கும்போது உவமை ஆகுபெயர். ஆலையும் - சர்க்கரை ஆலைகளும் என்பது பொருளாம். திரு - இலட்சுமி தேவியும், ஆ - காமதேனுவும், இநன் - சூரியனும் பூசித்து அமர்ந்த, குடி - ஊர். இந்தத் திருவாவிநன்குடி என்ற தலத்தில் திருமகளும் காமதேனுவும் சூரியனும் வந்து முருகனைப் பூசித்துப் பேறு பெற்றனர்; ஆதலால் 'திருவாவிநன்குடி' என ஊர்ப் பெயர் ஆயிற்று என்பது பழநி தலப் புராணம்.

"அரியும் பிரமனும் தொழ ஆலால முண்ட சிவபெருமான் புத்திரனே! அசுரரைத் தேவர் துயர் தீர அழித்த பெருமையையும் வேலாயுத்தையும் உடைய பெருமானே! உலகில் உடலைச் சுமந்து மாதர் மயிலில் மெலிந்தழிதல் நின் பாதத்தைத் துதிக்கும் எனக்குத் தகுதி உடையதாகுமோ? நீ அருள் செய்யாயோ என்பது குறிப்பு.

***



## திருவேரகம் (சுவாமிமலை)

18. தனனதன தனனதன தனனா னத்ததன
தனனதன தனனதன தனனா னத்ததன
தனனதன தனனதன தனனா னத்ததன - தனதான

குமர! குருபர! முருக குகனே! குறச்சி றுமி
கணவ! சரவண! நிருதர் கலகா பிறைச்சடையர்
குரகு எனந லுரையுதவு மயிலா வெனத்தினமும்
உருகாதே

குயில் மொழிநன் மடவியர்கள் விழியால் உருக்குபவர்
தெருவில் அன வரதமன மெனவே நடப்பர் நகை
கொளும் அவர்கள் உடைமைமன முடனே
பறிப்பவர்கள் அனைவோரும்

தமதுவசம் உறவசிய முகமே மினுக்கியர்கள்
முலையில் உறு துகில்சரிய நடுவீதி நிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவா உழைப்பியர்கண்
வலையாலே

சதிசெய்து அவ ரவர்மகிழ அணைமீது ருக்கியர்கள்
வசமொழுகி அவரடிமை எனமாதர் இட்டதொழில்
தனில் உழலும் அசடனையு ன்னடியேவழுத்
தவருள் தருவாயே;

சமரமொடு மசுரர்படை களமீ தெதிர்த்பொழு
தொருநெடியி லவர்கள்படை கெடவேல்
எடுத்தவனி
தனிநிருதர் சிரம் உருள ரணதூள் படுத்திவிடு
செருமீதே

தவனமொடும் அலகைநட மிடவீ ரபுத்திரர்கள்
அதிரநிண மொடுகுருதி குடிகா ளிகொக்கரிசெய்
தசைஉணவு தனில்மகிழ விடுபேய் நித்திரைகள்
பலகோடி

திமிதமிட நரிகொடிகள் கழுகு ஆடரத்தவெறி
வயிரவர்கள் சுழலஒரு தனிஆ யுதத்தைவிடு
திமிரம்தின கரஅமரர் பதிவாழ்வு பெற்றுலவு
முருகோனே!

திருமரும் புயன்அயனொடு அயிரா வதற்குரிசில்
அடிபரவு பழநிமலை கதிர்கா மமுற்றுவளர்
சிவசமய! அறுமுகவ! திருவே ரகத்திலுறை
பெருமாளே!

சூரபதுமன் முதலிய அசுரர்களின் சேனையானது, போர்த்தொழிலோடு போர்க்களத்தில் எதிர்த்துப் போர் செய்ய வந்தபோது, ஒரு நிமைப்பொழுதில் அவர்கள் படை அவர்களின் சைனியங்கள் அழிந்தொழிய வேலாயுதத்தை எடுத்து, நிலத்தில், அசுரர்களின் தலைகள் உருண்டு விழவும், போர்களத்தில் பொடி படுத்தி அழிக்கும் யுத்தத்தில் தாகத்தோடு, பேய்கள் கூத்தாடவும், வழி வழி வந்த வீரர்கள் நடுங்க, கொக்கரிக்கின்ற கொழுப்புடனே இரத்தத்தைக் குடிக்கின்ற காளிகள், மாமிசமாகிய ஆகாரத்தில் களிப்பு அடைய, விடுகின்ற பேயின் கூட்டங்கள் பல கோடிகள் கூத்தாட, நரிகளும் காகங்களும் கழுகுகளும் ஊனைத் தின்ற களிப்பினால் ஆட இரத்தவெறியைக் கொண்டுள்ள வயிரவர்கள் சுற்றிச் சுற்றிவர, ஒரு இணை சொல்லற் கில்லாத படையைப் பிரயோகித்த, ஆன்ம கோடிகளின் அஞ்ஞானமாகிய இருட்டை அகற்றும் சூரியனே! தேவலோகத்தவர்க்கு அரசனாகிய இந்திரன், வாழ்வு பெற்று உய்யுமாறு உலாவிய முருகக் கடவுளே! இலட்சுமி

தேவியை அணையும் தோள்களையுடைய; மாலும், பிரமனுடன் ஐராவதம் என்னும் வெள்ளை யானையையுடைய தேவேந்திரனும் திருவடிகளைத் துதித்து வணங்குகின்ற பழநி மலையிலும் கதிர்காமத்திலும் பொருந்தி, உயர்வடைந்து கொண்டே இருக்கும் சைவ சமயத்திற்கு நாயகனே! ஆறு திருமுகங்களை உடையவனே! திருவேரகம் என்ற திருத்தலத்தில் தங்கியருளும் பெருமானே! குமரக் கடவுளே! குருபரனே! குகக் கடவுளே! இளம் பருவத்தை உடையவளும் குறவர் குலத்தில் வளர்ந்தவளும் ஆகிய வள்ளியம்மையாரின் கணவனே! சரவணோற்பவனே! அசுரர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கியவனே! இளம் பிறை சடா பாரத்தில் அணிந்தருளிய சிவபெருமான், குருவே என்று, நல்ல புகழ்ச்சிச் சொற்களைச் சொல்லும் பெருமை வாய்ந்த மயில் வாகனக் கடவுளே! என்று கூறி, ஒவ்வோர் நாளும் மனம் உருகாமல், குயிலை ஒத்த இனிய குரலொடு கூடிய சொற்களைச் சொல்லும் நல்ல இளம் பருவப் பெண்களும், கண்களால் நெஞ்சைக் கரைப்பவர்களும், தெருக்களிலே எப்பொழுதும் அன்னப் பறவையைப்போல் நடப்பவர்களும், தம்மிடத்து ஆசை கொண்டு, சிரிக்கின்ற காளையர்கள் தம் செல்வத்தை, உடனே அபகரிப்பவர்களும், எப்படிப்பட்டவரும், தம் வசப்படும்படி, கண்டாரைத் தன் வயப்படுத்தும்படி, முகத்தை அழகு செய்துகொள்பவர்களும், தமது கொங்கைகளின்மேல் பொருந்தி இருக்கும் ஆடையை நழுவவிட்டு, நடுத் தெருவில் நிற்பவர்களும், செல்வப் பொருள் அற்றவர்களுடைய, மனமும் முறியும்படி, நழுவவிட்டு உழப்பி விடுகின்றவர்களும், கண்ணாகிய வலையினால், வஞ்சனை செய்து, தன்னிடம் வந்த ஒவ்வொருவரும் மகிழும்படி, பஞ்சணையின் மேல் மனத்தை உருகச் செய்பவர்களும், ஆகிய விலை மாதர்களின் அவர் வசத்தில் சஞ்சரித்து, அவர்களுடைய அடிமைகள் என்று சொல்லும்படி, பெண்கள் ஏவிய

தொழிலிலேயே திரிகின்ற, பயனற்றவனாகிய என்னை, உன் திருவடிகளைத் துதிக்கும் படி நின் அருளைச் செய்வாயாக.

குமர குருபர - 'என்றும் இளமைக் கோலத்தை உடைய வனே! பரனுக்கும் குருவாக விளங்கினவனே!' என்பது பொருள். நிருதர் கலகா - 'தேவர்களுக்கு இன்பஞ் செய்யும் பொருட்டுத் தருமந் தவறிய அசுரர்களுக்குத் துன்பத்தை உண்டாக்கியவனே!' என்பது பொருளாம். பிறைச்சடையர் குரு என நல்லுரை உதவும் - 'அறிவு மிக்கவர்களைத் தலைமேல் கொண்டு தாங்கும் தூய அறிவுடைய தனி முதற் கடவுளாகிய இறைவருந் தனக்குக் குரு என்று புகழும் மயில் வாகனத்தவனே!' என்பது பொருள். "தான் மாமதியுடையவன் என்பதை உயிர்கள் உணர்ந்து தன்னை யடைந்து உய்வெய்த வேண்டும் என்னுங் கருணையாலும் மதியைச் சடையிற் சூடினர்" என்பாரும் உண்டு. இதனை

*"தூமதிச் சடைமிசைச் சூடுதல் தூநெறி*
*ஆமதி யானென வமைத்த வாறே"*

என்னும் பட்டினத்தடிகள் வாக்கானும் அறியலாம்.

விலை மாதர்கள் தம்மை அழகு செய்வது காளையர்கள் மயங்கித் தம் வயமாகவே. இதனாலன்றோ,

*"மேனி மினுக்குதல் வேசையர்க் கழகு"*

என்றார் ஒளவையாரும். குலமகளிர்க்குக் கூச்சம் வேண்டும்; விலை மகளிர்க்குக் கூச்சங் கூடாது. முலைமே லிருந்த கலை சோரக் காளையர் கண்டு கருத்தழிந்து காமமீளவே தெருவில் நிற்பர் என்பதனைக் காட்ட, 'முலையிலுறு துகில் சரிய நடுவீதி நிற்பவர்கள்' என்றார். இதனாலன்றோ,

*"கூசி நிலையில்லாக் குலக்கொடியும் கூசிய*
*வேசையுங் கெட்டு விடும்"*

என்றனர் பெரியார்.

"கண் வலையாலே சதி செய்து" மான்போலும் தம் மருண்ட பார்வை என்னும் வலையால் காமுகராகிய பட்சியைப் பிடிப்பவர் தோன்றக் கிடப்பது காண்க. இதனாலன்றோ தாயுமானவரும்,

*"காமனைவா வென்றிருண்ட கண்வலையை வீசுமின்னார்*
*நாம மறந்தருளை நண்ணுநா ளெந்நாளோ?"*

என்றருளிச் செய்தனர். பரகுருவுக்கும் குருவானவர். அகத்தியர் முதலியவருக்கும் உபதேசஞ் செய்தருளியவர் ஆதலினாலும் ஆன்ம கோடிகளின் அறிவை மயக்கும் அல்லல்களை நீக்குவர் ஆதலினாலும், 'திமிர தினகர' என்றார். அயிராவதக் குரிசில் - இந்திரன்; குரிசில்: சிறந்த ஆண் மகனைக் குறிக்கும் ஆண்பாற் பெயர். கதிர் காமம் - கொழும்புத் தீவத்துள்ள கந்தக் கடவுள் திருத்தலம். 'திருவேரகம்' என்றது குடுந்தைக்கு மூன்று கல்லுள்ள சுவாமிமலையை.

கொடுமையே செய்யும் அசுரர்களைத் தேவர் பொருட்டு அழித்துக் காத்த முருகக் கடவுளே! மருட்டும் மாதர் வலையிற் சிக்கி மயங்கி மடியும் அசடனாகிய எனக்கு உன் திருவடி வழுத்தும் பேறு எய்தும் அருளைச் செய்வாயாக என்பது குறிப்பித்த தாயிற்று.

19. தனனா தனத்த தனனா தனதத
தனனா தனத்த - தனதான

மருவே செறித்த குழலார் மயக்கி
மதன் ஆகமத்தின் விரகாலே

மயலே எழுப்பி இதழே அருத்த
மலைநேர் முலைக்குள் உறவாகிப்

பெருகாதல் உற்ற தமியேனை நித்தம்
பிரியாத பட்சம் உடனேயென்

பிழையே பொறுத்துன் இருதாளில் உற்ற
பெருவாழ்வு பற்ற அருள்வாயே;

குருவாய் அரற்கும் உபதேசம் வைத்த
குகனே! குறத்தி மணவாளா!

குளிர்கான் மிகுத்த வளர்பூக மெத்து
குடகா விரிக்கு வடபால்வாழ்

திருமால் தனக்கு மருகா! உமைக்கொர்
சிறுவா! கரிக்கும் இளையோனே!

திருவே ரகத்தில் உறைவா அரக்கர்
சிரமே துணித்த பெருமாளே!

தேசிகத் திருவடிவாய், சிவபெருமானுக்கும், திருப்பிரணவ மந்திரோபதேசஞ் செய்தருளிய திருக்குமரனே! வள்ளி தேவியாரை மணந்தருள் செய்த திருக்கல்யாண கோலத்தை உடையவனே! மேற்கே இருந்து வரும்படியான திருக்காவிரி ஆற்றிற்கு. வடக்குத் திக்கில் வாழ்கின்ற, மகாவிஷ்ணுவுக்கு மருமகனே! உமாதேவியாருக்கு ஒரு புத்திரனே! யானைமுகக் கடவுளாகிய விநாயகருக்குத் தம்பியே! திருவேரகம் என்னும் திருப்பதியில் எழுந்தருளி இருப்பவனே! அசுரர்களின் சிரங்களை எல்லாம் வெட்டி வீழ்த்திய பெருமானே! வாசனையையே மிகவுங் கொண்டுள்ள. கூந்தலையுடைய பெண்கள், ஆசை மயக்கத்தினால், மன்மதன் நூலாகிய கலவி நூலின் தந்திரங்களினாலே காமத்தை மூட்டி, எச்சில் முத்தத்தை ஊட்ட, வெற்பை ஒத்த கொங்கைகளுக்குள் கலந்து கூடி, மிக்க காதலைக் கொண்டுள்ள பற்றுக்கோடு அற்றவனாகிய அடியேனை,

தினந்தினம், அகலாத அவாவோடு, என்னுடைய குற்றங்களைப் பொறுத்தருளி, இரண்டு திருவடிகளிலும் பொருந்திய, பெரிய முத்தி இன்ப வாழ்வை அடியேன் கைக்கொள்ள, அருளைச் செய்வாயாக.

'மருவே' ஏகாரம் இசை ஏகரமும் ஆம். மதனாகமம் இன்பநூல்; காம நூல் என்பாரும் உண்டு. விரகு - தந்திரம். முலைக்கு ளுறவாகி: முலைக்கு + உள் + உறவு ஆகி எனப் பிரித்துத் 'தனங்களிடத்து உள்ளம் மிகவும் ஆசை கொண்டவனாகி' எனப் பொருளுரைத்தலும் ஆம். 'தமி' தனிமைப் பொருளுணர்த்தும் ஆதரவு அற்றவன். உதவி செய்யத் துணை இன்றிருப்பவன் என்பது பொருளாம். 'குருவாய் அரற்கும்' என்றதில் உள்ள உம்மை உயர்வு சிறப்பு உம்மை. 'திருமால் மருகா' என்றது திருமாலுக்குத் தங்கை மகன் முருகக் கடவுளாதலினால் திருமாலின் புத்திரிகளாகிய சுந்திரி, அமுத வல்லிகளாகிய இருவருமே தவத்தால் வள்ளி, தேவானைகளாக வந்து முருகக் கடவுளை மணந்ததனாலும், 'மருகன்' என்றார். உமைக்கு "மாயவன் சகோதரி" என்னும் உண்மையும் அறிக.

20. தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன - தனதான.

கோமள வெற்பினை ஒத்த தனத்தியர்
காமலை ஒப்பவர் சித்தம் உருக்கிகள்
கோவை இதழ்க்கனி நித்தமும் விற்பவர்
மயில்காடை

கோகில நட்பிற வத்தொடு குக்குட
ஆரணி யப்புள்வ கைக்குரல் கற்றவர்
கோலவி ழிக்கடை இட்டும ருட்டியர் விரகாலே

தூம மலர்ப்பளி மெத்தைப டுப்பவர்
யாரையும் எத்திம னைக்குள் அழைப்பவர்
சோலைவ னக்கிளி ஒத்தமொ ழிச்சியர் நெறிகூடா

தூசுநெ கிழ்த்தரை சுற்றி உடுப்பவர்
காசுப றிக்கம றித்துமு யக்கியர்
தோதக வித்தைப டித்துந டிப்பவர் உறவாமோ;

மாமரம் ஒத்துவர் இக்குள் நெருக்கிய
சூரனை வெட்டிந ணக்குட லைக்கொடி
வாரண மெச்சஅ ளித்தஅ யிற்குக கதிர்காம!

மாமலை யில்பழ நிப்பதி யில்தனி
மாகிரி யிற்றணி கைக்கரி யிற்பர
மாகிரி யிற்றிரை சுற்றிவ ளைத்திடு மலைவாயில்

ஏமவெ யிற்பல வெற்பினின் நற்பதின்
நூலூல கத்தினில் லுற்றுறு பத்தர்கள்
ஏதுநி னைத்தது மெத்தவ ளித்ருள் இளையோனே!

ஏரக வெற்பெனு மற்புத மிக்கசு
வாமிம லைப்பதி மெச்சிய சித்த! இ
ராசத லட்சண உத்தமி பெற்றருள் பெருமாளே!

மாமரத்தை நிகர்த்த உருவத்தைக் கொண்டு, சமுத்திரத்துக்குள் ஒளித்துக்கொண்டு, துன்பங்களை உண்டாக்கிய சூரபதுமனை, சங்கரித்துக் கொழுப்பையும் குடலையும், கோழிக் கொடியைப் புகழ்ந்து கொள்ளும்படி, ஈந்தருளிய வேலாயுதத்தை யுடைம்குகப் பெருமானே! கதிர் காமம் என்னும் ஊரில் உள்ள

சிறந்த மலையிலும், பழநித் தலத்தின்கணுள்ள, இணை சொல்லுதற்கரிய சிறப்பு வாய்ந்த மலையிலும், திருத்தணிகை மலையின் மேலும், திருப்பரங்குன்றத்திலும் அலைகள் சுற்றிச் சூழ்ந்திருக்கும்படியான திருச்செந்தூர் என்னும் தலத்திலும், பாதுகாவலைக் கொண்டுள்ள மதில்கள் பல சூழ்ந்த மலைகளின் மேலும், நல்ல பதினான்கு உலகங்களிலும் மேவியமைந்து வாழ்கின்ற அடியார்கள், எண்ணியவைகள் எல்லாவற்றையும் அதிகமாகத் தந்தருளும் குமரக் கடவுளே! திருவேரகமலை என்ற எல்லாராலுஞ் சிறப்பித்துக் கூறப்பெறும், ஆச்சரிய மிகுக்கும் சுவாமி மலை என்னும் திருத்தலத்தையும், விரும்பிய, திரு உள்ளம் உடையவனே! இராசத லட்சணங்களைக் கொண்டுள்ள சிறந்த உமாதேவியார் பெற்றளித்த பெருமானே! இளமை வாய்ந்த கன்றை நிகர்த்த முலைகளை உடையவரும், மாரனை நிகர்த்த அழகையுடைய காளையர்களின் மனத்தை உருக்குகிறவர்களும், கோவைக்கனியை நிகர்த்த இதழைத் தினமுந் தினமும் விற்பவர்களும், குயிலும், நல்ல புறாவும், கோழியும், காட்டின் கண்ணுள்ள பட்சிகளும் ஆகிய இவற்றின், பலவகையாகிய ஒலிகளை, கற்றவர்களும், அழகிய கண்களின் கடை நோக்கினாலே மயக்குகின்றவர்களும் பெரிய தந்திரச் செயல்களால் நறுமணங் கமழும் புகைகள் ஊட்டப்பெற்ற புட்பங்கள் விரித்த படுக்கையாகிய மெத்தையில் படுப்பவரும், எத்தகையவர்களையும் ஏமாற்றித் தங்கள் வீட்டிற்கு அழைப்பவர்களும், காவினிடத்தே வாழும் அழகு வாய்ந்த கிள்ளையை நிகர்த்த சொல்லை உடையவர்களும், ஒழுங்காகக் கட்டப்பெறாத ஆடையைத் தளர்த்தி, இடுப்பைச் சுற்றி கட்டிக் கொள்பவரும், கைப்பொருளைப் பிடுங்கிக் கொள்ளத் திரும்பத் திரும்ப அணைந்து கொள்பவர்களும், வஞ்சக வித்தையைக் கற்றுப் பழகி, அதற்கு ஏற்ப நடிக்கின்றவர்களும் ஆகிய வேசையர்களின் கூட்டுறவு ஏற்றதாகுமோ, ஆகாது.

கோமளம் - 'இளமை' என்னும் பொருளது; இது வடமொழி என்பர். காமனை ஒப்பவர் - கண்டார் மனத்தை வயப்படுத்தும் எழில் வாய்ந்த மன்மதன் 'காமன்னை' ஒப்பவர் என்பது தொகுத்தல் விகாரம் பெற்று 'காமனை' என்றாயது; இதற்குப் பொருள்; 'கற்பகச் சோலைக்கு இறைவனாகிய இந்திரனை ஒத்த புணர்ச்சியை விரும்புவோர்களை' என்றும் பொருள் கூறுவர். கோவை இதழ்கனி - கொவ்வைக் கனிபோலும் இதழ். கோவை இதழ்க்கனி நித்தமும் விற்பவர் - ஏனையர் வணிகத்தில் விற்கும் பண்டம் விற்றுப்பொருள் வாங்கிய பின் வணிகரை விட்டுப்போம். இவ் வேசையர் வணிகத்திலோ இவர் விற்பனை அவர் தரும் பொருளை வாங்கிய பின்னும் இவரிடமே இருக்கும். வாங்கியவர்கள் பெற்றிடும் பயனினும் இவர் அதிகம் பயன் பெறுவர். அவர் கைப்பொருளும் இவர் கைப்பொருளதாகும். இவர் விற்றன இவரிடம் விட்டகலா, ஆதலின், 'நித்தமும் விற்பவர்' என்றார். இதனை,

*தம்மவை ஈந்து பின்னம் தருபொருள் கொள்ளும் கொள்கை*
*அம்மநல் வணிக மன்றே அடைதம தம்ம தாகச்*
*செம்மிய நலங்கள் சேர்ந்தோர் பெற்றதிற் சிறக்கப்பெற்றே*
*அறம்பொருள் வாக்குஞ் சில்லை அணிவணி கந்தான்*
*நன்றே"*

என்றதனால் அறியலாம். இன்னும்,

*"என்னையே புணரு வோர்கள் எனக்குமோர் இன்ப நல்கிப்*
*பொன்னையுங் கொடுத்துப் பாதப் போதினில்*
*வீழ்வதேனோ?"*

என்ற அடிகளாலும் அறியலாம்.

நிறத்தாலும் வடிவத்தாலும் கொவ்வைக்கனி இதழுக்கு உவமம் ஆயிற்று. நற்புறவத்திடு என்பதனை, 'நட்புறுவத்திடு'

எனக்கொண்டு, 'யாரும் நேசிக்கும் புருவத்திடு' எனப் பொருளுரைப்பர். குக்குடம் - கோழி. ஆரணியப்புள் - காடுகளில் வசிக்கும் பறவைகள், கற்றவர் - காளையர் மனம் அவசமாகி இன்புறப் புட்குரல் காட்டக் கற்றவர்கள். புட்குரல் இன்ப மிகுதியால் தாமே இயல்பாய் மாதர்களின் கண்டத்தில் இயல்பாய் எழும். கோலம் விழி - அழகிய விழி; கோல் + அம் + விழி - 'பாணம் போலும் அழகிய விழி' என்பர். தூமம் மலர் பளி - 'பஞ்சின் துகள்களா லாக்கிய அணைகொண்ட மலர் பரப்பிய படுக்கை' என்பதும் ஆம்; யாரையும் - 'பொருள் தரின் எத்தகைய இழிந்தோரையும்' என்பது பொருளாம்; 'எத்தகைய விரக்தியுடையவரையும் தம் வயமாக்கி' எனினும் ஆம்.

*"நல்லசிவ யோகரையும் போகியரா ஆக்கவல*
*நஞ்சக் கண்ணின்*
*வல்லனைய சொல்லுமுலை வஞ்சியரின்*
*மிஞ்சுபடு வலையிற் சிக்கி"*

என்ற அடிகளும் காண்க. 'காசு பறிக்க மறித்து முயக்கியவர்' என்றது. 'கண் காட்டிப் புண் காட்டிக் காசுபறி வேசையரை. இதனை,

*"ஆமாபோ னக்கி யவர்கைப் பொருள்கொண்டு*
*சேமாபோற் குப்புறூஉஞ் சில்லைக்க ணன்பினை*
*ஏமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே*
*தாமாம் பலரா னகை"*

என்ற நாலடியார் அடிகளோடு ஒப்பிடுக. தோதகம் - வஞ்சகம், உவரி - சமுத்திரம்; 'உப்பைத் தன்னிடத்து உடையது' என்பது பொருள். சித்த இராசத லட்சண உத்தமி - அருட்சித்தம் கொண்ட இராஜ லட்சணங்கள் பொருந்திய சிறந்த உமாதேவி; 'இராசத லட்சண உத்தமி' என்பதற்கு, 'இரசோகுண வடிவு கொண்டுள சத்தி' என்பதும் ஆம்.

உமையாள் புத்திரனே! அடியார் வேண்டுவன அருளும் குமரக் கடவுளே! வஞ்ச மாதர் உறவு எனக்குத் தக்கதாமோ? ஆகாது. ஆதலின், அதனை நீக்கி அடியேனுக்கு உன் திருவருளைச் செய்க என்றதாம்.

21. தந்தன தானதான தந்தன தானதான
தந்தன தானதான - தனதான

வஞ்சக லோபமூடர் தம்பொருள் ஊர்கள்தேடி
மஞ்சரி கோவைதூது பலபாவின்

வண்புகழ் பாரிகாரி என்று ஆசை வாதுகூறி
வந்தியர் போலவீணில் அழியாதே

செஞ்சரண் ஆதகீத கிண்கிணி நீலமாலை
திண்திறல் மேல்மயூர முகமாறும்

செந்தமிழ் நாளுமோதி உய்ந்திட ஞானமுறு
செங்கனி வாயிலோர்சொ லருள்வாயே;

பஞ்சவன் நீடுகூனு மொன்றிடு தாபமோட
பைந்தமிழ் வாதுகூறு சமணமூகர்

பண்புறு பீலியோடு வெங்கழி வேறவோது
பண்டித! ஞானநீறு தருவோனே!

குஞ்சர சாலைமேவு பைம்புனல் மூதுலாவு
குன்றவர் சாதிகூடி வெறியாடி

கும்படு நாடுவாழ்வு தந்தவ ரோடுவீறு
குன்றுதொ றாடன்மேவு பெருமாளே!

பாண்டியனது மிகுந்த முதுகு வளைவையும் ஏற்படும் நீங்கா தமைந்த காய்ச்சல் பிணியையும் நீங்கவும், சமய வாதம் பேசிய, சமணர்களாகிய ஊமைகள், நற்குணம் இல்லாத மயில் இறகோடு, கொடிய கழுவிலே ஏறவும், செழுமையான தமிழ்ப் பதிகங்களை, திருவாய் மலர்ந்து பாடி அருளிய புலவனே! அழகிய திருநீற்றைத் தந்தருள்வோனே! யானைகள் வசிக்கும் சாலைகளையுடைய பசுமையான தினைப்புனக் கொல்லைகளில், திரிகின்ற வேடர் கூட்டங்கள், ஒன்று சேர்ந்து வெறி ஆட்டம் ஆடி கும்பிடப் பெற்றவனே! கும்பிட்ட அவர்களுக்கு அவர் விரும்பும் உலக வாழ்வைத் தந்து அவர்களுடனே பெருமை மிக்குச் சிறந்த மலைகளில் எல்லாம் திருவிளையாட்டைச் செய்யும், முருகப் பெருமானே! வஞ்ச குணத்தையும் ஈயாமைத் தன்மையையும் கொண்டுள்ள மூடர்களின், பொருளுக்காக, ஊர்களைத் தேடி, மஞ்சரி கோவை தூது என்னும் சிற்றிலக்கியங்களை பலவகைப்பட்ட பாக்களினால் வள்ளன்மையால் மிக்க புகழைக் கொண்ட பாரியே என்றும், காரியே என்றும், புகழ்களை வாதித்துச் சொல்லி, புகழ்த்துதி பாடுபவர்களைப் போல, வீணாக, அழிந்து கெடாது, சிவந்த திருப்பாதங்களையும், இன்னோசையை உடைய கிண்கிணியையும், நீலோற்பல மலரால் ஆகிய மாலையையும் உறுதியோடு கூடிய வலிய வேலாயுதத்தையும், மயிலையும், ஆறு திருமுகங்களையும், செழுமையான தமிழ்ப் பாட்டுக்களால் தினந்தினமும், பாடி வாழ்த்திட ஞானம் சுரக்கும் சிவந்த கோவைக் கனியை ஒத்த அழகிய வாயால், ஒரு திருமொழியை அருளிச் செய்வாயாக.

மஞ்சரி - பூங்கொத்து; அது போல்வதோர் மாலைக்கு உவமை ஆகுபெயராயிற்று. கோவை - துறைகள் ஒருங்கு அமைத்துப் பாடப்படும் நூல். இது அகப்பொருட்கோவை,

புறப்பொருட்கோவை என இருபாலது; இங்கு அகப்பொருட் கோவையைக் குறித்தது. தூது - தூதிற்கு உரியனவாக எடுத்தோதப்பெறும் பத்துப் பொருள்களுள் ஒன்றை தூதுபோமாறு விடுவிப்பதாகிய ஒருவகை நூல். பாரி, ஓரி - கடை எழுவள்ளல்களைச் சேர்ந்தவர். வண்புகழ் - 'வள்ளன்மையாற் புகழ் கொண்டவர்கள்' என்பது பொருள். வந்தியர் - துதி பாடகர்; பண்டைக் காலத்துத் தமிழ்ப் பெருமக்களையும் மன்னரையும் துதிபாடி அவர் வீரம் கொடை, புகழ் முதலியவற்றை இசைத்துப் பாடுபவர். நீலம் - குறிஞ்சி நில மலர், செந்தமிழ் - செழுமையான தமிழ்; 'குற்றமற்ற சீரிய தமிழ்' எனப் பொருளுரைப்பாரும் உண்டு. சொல் அருள் - 'திருவாக்கருள்' என்றதாம்.

புல்லரைப் பாடாது நின் திருவடி பாடத் திருவாக்கருள் என்றதாம். இதனாலன்றோ.

*"தருக்காவ லாவென்று புல்லுரைப் பாடி தளவிலைமா*
*தருக்காவ வாய்மயி லேகுயி லேயன்று தாமதராய்த்*
*தருக்காவ லாநெறிக் கேதிரி வீர்"*

எனப் பிள்ளைப் பெருமாளருங் கூறினார். பஞ்சவன் - பாண்டியன்; ஈண்டுக் கூன் பாண்டியனைக் குறித்தது.

'பஞ்சவனீடு... நீறு தருவோனே' என்றது திருஞான சம்பந்தர் மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார் இவர்கள் விருப்பப்படி மதுரை சென்று சமணரை வென்று பாண்டியன் கூனை நீக்கிய வரலாற்றை, முருகக் கடவுளே திருஞான சம்பந்தராக அவதரித்தார் என்னுங் கொள்கை யுடையவராதலின் இவ்வாறு கூறினார். 'ஞான நீறு தருவோனே' என்றது சமணர்கள் ஞான சம்பந்தர் எழுந்தருளி இருக்கும் மடத்தில் தீ வைத்தபோது சமணர் செயலென அறிந்து அத் தீ பாண்டியன் மேலதாக,

*"செய்ய னேதிரு வாலவாய் மேவிய*
*ஐயனே அஞ்ச லென்றருள் செய்யனை*
*பொய்ய ராமம ணார்கொளு வுஞ்சுடர்*
*பைய வேசென்று பாண்டியற் காகவே"*

பாண்டியன் சுரங்கொண்டான்: அமணரால் அச்சுரம் தீர்க்க முடியவில்லை; திருஞான சம்பந்தர் நீறு பூசிச் சுரத்தை நீக்கிச் சைவத்தை நிறுத்தின ராதலின், 'குஞ்சரம்' வடசொல் என்பர். வெறியாட்டு - இது குறிஞ்சி நிலமக்கள் வேலினைக் கொண்டு முருகனை வணங்கும் ஒரு வணக்கம்.

வேடர்க்கும் அருள் செய்யும் கருணையுடையை ஆதலின் நீ எனக்கு அருள் செய்யாதிராய் என்றது நோக்கத்தக்கதாகும்.

22. தனனதன தந்தனத் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந்
தனனதன தந்தனந் தந்தனந் தந்தனந் - தனதான

**புணரியும் அனங்கன் அம் பும்சரும் புங்கருங்**
**கயலினொடு கெண்டையும் சண்டனும் கஞ்சமும்**
**புதுநில வருந்தியுந் துஞ்சுநஞ்சும் பொருப்**
**பேறிவேலும்**

**பொருவெனவி கன்றகன் றங்குழங் குஞ்சுழன்**
**றிடந்தகடை சிவந்துவஞ் சம்பொதிந் திங்கிதம்**
**புவியிளைஞர் முன்பயன் றம்பொனின் கம்பிதக்**
**குழைமோதி**

குணலையொடு மிந்த்ரியஞ் சஞ்சலங் கண்டிடும்
படியமர்பு ரிந்தருஞ் சங்கடஞ் சந்ததங்
கொடுமைசெய்து சங்கொடுஞ் சிங்கிதங்
குங்கடைக் கணினார்பால்

குலவுபல செந்தனந் தந்துதந் தின்புறுந்
த்ரிவிதகர ணங்களுங் கந்தநின் செம்பதங்
குறுகும்வகை யந்தியுஞ் சந்தியுந் தொந்தமற்
றமைவேனோ;

துணிர்விரிக டம்பமென் தொங்கலும் பம்புறும்
புழுகுமச லம்பகஞ் சந்தனங் குங்குமந்
தொகுகளப முந்துதைந்தென்றுநன் கொன்றுபத்
திருதோளுந்

தொலைவில்சண் முகங்களுந் தந்த்தமந் த்ரங்களும்
பழநிமலை யும்பரங் குன்றமுஞ் செந்திலுந்
துதிசெயுமே
யன்பர்தஞ் சிந்தையும் சென்று செய்ப்
பதிவாழ்வாய்

கனபணபு யங்கமுங் கங்கையும் திங்களுங்
குரவுமறு குங்குறுந் தும்மையுங் கொன்றையுங்
கமழ்சடிலம் சம்புவங் கும்பிடும் பண்புடைக்
குருநாதா!

கணகுடகில் நின்றகுன் றந்தருஞ் சங்கரன்
குறுமுனிக மண்டலங் கொண்டுமுன் கண்டிடுங்
கதிசெய்நதி வந்துறுந் தென்கடம் பந்துறைப்
பெருமாளே!

கொத்துக் கொத்தாக விரிந்த, கடப்ப மலரினாலாய மென்மையான மாலையும், திமிர்ந்து நெருங்கும் புனுகும், பொதிய மலையில் விளைந்த சந்தனமும், குங்குமமும், நறுமணப் பொருள்கள் பலவற்றோடும் கூட்டி அமைக்கப்பெற்ற கலவைச் சாந்தும், செறிந்து, எப்பொழுதும் நன்மை கொண்டுள்ள, பன்னிரண்டு திருத்தோள்களையும் என்றும் அழியாது நிலைபேறுடைய ஆறு திருமுகங்களையும் தந்திர மந்திரங்களையும் பழநி மலையிலும், திருப்பரங்கிரியையும், திருச்செந்தூரையும் துதிக்கும் உண்மை அடியார்களின் கருத்துக்களில் அவர்களுக்கு அருள் செய்தற்குக் காட்சி கொடுத்து, வயலூரில் எழுந்தருளி இருப்பவனே! கூட்டமாகிய படத்தையுடைய அரவங்களையும், கங்கை ஆற்றையும், நிலவினையும், குரவ மலரும் அறுகம் புல்லும் சிறிய தும்பைப்பூவும் கொன்றை மலரும், மணம் வீசப் பெற்ற சடாபாரத்தையுடைய சிவபெருமானும், தொழப்பெறும் சிறப்பைக் கொண்டுள்ள குருநாதனே! மேன்மையுடைய குடகு நாட்டில் நிலைபெற்ற குடகு மலை பெற்ற, சிவபெருமானுக்குப் பிரியமுடையவருமான அகத்திய முனிவர், கெண்டிகையாகிய கரகத்தில் முன்னர்க் கொண்டுவந்துவிட்ட, விரைவுடைய காவிரி நதி, வந்து பாயும் தென் கடம்பந்துறை என்ற திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! கடலும், மன்மதன் பாணமாகிய நீலோற்பலமும், வண்டும், கருத்த கயல் மச்சத்தோடு சேல் மச்சமும், இயமனும், தாமரை மலரும், கிரௌஞ்ச மலையைப் பிளந்த வேற்படையும், ஒப்பானது என்று சொல்லும்படி அவைகளோடு போர் செய்து, அங்கும் இங்கும் பிறழ்ந்து, மத்தியிலும் இருகடைப் புறங்களிலும் சிவப்பு நிறங்கொண்டு வஞ்சகத்தன்மை நிறைந்து, இன்பக் குறி பலவற்றைப் புவியில் உள்ள காளையரிடம் காட்டி, அழகிய பொன்னாற் செய்யப்பெற்ற அசைந்து கொண்டிருக்கும்

குண்டலங்களிற் சென்று தாக்கி, கூத்துடன், பஞ்சேந்திரியங்களும் சஞ்சலம் அடையும்படி, போர் செய்து, நீங்காத துன்பத்தையும் கொடுமைகளையும் எப்பொழுதும் உண்டாக்கி, சங்குபோலும் வெண்மையை உடைய விஷம் தங்குகின்ற கடைக்கண்களைக் கொண்டுள்ள மாதர்களிடத்தில், விளங்கும் பல செம்பொன்னைக் கொடுத்துக் கொடுத்து, இன்பத்தை அடைகின்ற, மனம், வாய், மெய் என்னும் முக்கரணங்களும், கந்தக் கடவுளே! தேவரீரின் செம்மையைத் தரும் திருப்பாத மலர்களை அடையும் விதத்தை, மாலையிலும் காலைவேளைகளிலும் உலக சங்கடம் நீங்கி, நின் பத்தியிலேயே பொருந்தி இருப்பேனோ?

புணரி - கடல்; 'தரையோடு சம்பந்தப்பட்டிருப்பது' என்பது பொருள்; அநங்கன் - மன்மதன்: இது ந + அங்கன் என்னும் வடமொழி; 'தேகம் இல்லாதவன்' என்பது பொருள்; உருவிலி, மெய்யிலான் என்பன தமிழ்; 'அநங்கன் அன்பு' ஈண்டு நீலோற்பலத்தைக் குறித்தது; அவன் மலர்ப்பாணங்களில் நீலோற்பலமே மிக்க கொடுமை உடையது ஆதல்பற்றி, கயல் - கெண்டைமீனின் வகைப் பேதம். கடல், குவளை, வண்டு, கருங்கயல், கெண்டை, யமன், தாமரை, சகோரம், நஞ்சு, வேல் இவையனைத்தும் கண்ணுக்குவமைப் பொருள்கள், கண்ணாற் காமுகரைப் படுக்கும் காரிகையார்க்குச் செம்பொன் தந்து தந்து இன்படையும் என் முக்கரணமும் நின் திருவடி சேர்த்துவனோ, சேர்த்தாவிடின் நீ சேர்த்துமாறு அருள் புரிய வேண்டும் என்பதாம்.

'செம் பொன் தந்து தந்து; மிகுதிப் பொருளில் அடுக்கியது, தோளில் மார்பில் தொங்குவதாதலின் மலர் மாலைக்குத் 'தொங்கல்' எனப் பெயராயிற்று. அசலம் பசுஞ்சந்தனம் - பொதியமலையில் விளையும் சந்தனம் சிறப்புடையதென்பர்: பொதியமலைக்கும் இதனானே 'சந்தனவெற்பு' என்னும் பெயர்

எய்திற்று. செய்ப்பதி - வயலூர்; செய் - வயல். 'சம்புவும்' என்பதில் உள்ள உம்மை உயர்வு சிறப்பு. 'சம்பு' - 'ஆன்மாக்களுக்குச் சுகத்தை உண்டாக்குபவன்' என்னும் பொருள்பற்றி வந்த சிவன் பெயர். 'சங்கரன் குறுமுனி' - 'சிவபெருமானின் அருள்பெற்ற குறுமுனி' எனவும், 'சிவபெருமானை ஒத்த குறுமுனி' எனவும் பொருள் கூறுவர்; காவிரியை அகத்தியர் தமது கமண்டலத்திற் கொண்டு வந்து தந்தார் என்பது புராணம். இதனை.

*"கஞ்ச வேற்கையிற் காந்தமன் வேண்ட*
*அமர முனிவன் அகத்தியன் றனது*
*கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை'*

என்னும் மணிமேகலை அடிகளாலும் அறியலாம்.

அகத்தியர் கொண்டு வந்த கமண்டல நீராகிய காவிரியை விநாயகக் கடவுள் இந்திரன் வேண்டுகோளுக்காகக் கிருபை கொண்ட காகமாக ஏறிக் கவிழ்த்து இந்திரன் புவியில் பூசைக் கேற்படுத்திய நந்தவனத்தைச் செழிப்பித்தார் எனவும் கூறும் புராணம். இதனை,

*"சுரகு லாதிபன் தூய்மலர் நந்தனம்*
*பெருக வார்கடற் பெய்த வயிற்றனோன்*
*கரக நீரைக் கவிழ்த்த மதகரி*
*சரண நாளுந் தலைக்கணி யாக்குவாம்"*

என்ற பிரபுலிங்கலீலைக் காப்பாலும் அறியலாம்.

கதி செய் நதி - 'வேகத்தோடு பாயும் நதி' தோய்ந்தாருக்குப் பாவத்தைப் போக்கி நற்கதியைத் தரும் நதி எனப் பொருளுரைத்தலும் ஆகும்.

***

## திரிசிராமலை

23. தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன – தந்ததான

தறையின் மானிடர் ஆசையி னான்மடல்
அழுது மாலருண் மாதர்கள் தோதக
சரசர் மாமலர் ஓதியி னால்இரு கொங்கையாலும்

தளர்மின் நேரிடை யால்உடை யால்நடை
அழகி னான்மொழி யால்விழி யால்மருள்
சவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ?

பறவை யானமெய்ஞ் ஞானிகண் மோனிகள்
அனுகொ ணாவகை நீடுமி ராசிய
பவன பூரக வேகிக மாகிய விந்தநாதம்

பகர்ஒ ணாதது சேரஒ ணாதது
நினை ஒணாதது வானத யாபர
பதிய தானச மாதிம னோலயம் வந்துதாராய்;

சிறைவி டாதநி சாசரர் சேனைகண்
மடிய நீலக லாபம தேறிய
திறலவி நோதச மேள! த யாபர! அம்புராசி

திரைகள் போல்அலை மோதிய சீதள
குடக காவிரி நீள்அலை சூடிய
திரிசி ராமலை மேலுரை வீர! கு றிஞ்சிவாழும்

மறவர் நாயக! ஆதிவி நாயகர்!
இளைய நாயக! காவிரி நாயக
வடிவி னாயக! ஆனைதன் நாயக எங்கண்மானின்

மகிழு நாயக! தேவர்க ணாயக
கவுரி நாயக னார்குரு நாயக!
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே!

சிறைக்களத்தை விட்டு நீங்காத அசுரர்களுடைய சயினிங்கள், அழியும்படி நீல வண்ணத்தை உடைய மயிலின்மேல் ஏறியருளிய, வல்லமையும் அதிசயிக்கத் தக்க அலங்காரமும் பொருந்தி யுள்ளவரே! கருணையை உடையவரே! கடலினது, அலைகளைப் போன்று, அலைகள் மோதுகின்ற குளிர்ச்சி வாய்ந்த குடகு மலையிலிருந்து வரும் காவேரியாற்றின். பெரிய அலைகள் பொருந்தப்பெற்ற திரிசிர மலையின் மேலே வீற்றிருக்கின்ற வீரனே! மலைப் பக்கங்களில் வசிக்கின்ற வேடர்கள் தலைவனே! முதன்மையாக நிற்கும் விநாயகக் கடவுளுக்கு. தம்பியாக வந்த தலைவனே! காவேரிக்குத் தலைவனே! இனிய அழகிய வடிவத்தையுடைய நாயகனே! தெய்வயானை அம்மைக்குத் தலைவனே! எங்களுடைய தேவியாகிய வள்ளியம்மையா ரிடத்தில் களிப்புக் கொண்டருளும் தலைவனே! தேவர்களுக்குத் தலைவனே! உமாதேவியாரின் கணவராகிய சிவபெருமானுக்கு, குருமூர்த்தியாய் நின்ற தலைவனே! அழகு அமைந்த மலைகள் எல்லாவற்றிலும் பொருந்தியிருக்கின்ற, தலைவனே! பூமியில் வாழ்கின்ற ஆடவர், கொண்ட காதலினால் மடலேறுதற் பொருட்டு உருவத்தை எழுதுகின்ற, காம மயக்கத்தைத் தருகின்ற பெண்களாகிய, வஞ்சகமுள்ள காம விளையாட்டினர், சிறந்த மலரணிந்த குழலாலும், இரு முலைகளினாலும் சோர்வு கொள்ளும் மின்னர்கொடியை ஒத்த இடுப்பினாலும், ஆடையினாலும், நடையின் அழகினாலும், சொற்களினாலும் கண்களினாலும் மயங்குகின்ற இளைத்த நாய்போலும் அடியனேன், மிகவும் வாட்டமடைந்து மயக்கங் கொள்ளுதல் தகுமானதா? ஓரிடத்தும் பற்றுவையாது பறவை போல எங்குந்

திரியும் உண்மை ஞானிகளும், மௌன விரதியரும் சேர முடியாதபடி மிகுந்த இரகசியமானதும், உயிர்க் காற்றை ஒடுக்கிப் புரியும் யோகத்தில், சேர்ந்த விந்து நாதங்களால் சொல்ல ஒணாததும், சேர முடியாததும், நினைக்க முடியாததும் ஆன, அருளோடு கூடிய இடமான, மனம் லயப்படுவதாகிய சமாதியை, எழுந்தருளிவந்து அடியேற்கு அளிப்பாயாக.

'தரையின்' எதுகை நோக்கி றகரம் வலிக்கப்பெற்றது. 'மானிடர்' ஈண்டு ஆண்பாலைக் காட்டி நின்றது; ஏனெனின், பெண்கல் மடலேறல் இன்மையின், 'மடல்' என்பது களவின் வழியொழிகிப் பாங்கி மதியுடம்படுத்துத் தன்கருத்து அவட்கறிவித்த பின்பு தழையும் கண்ணியுங் கொண்டு நின்ற தலைமகன் அவளான் முடிப்ப வெண்ணிய கருமம் முடியாமையுணர்ந்து இனி மடலூர்ந்தேனும் இவளை எய்துவன் என்னும் துறைக் கூற்றாம். அது காமம் கை மிக்க வழி நிகழ்வது இத்துறைச் செயலை வந்த செய்தலென்பர் நக்கீரனார். இதனை,

*"மாவென மடலு மூர்ப் பூவெனக்*
*குவிமுகி ழெருக்குங் கண்ணியுஞ் சூடுப*
*மறுகி னார்க்கவும் படுப*
*பிரிது மாகுப காமங் காழ்க்கொளினே"*

*"காய்ச்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து*
*வீசின போதுள்ள மீனிழந் தார்வியன் றென்புலியூ*
*ரீசன் சாந்து மெருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப்*
*பாய்ச்சின மாவென வேறுவர் சீறூர்ப் பனைமடலே"*

என்னும் திருக்கோவையார் செய்யுளானும்,

*காம முழந்து வருந்தினார்க் கேம*
*மடலல்ல தில்லை வலி"*

என்னும் திருக்குறளானும் அறியலாம்.

மால் அருள் மாதர்கள் - காம மயக்கந் தரும் பெண்கள்; ஓதியினால் இரு கொங்கையால், நூலிடையால், உடையால், நடையால், அழகினால், மொழியால், விழியால், 'மருள்சவலை நாயடியேன் மிகவாடி மயங்கலாமோ' என்பது; மயங்கல் கூடாது என்பது பொருளாம்.

நாய் அடிமைத்திறத்தில் சிறந்ததினாலும், அன்பு மாறாத் தன்மையாலும் உவமம், இதனை.

*"யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்*
*கேண்மை தழீஇக் கொளல் வேண்டும் - யானை*
*யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேன்*
*மெய்யதா வால்குழைக்கு நாய்"*

என்ற நாலடியாரானுங் காண்க. நாய், கக்கியதை உண்ணும் இழிவுத் தன்மை உடையது; ஆதலின், வெறுத்ததை விரும்பி விரும்பிக் கொள்ளுதலால் நாயை உவமங் கூறுவர்.

*"தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே*
*சிற்றிடையிலே நடையிலே*
*சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே*
*சிறுபிறை நுதற் கீற்றிலே*

*பொட்டிலே யவர்கட்கு பட்டிலே புனைகந்த*
*பொடியிலே யடிமேலே மேற்*
*பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே*
*புந்திதனை நுழையவிட்டு*

*நெட்டிலே அலையாம லறிவிலே பொறையிலே*
*நின்னடியார் கூட்டத்திலே*
*நிலைபெற்ற அன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான*
*ஞேயத்தி லேயுனிருதாண்*

*மட்டிலே மனதுசெல நினதருள மருள்வையோ*
*வளமருவு தேவையரசே!*
*வரைராஜ னுக்கிருகண் மணியா யுதித்தமலை*
*வளர்காத லிப்பெ ணுமையே!*

என்ற தாயுமானவர் வாக்கு ஈங்கு ஒப்பிட்டுக் காணத்தக்கது.

ஒண்ணா எனற்பாலது 'ஒணா' எனவும், ஒண்ணாதது, எனற்பாலது. 'ஒணாதது' எனவும் வந்தன தொகுத்தல் விகாரம். கலாபம் - ஈண்டுத் தோகையை உடைய மயிலுக்காய சினை ஆகுபெயர். அம்புராசி - கடல்; இது வடமொழி. திரிசிரன் என்னும் அரக்கனது மலையாதலின், திரிசிராமலை என்றாயது.

'நாயக' என்னும் சொல் ஒரே பொருளிற் பன்முறை வந்தது சொற்பொருட் பிரிதினிலையணி. வள்ளியம்மை இச்சா சத்தியராதலினாலும், உலகுத் தொழில் நடத்தற்கு வள்ளி யம்மையாரை மணந்தன ராதலினாலும், வள்ளியம்மையார் மானிடச் சிறுமியாய் வேடர் குலத்தில் வளர்ந்தமையாலும், 'எங்கண் மானின் மகிழு நாயக' என்றார். 'வடிவ தாமலை யாவையு மேவிய' என்றது 'மலை வடிவங் கொண்ட எல்லா இடத்தும்' என்பது பொருள் குறிஞ்சிக் கடவுள் ஆதலின், இதனை,

**"சேயேன் மேய மைவரை உலகமும்"**

என்ற தொல்காப்பியத்தானும் அறியலாம். இதனானன்றோ,

**"குன்றுதோ றாடலி நின்றதன் பண்பே"**

என்றார் திருமுருகாற்றுப் படையினும்.

எவர்க்கும் நாயக! தகாததாய மாதர் மயக்கிற் செல்லும் மாதர் முயக்கிற் கிடக்கும் என்னை ஆட்கொண்டு 'சமாதி மனோலயம்' என்னும் நின்னையே மனத்துப் பாவனை பண்ணி அடையும் பேரின்பப் பெருக்கை அடியேன் பெறும்படி அருள் புரிக என்பது வேண்டியதாம்.

* * *

## திருப்போரூர்

24. தனத்தா தானதந்த
தனத்தா தானதந்த
தனத்தா தானதந்த - தனதான

உருக்கார் வாளிகண்கள்
பொருப்பார் வார்தனங்கள்
உரைத்தேன் வாலசந்த்ர நுதனூலாம்

உருச்சேர் நீள் மருங்குல்
பணைத்தோள் லுதிகொண்டல்
உவப்பா மேல்விழுந்து திரிவோர்கள்

அருக்கா மாதர் தங்கள்
வரைக்கே ஓடிஇன்ப
வலைக்கே பூணுநெஞ்சன் அதிபாவி

அசட்டால் மூடுகின்ற
மயக்கால் மாயுமிந்த
அவத்தால் ஈனமின்றி அருள்வாயே;

எருக்கார் தாளிதும்மை
மருச்சேர் போதுகங்கை
யினைச்சூ டாதிநம்பர் புதல்வோனே!

இருக்கா லேநினைந்து
துதிப்பார் நாவில் நெஞ்சில்
இருப்பா யானைதங்கு மணிமார்பா!

செருக்கா லேமிகுந்த
கடற்சூர் மாளவென்ற
திறற்சேர் வேல்கைகொண்ட முருகோனே!

தினைக்கோர் காவல்கொண்ட
குறத்தேன் மாதுபங்க!
திருப்போ ரூரமர்ந்த பெருமாளே!

எருக்கு ஆத்தி கூதாளி என்னும் இவைகளின். நறுமணம் பொருந்திய. மலர்களையும். கங்கா நதியையும். சூடியருளும் ஆதியாக விளங்கும் சிவபெருமானுக்கு, புத்திரனே! இருக்கு வேதத்தாலே. எண்ணித் துதிப்பவர்களினுடைய நாவிலம் மனத்திலும் வீற்றிருப்பவனே! தெய்வயானை தங்கப்பெற்ற அழகிய மார்பையுடையவனே! அகங்காரம் அதிகரித்த, கடலில் மாமர வடிவமாக நின்ற சூரபதுமனை, உருவம் மாறி ஒழிய வென்ற. வலிய வேலை. திருக்கரத்திலே தாங்கியிருக்கிற. முருகக் கடவுளே! தினைப்புனத்தில் காவலாக இருந்த, குறவர் பெண்ணாகிய வள்ளி நாயகியாரை ஒரு பக்கத்தில் வைத்துக்கொண்டு விளங்குபவனே! திருப்போரூர் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! உருக்கு இரும்பினாற் செய்வதாகிய. கணையை ஒத்த, விழிகளாலும் மலையை நிகர்த்த கச்சையணியப் பெற்ற முலைகளினாலும், சொல்லும் அமுது கொப்பளிக்கும், பிறைத் திங்களை ஒத்த நெற்றியையும் நூலை ஒத்த அழகு பெற்ற அழகு மிகுந்த இடையையும் வேயை நிகர்த்த தோளையும், மேகத்தை நிகர்த்த குழலையும் கொண்டு மகிழ்ச்சியாக, முற்பட்டு மேலே விழுந்து திரிவோர்களாகிய அருமையான, பெண்களுடைய இடத்திற்கு, ஓடிச் சென்று இன்பமாகிய வலைக்கு, கருதுகின்ற மனத்தை உடையவனும், மிகுந்த பாவத்தைச் செய்பவனுமாகிய யான், குற்றத்தினாலும், கவிகின்ற மயக்கத்தினாலும், அழிகின்ற, இந்த அவத்தால் இந்தக் கேட்டால், குறைவில்லாமல், கருணையைச் செய்வாயாக.

'உரைத்தேன் வாலசந்திரன்' இதற்கு 'உயர்வு பொருந்திய பால சந்திரன்' என்பது பொருளாம். நீண் மருங்குல் - அழகு மிகுந்த இடை; கொண்டல் - மேகம் 'நீரைக் கொண்டு இருப்பது' என்பது பொருள்! 'கொண்டல்' என்றமையால், நீர் கொண்ட கருமேகத்தைக் குறித்தது. அருக்காம மாதர்கள் அழகாற் கிடைத்தற்கு அரிய பெண்கள்.

எருக்கார் தாளி தும்பை மருச்சேர் போது கங்கை - 'மணமிக வில்லாத எருக்கு மலர், தாளி, தும்பை, இருக்கால் நினைப்பவர் நெஞ்சிலும், துதிப்பார் நாவிலும் இருப்பவனே என்பது நிரல் நிறைப்பொருள் கோள். 'யானை' என்றது தேவயானையம்மையை, மணி மார்ப - அழகிய மார்பை உடையவனே! குறத்தேன் மாது பங்க 'குறக் குலத்திற் தோன்றிய தேன்போலும் இனிய வள்ளி நாயகியாரைப் பக்கத்தே வைத்திருப்போனே!' என்பதாம். தேன், ஈக்கள் கட்டிய தேன்கூட்டிலிருந்து எடுக்கப் பெறினும், உயர்ந்த பூக்களினின்றும் பிறந்தது; மிக இனிமை உடையது; பித்தத்தைத் தணித்துச் சித்தத்தைத் தெளிவிப்பது. அதுபோல, வள்ளி அம்மையார் குறவர் குலத்தில் வளர்ந்தாலும் அம்மான் மகள், அழகிய மானின் மகள் மாமனாகிய திருமால் மகள் என்பதும், உயிர்களுக்குப் பிறவி நோயைத் தரும் மாயா மயக்கப் பித்தகற்றி ஞானத் தெளிவு தருபவன் என்பதும், கந்தக் கடவுளுக்குக் காதற் பித்தகற்றி இன்பத் தெளிவடையச் செய்தவள் என்பன முதலிய கருத்து அமைந்து கிடத்தல் காண்க.

புன் மலரையும் நன் மலரையும் அணிந்தருள் முதல்வர் புத்திரனே! நினைப்பார் துதிப்பார் நெஞ்சிலும் நாவிலும் இருக்கும் வள்ளி தேவானை நாயகனே! அகந்தை கொண்ட சூரரை அழித்த வேலாயுதக் கடவுளே! பெண்கள் மயக்கால் அழியும் பாவியாகிய




ஸ்ரீ தேவசேனாபதி

எனக்கு அருள் செய்து பிறவிக் கடலினின்றும் எடுத்து முத்திக்கரை சேர்த்தருள் என்றதாம்.

25. தான தானன தானன
தான தானன தானன
தான தானன தானன - தனதான

சீர்உலாவிய ஓதிம
மான மாநடை மாமயில்
சேய சாயல்க லாமதி முகமானார்

தேள் உலாவிய மாமொழி
மேரு நேரிள மாமுலை
சேல் உலாவிய கூர்விழி குமிழ்நாசி

தார்உ லாவிய நீள்குழல்
வேய் அளாவிய தோளியர்
சார்பி லேதிரி வேனைநின் அருளாலே

சாம வேதியர் வானவர்
ஓதி நாண்மலர் தூவிய
தாளில் வீழநி னாதருள் புரிவாயே;

கார் உலாவிய நீள்புன
வேடர் மால்வரை மீதுறை
காவல மாதினோடு அவல்செய் தணைவோனே!

காண வாகம வேதபு
ராண நூல்பல வோதிய
காரணா! கரு ணாகர! முருகோனே!

போரு லாவிய சூரனை
வாரி சேறெழ வேல்விடு
பூப சேவக மாமயில் மிசையோனே!

போதன் மாதவன் மாதுமை
பாதி யாதியு மேதொழு
போரி மாநகர் மேவிய பெருமாளே!

கொண்டல்கள் உலாவுகின்ற பெரிய மலைகளின் மேலே வாழ்கின்ற வேடர்களது. நீண்ட தினைப்புனத்திலே காவல் செய்யும் வள்ளி நாயகியாரோடு. ஆசை கொண்டு, தழுவிக் கொள்பவனே! ஆன்மாக்கள் உண்மை ஞானத்தை உணருமாறு, வேத புராண நூற்களை. பலவற்றைத் திருவாய் மலர்ந்தருளிய எல்லாப் பொருளுக்கும் காரண வத்துவாய் இருப்பவனே! கருணையே வடிவாக அமைந்தவனே! முருகக் கடவுளே! சண்டைமேற் சென்ற, சூரபதுமனை, கடலிலே சேறு உண்டாகும்படி வேலை விடுகின்ற, தலைவனே! வீரத்தனஞ் செய்யும் சிறந்த மஞ்ஞையின் மேலே எழுந்தருளி இருப்பவனே! பிரமனும், திருமாலும் அழகிய பார்வதி தேவியார், பாதிப்பாகத்தில் கொண்ட ஆதி முதற் பொருளாகிய சிவபெருமானும், வணங்குகின்ற, திருப்போரூர் என்னும் திருத்தலத்தில், திருக்கோயில் கொண்டு வீற்றிருந்தருளி யிருக்கும், பெருமானே! சிறப்பு மிகுந்து விளங்கும் அன்னத்தை நிகர்ப்ப சிறந்த நடையையும், சிறந்த மயிலை நிகர சாயலையும் கலைகள் நிறைந்த முழு நிலவினை ஒத்த முகத்தையுடைய மான் போன்ற மருண்ட நோக்குடைய பெண்களின், தேனை ஒத்த, இன்ப மிகுந்த சொற்களையும் மகா மேருமலையை ஒத்த இளைய பெரிய தனங்களையும் சேல் மச்சத்தை நிகர்த்த கூரிய கண்களையும் குமிழம்பூப் போன்ற நாசியையும் மலர் மாலை விளங்குகின்ற நீண்ட கூந்தலையும் உடைய மூங்கிலை ஒத்த தோள்களையுடைய மாதர்களின் சார்பிலே அலைந்து கொண்டிருப்பவனாகிய அடியேனை, தேவரீருடைய கருணைத் திருவருளினால் சாம வேதத்தை ஓதுபவர்களும் தேவர்களும்,

மந்திரங்களைச் சொல்லி அன்றலர்ந்த பூக்களை அர்ச்சித்த. திருவடித் தாளில், வணங்கும்படி தேவரீரது திருக் கருணையைச் செய்தருள்வீராக.

மானம் - சிறப்பு: 'மான' எனக் கொள்ளின் உவம உருபும் ஆகும்; இதனை,

*"அன்ன எய்ப்ப உறழ ஒப்ப*
*என்ன மான என்றவை எனாஅ"*

என்ற தொல்காப்பியர் சூத்திரத்தானும் அறிக. மயில் சாயலால் பெண்களுக்கு உவமம் ஆதலின், 'மாமயில் சேயசாயல்' என்றார். சாயல் - மென்மை; இதனை "சாயல் மென்மை" என்ற தொல்காப்பியத்தால் அறியலாம்; தேனுலாவிய மா மொழி - தேன் போலும் இனிய சிறந்த மொழி. இள முலை - தளராத கொங்கை சேலுலாவிய கூர் விழி - சேல் மச்சத்தைப்போற் பிறழும் கூரான விழி. தாருளாவிய நீள் குழல் - மாலை அசையும் நீண்ட அழகிய கூந்தல், வேயளாவிய - மூங்கிலை ஒத்த.

*"ஆறா றவையும் அன்ன பிறவும்*
*கூறுங் காலைப் பல்குறிப் பினவே"*

என்ற தொல்காப்பியத்தால் அளாவிய என்றதை உவமைச் சொல்லாகக் கொண்டாம். நாண்மலர் - புதுப்பூ, கார்மேகம் - நீர்கொண்டு கருத்த நிறமுடையது' என்பது பொருள்; இது ஆகுபெயர். காவல் மாது - தினைப்புனங் காவல் செய்யும் வள்ளியம்மை கருணாகர முருகன் அருளே உருவாய முருகக் கடவுள் வாரி - கடல்; 'நீண்ட நீர் நிலை' 'மிகுந்த நீரையுடையது' என்ற பொருளாம்; 'வாரி' என்பது பின்னர்ப் பெரு வெள்ளத்திற்கும் ஆயிற்று; அசுரரின் இரத்தம் நிணம் புலால் முதலிய சேர்ந்து கலக்குண்டமையால் சேறாமையின், 'வாரி சேறெழ' என்றார். பூபன் - தலைவன்; மாமரமாக நின்ற அசுரன்

வேலாற் கூறாக்கப்பட்ட ஒரு கூறு மயிலானமையின், 'சேவக மா மயில்' என்றார். 'பூப! சேவக! மா மயில் மிசையோனே! என மூன்று விளி. போதன் - 'விண்டுவின் உந்தியத் தாமரையில் இருப்பவன்' என்பது பொருளாம். மாதவன் - திருமால் 'திருமகள் நாயகன்' எனப் பொருளது. ஆதி - முழுமுதற் கடவுள்; இதனாலன்றோ திருவள்ளுவரும் "ஆதிபகவன் முதற்றே உலகு" என்றார்.

மும்மூர்த்திகளுமே வணங்கும் பெருமானே! தேவர்க்கு இடுக்கண் செய்த அசுரரை வதைத்தவனே! ஆன்மாக்கள் கற்றுய்ய வேதாகம புராண நூல் பல அருளியவனே! தினைப் புனம் காவல் செய்த குறமகளை விரும்பி மணந்தவனே! மாதர் மயக்கில் கெட்டு அலைவேனுக்குத் தேவரும் முனிவரும் துதிக்கும் நின் திருத்தாள் சேர அருள்வாயாக.

***



## திருச்செங்கோடு

26. தந்தா தனநத தந்தா தனந்த
தந்தா தனந்த - தனதானா.

பந்தா டிஅங்கை நொந்தார் பரிந்து
பைந்தார் புனைந்த குழல்மீதே

பண்பார் சுரும்பு பண்பா டுகின்ற
பங்கே கருகங்கொள் முகமீதே

மந்தார மன்றல் சந்தார மொன்றி
வன்பா தகஞ்செய் தனமீதே

மண்டாசை கொண்டு விண்டா விறைந்து
மங்காம லுன்றன் அடிதாராய்;

கந்தா! அரன்றன் மைந்தா! விளங்கு
கன்றா முகுந்தன் மருகோனே!

கண்டோர் புகழ்ந்த நன்கார் மடந்தை
கந்தா! வரம்பை மணவாளா!

செந்தாது அடர்ந்த கொந்தார் கடம்பு
திண்தோள் நிரம்ப அணிவோனே!

திண்கோடு அரங்கள் வெண்கோ டுறங்கும்
செங்கோ டமர்ந்த பெருமானே!

கந்தக் கடவுளே! சிவபெருமானுடைய திருப்புத்திரனே! விளங்குகின்ற கன்றை உடைய பசுக்கூட்டங்களை மேய்த்த திருமாலுக்கு மருமகனே! பார்த்தவர்கள் எல்லாம் புகழும், அழகு நிறைந்த தேவயானை அம்மைக்கு பற்றுக் கோடாக உள்ளவனே! அரம்பை போலும் அழகு கொண்ட வள்ளியம்மையின்

மணவாளனே! சிவந்த மரகதப் பொடிகள் மிகப் பொருந்தியுள்ள, கொத்துக் கொத்தாக உள்ள கடப்பமாலையை உறுதியுள்ள புயங்களில் மிகவும் அணிந்து கொள்பவனே! வலிய குரங்குகள் கரடிகளோடு உறக்கம் செய்யும்படியான, திருச்செங்கோடு என்னும் திருப்பதியில், வீற்றிருந்தருளும் பெருமானே! பந்தாட்டம் ஆடி அழகிய கை வருந்திய பெண்கள், விரும்பி பசிய பூமாலைகளைத் தரித்துள்ள, கூந்தலின் மேலும், அழகு மிகுந்த, வண்டுகள் இராகத்தைப் பாடும்படியான, தாமரையை ஒத்த முகத்தின் மேலும், செவ்வரத்தம் பூவின் நறுமணத்தோடு சந்தனமும் மாலையும், பொருந்தியுள்ள. கொடிய பாவங்களைச் செய்யும் தனங்களின் மேலும், மிக்க காதலைப் பூண்டு, உயிரை விட்டு வருந்தி அழியாமல், உன்னுடைய திருமலர்த்தாள்களை, தந்தருள்வாயாக.

அங்கம் - தேகம். பண்பாடுகின்ற - 'செவ்விளரி ராகத்தைப் பாடுகின்ற' என்றலுமாம். மன்றல் - வாசனை, வன்பாதகம் செய் 'கொடிய பாதகமாகிய காமத்தை உண்டாக்குகின்ற' என்பது பொருள்; காளையர்க்குக் காமத்தை உண்டாக்குதற்கு முலை முக்கிய கருவியாதலின் இவ்வாறு கூறினார். காமமே எல்லாப் பாதகங்களுக்கும் பெற்றதாய் ஆதலின், 'வன்பாதகம்' என்றார். இதனை,

*"பொல்லாத காமப் புலைத்தொழிலி லென்னறிவு*
*செல்லாமல் நன்னெறியுற் சேருநாள் எந்நாளோ"*

என்றார் தாயுமானவரும்..

அணை மீது - 'மலரமளி மீது' என்பது பொருள். காமத்தால் ஆவி துடித்து வருந்தும் ஆதலின், 'மண்டாசை கொண்ட விண்டாலி நைந்து' என்றார்; இனி, விந்து தேகத்தை விட்டுக் கழியக் கழிய உயிர்ப்பலம் ஒடுங்கு மாகலின் இவ்வாறு கூறினர்.

"விந்தை விட்டையோ நொந்து கெட்டையோ" என்னும் முதுமொழியுங் காண்க.

ஆறு குழந்தை வடிவா யிருந்து பின் ஒன்றாக உமாதேவியார் தழுவி எடுத்தபோழ்து கூடி விளங்கினவர் ஆதலின் ஒன்று சேர்த்துக் கூட்டப் பெற்றவர் என்ற பொருளிற் 'கந்தன்' என்னும் திருநாமம் ஏற்பட்டது. தந்தைக்குப் பின் வலியுடன் நின்று குடியைத் தாங்குபவன் ஆதலின் புத்திரனை 'மைந்தன்' என்றார். மைந்து - வலிமை. கன்றா முகுந்தன் - 'துன்ப மில்லாத் திருமால்' கொத்து என்பது 'கொந்து' என்றாயது மெலித்தல் விகாரம்.



**சென்னிமலை**

“சிவபெருமான் மைந்தனே! திருமால் மருகனே! தேவானை வள்ளி மணாளா! திருச்செங்கோட்டில் எழுந்தருளி இருக்கும் கடம்பனே! பெண்ணாசை கொண்டு மயங்காதபடி நின் திருமலர்த்தாள் தந்தாள் என்று விரும்பி வேண்டியதாம்.

***



திருச்செங்கோடு

# பழமுதிர்சோலை

27. தனதன தானதான தனதன தானதான
தனதன தானதான - தனதான

இலவிதழ் கோதிநீதி மதகலை யாரவார
இளநகை ஆட - ஆடி மிகவாதுற்று

எதிர்பொரு கோரபார மிருகமத கோலகால
இணைமுலை மார்பிலேற மதராசன்

கலவியி லோடுநீடு வெகுவித தாகபோக
கரணப்ர தாபபாப மடமாதர்

கலவியின் மூழ்கியாழும் இழிதொழி லேனுமீது
கருதிய ஞானபோத மடைவோனோ;

கொலைபுரி காளிசூலி பயிரவி நீலி மோடி
குலிசகு டாரிஆயி மகமாயி

குமரிவ ராகியோகி பகவதி ஆதிசோதி
குணவதி யாலவூணி அபிராமி

பலிகொள்க பாலியோக பரமகல் யாணிலோல
பதிவ்ரதை வேதஞானி புதல்வோனே!

படையொடு சூரன்மாள முடுகிற சூரதீர
பழமுதிர் சோலைமேவு பெருமானே!

மகிடாசூரனைச் சங்கரித்த காளியும், முத்தலைச் சூலத்தை உடையவளும், பைரவி என்னும் திருநாமத்தை உடையவளும் நீல நிற முடையவளும், துர்க்கையும் வச்சிராயுத்தையும் கோடாரியையும் உடையவளும், அண்டம் கோடி அண்டங்களுக்கும் தாயாய் இருப்பவளும், இளமைத்

திருக்கோலம் உடையவளும் வராகியும், யோகினியும் செல்வம் முதல் ஆறும் உடையவளும், எல்லாவற்றிற்கும் முதலாக உள்ளவளும், பேரொளியாக விளங்குபவளும், சித்துக் குணத்தை உற்றிருப்பவளும், ஆலகால விடத்தை ஊணாகக் கொண்டவளும், அழகு உடையவளும் பிச்சை வாங்கும் பிரம கபாலத்தை உடையவளும, யோக நிலையில் நிற்பவளும், உயர்ந்த கல்யாண குணங்களை உடையவளும், விளையாட்டை உடையவளும், கற்புடையவளும், வேதத்தை அறிந்தவளும் ஆகிய பார்வதி தேவியாருக்கு திருப்புத்திரனே! சேனைகளோடு சூரபதுமன் அழியும்படி மேற்சென்று போர் செய்த சூரதீரனே! பழமுதிர் சோலை என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும். பெருமானே! இலவமலரை ஒத்த இதழ்களைக் கோதி, நியதியையுடைய மன்மதக்கலையை மிக மிக, புன்னகை செய்ய விளையாடி, மிகவும் வாது செய்து, எதிரில் பொரும், கொடிய பெருத்த, கத்தூரி அணிந்த திரண்ட வடவத்தே தோன்றியதாகிய இரண்டு கொங்கைகளும், மார்பிடத்தே பொருந்த, மன்மதனது கலவி விளையாட்டிற் சென்று, மிகுந்த பல விதமான ஆசையைக் கொண்டு பற்பல செய்கை விகற்பங் கொண்டுள்ள மேன்மை பொருந்திய பாபச்செயலை உடைய இளம் பருவப் பெண்களினுடைய, போக வலைக்குள் முழுகி, அழுந்துகின்ற கீழான செயலையுடைய அடியேனும், மேன்மையாகக் கருதப்படும் ஞானபோதத்தைப் பெறுவேனோ?

இலவு இதழ் - இலவம் பூவை ஒத்த இதழ்; இது உவமத் தொகை. கோதுதல் - ஈண்டு பல்லால் மெல்லக் கடித்தல். 'ஆர ஆர' மிகுதிப் பொருளில் இரட்டியது. இளநகை - புன்நகை, முறுவல், 'புன்னகை யாடும்படி விளையாடி' என்பார். 'இள நகையாட ஆடி' என்றார். கோரம் - கொடுமை. வட்டில் கோலகால, கோலம் - அழகு, காலம் - தோன்றும் பருவத்திற் தோன்றிய;



ஸ்ரீ கந்தசாமி

இணை முலை - இரண்டு கொங்கைகள். இதனை, 'தமக்குத்தாமே இணையாகிய முலைகள்' எனினும் ஆம். தாகபோகம் - ஆசையாற் செய்யப்படும் கலவி ஆடல்கள்.

மாதர் மயக்கிற் பட்டு முயக்கில் மூழ்கல் பிறவிக்கு ஏதுவாதலினால். 'இழி தொழில்' என்றார்.

மடுவிற் கிடப்பவன் மலையுச்சி ஏறல் எவ்வாறு கூடும்? அதுபோல, மாதரிடம் மயக்கிற் கிடக்கும் அடியேன் மேலாகக் கருதப்படும் நல்லறிவு அடையக்கூடுமோ? கூடாதே. உனது திருவருள் இருப்பின் கூடும் என்பது தோன்ற, 'கலவியின் மூழ்கியாழு மிழிதொழி லேனுமீது கருதிய ஞானபோத மடைவேனோ' என்றார்.

*"ஆட்டுவித்தா லாரொருவர் ஆடா தாரே*
*அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே*
*ஓட்டுவித்தா லாரொருவர் ஓடா தாரே*
*உருகுவித்தா லாரொருவர் பாடா தாரே*
*பாட்டுவித்தா லாரொருவர் உருகாதாரே*
*பணிவித்தா லாரொருவர் பணியா தாரே*
*காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே*
*காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே"*

என்ற திருநாவுக்கரசுகள் திருவாக்கு மெய்ப்பிக்கும்.

காளி - 'கருநிற முடையவள்' என்னும் காரணம் பற்றி வந்தது. சூலி - சூலத்தை உடையவள். பயிரவி - பயிரவர் என்பதன் பெண்பால், இறைவி - இறைவன் பாதிப் பாகத்தளாதலினாலும், இறைவர்க்குச் சத்தியாய் விளங்குபவள் ஆதலினாலும், அவளன்றி அவனுக்கு ஒரு செயல் இல்லை ஆதலினாலும், இறைவனுக்குரிய குணங் குறிகளை நாமங்களை இறைவிக்குங் கூறுவது மரபு.

*"சிவமெனும் பொருளும் ஆதி சத்தியுடன்*
*கூடின் எத்தொழிலும் வல்லதாம்"*

லகிரியானும் உணரலாம்.

"பழமுதிர் சோலைப் பெருமானே! உமாதேவி புத்திரனே! கலவியில் மூழ்கி ஆழும் இழிதொழிலேன் நின் கருணையால் அதினின்றும் நீங்கி உன் திருவடி சேர அருள்வாய்" என்றது விண்ணப்பம்.

***



# சோலைமலை

28. தானதன தந்ததந்த
தானதன தந்ததந்த
தானதன தந்ததந்த - தனதான

வாரணமு கம் கிழிந்து
வீழவும் அரும் பலர்ந்து
மால்வரைய சைந்தனங்கள் முடிசாய

வாளகிரி அண்டரண்ட
கோளமுற நின்றெழுந்து
மாதவம றந்துறந்து நிலைபேரப்

பூரணகுடம் கடிந்து
சீதகள பம்புனைந்து
பூசலை விரும்புகொங்கை மடவார்தம்

போகசய னம் தவிர்ந்துன்
ஆடகப தம்பணிந்து
பூசனைசெய் தொண்டன் என்பது ஒருநாளே;

ஆரணம்மு ழங்குகின்ற
ஆயிரம் டந்தவங்கள்
ஆகுதி இடங்கள் பொங்கும் நிறைவீதி

ஆயிரமு கங்கள் கொண்ட
நூபுரம் இரங்குகங்கை
ஆறமர வந்து அலம்பு துறைசேரத்

தோரணம் அலங்குதுங்க
கோபுரநெ ருங்குகின்ற
சூழ்மணிபொன் மண்டபங்கள் ரவிபோலச்

**சோதியின்மி குந்தசெம்பொன்**
**மாளிகைவி ளங்குகின்ற**
**சோலைமலை வந்துகந்த பெருமாளே!**

வேதங்கள் மிகவும் ஒலிக்கின்ற, ஆயிரக் கணக்காயுள்ள மடங்களும் தவஞ் செய்யும் இடங்களும், வேள்வி செய்கின்ற இடங்களும், மிகுந்து நிறைந்துள்ள வீதிகளில், ஆயிரம் முகங்களோடுங் கூடிய, சிலம்பொலியை ஒத்து ஒலிக்கின்ற கங்கா நதியானது, பொருந்துமாறு வந்து ஒலிக்கின்ற, துறைகளிலே அடைய, மகுட தோரணங்கள் அசைந்து கொண்டிருக்கும் படியான, உயர்ந்த கோபுரங்கள், அடர்ந்து இரத்தினங்கள் சுற்றிப் பதித்த, பொன்னலாகிய மண்டபங்கள், செங்கதிர் போன்று, பேரொளியால் மேன்மையுற்ற சிவந்த பொன் மயமான மாளிகைகள் விளங்கும், சோலைமலை என்னுந் திருப்பதியிலே வந்து விரும்பி வீற்றிருக்கின்ற பெருமானே! யானையினது மத்தகமானது துண்டுபட்டு விழவும், தாமரை அரும்பு மலரவும், பெரிய மலைகள் அசையவும், மன்மதனது பொன் முடியானது சாய்வைப் பெறவும், சக்கரவாளகிரி, வானமண்டல வட்டத்தில், அமைந்து நிலைபெற்று உயரவும், சிறந்த தவமும் தருமமும் நீங்கிச் செல்லவும், பூரண கும்பத்தைச் சினந்து, குளிர்ச்சி பொருந்திய கலவைச் சாந்தை அணிந்து, காமச் சண்டையை விரும்பும் முலைகளை யுடைய மாதர்களின், போகப் படுக்கையினின்றும் விலகி உன் பொன் போன்ற செவ்விய திருமலரடிகளை வணங்கி, வழிபட்டு வணங்கும் அடியேன் என்று சொல்வதாகிய, ஒரு நாள் ஏற்படுமோ?

தனம் போல் இல்லாமையால் யானை மத்தகம் தாழ்வடைந்தது என்றது குறித்தே 'வாரணமுகம் கிழிந்து வீழவும்' என்றார். தாமரை அரும்பு தனத்துக்கு ஒவ்வாமையால் மலர்ந்தது என்றார்; இது தற்குறிப்பேற்றம். யானைத் தலை, தாமரை அரும்பு, மால்வரை, அனங்கன் முடி, வாளகிரி, பூரண கும்பம் முதலியன முலைக்கு உவமைப் பொருள்கள்.

ஆயிரம் என்றதை மடத்தோடும் ஆயிரந் தவங்களிடங்கள் ஆயிரம், வேள்வி இடங்கள் என்று கூட்டிப் பொருள் உரைத்தலும் ஆம். நூபுரம் போல் ஒலித்துக்கொண்டு செல்லுஞ் செலவை உடைய கங்கை நதி என்றது.

*"அரங்கி னாடுவார் சிலம்பி னன்னநின்*
*றிரங்கு வார்புனற் சரவு வெய்தினார்"*

என்ற இராமாயணப் பாட்டோடொப்பிடலாம்.

'ஆயிர முகங்கள்' என்றது ஆயிரக் கணக்கான துறைகளை. 'ஆயிரம்' மிகுதிப் பொருளது. கங்கை பலதுறைகளுடைமையை.

*"கயல்மாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை*
*ஆயிரமா முகத்தினொடு வானிற் றோன்றும்"*

என்ற தேவாரத்தாலும் அறியலாம்.

'அறத்தையும் தவத்தையும் சிதைக்கும் விலைமாதர் போகத்தைவிட்டு நின் பொற்பாதத்தைப் பணியுமாறு சோலைமலை மேவும் முருகக் கடவுளே! நீ எனக்கருள்' என்று வேண்டிக் கொண்டதாயிற்று.

விலைமாதர் போகத்திலும் நின் பாத சேவை இன்பம் தருவது; விலைமாதர் போகம் துன்பமும் நரகமும் பயக்கும்; நின் பாத சேவை இன்பமும் ஞானமும் முத்தியுந் தருவது என்றதாயிற்று. இதனை,

*"அரும்பும் போன்முலை யாரல்லல் வாழ்க்கைமேல்*
*விரும்புச் சேர்நிலை விட்டுநல் விட்டமாய்த்*
*திருப்புத் தூரனைச் சிந்தை செயச்செயக்*
*கரும்புச் சாற்றினு மண்ணிக்குங் காண்மினோ"*

என்றதானும் அறியலாம்.

✱ ✱ ✱

## சீபுருடமங்கை (சோலைமலை)

29. தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த - தனதான

வேனில்மதன் ஐந்து பாணம்விட நொந்து
வீதிதொறு நின்று மடவார்பால்

வேளையென வந்து தாளினில்வி ழுந்து
வேடைகெட நண்பு பலபேசித்

தேனினும் மணந்த வாய் அமுதம் உண்டு
சீதளத னங்க ளினின் மூழ்கித்

தேடியத னங்கள் பாட்பட முயன்று
சேர்கதிய தின்றி உழல்வேனோ;

ஆனிரைது ரந்த மாநிலம் அளந்தொர்
ஆலிலையில் அன்று துயின்மாயன்

ஆயர்மனை சென்று பால்தயிறு அளைந்த
ஆரணமு குந்தன் மருகோனே!

வானவர்பு கழ்ந்த கானவர்ப யந்த
மானொடுவி ளங்கு மணிமார்பா!

மாமறைமு ழங்கும் சீபுருட மங்கை
மாநகரம் அமர்ந்த பெருமாளே!

பசுக் கூட்டங்களினின்றும் நீங்கி, இந்தப் பெரிய நானிலத்தை ஓரடியால் அளந்து, ஒப்பற்ற ஒரு வட ஆல இலையில், அந்நாளில் கண் வளர்ந்த மாயா விநோதனும், இடைச்சியர்கள் வீடுதோறுஞ் சென்று, பாலையுந் தயிரையுங் குழைத்துண்ட, வேதங்களாலே புகழப்பெறும் திருமாலுக்கு,

மருமகனே! தேவர்களாலே புகழப்பெற்ற வேடர்கள் பெற்ற, வள்ளி நாயகியாரோடு சிறப்புற விருக்கும்; அழகிய மார்பை உடையவனே, மேலான வேதங்கள் மிகுதியாக இசைக்கப்பெற்ற சீபுருட மங்கை என்னும் பெயரையுடைய திருப்பதியில், விரும்பி எழுந்தருளி இருக்கும் பெருமானே! இளவேனிற் காலத்திற்கு உரியவனான மன்மதன் ஐந்து மலர்க்கணைகளை விடுவதனால் வருத்தமுற்று, தெருக்கள் தோறும் நின்று, மாதர்களிடத்தில் என்னைக் காக்கும் வேளை இது என்று சொல்லி அணுகி, அவர்கள் இசையும்படி அவர்கள் பாதங்களில் விழுந்து, காம வெப்பம் நீங்க, நட்புக்கு உரியதான பல மொழிகளைக் கூறி தேனைக் காட்டிலும் இனிமையாகிய பரிமளிக்கும், இதழமுதை உண்டு, குளிர்ச்சி பொருந்தியுள்ள தனங்களிலே முழுகி, வருந்திச் சம்பாதித்த பொருளெல்லாம் வீணாக அழிந்துபோம்படி இந்த வீண் முயற்சியைச் செய்து, பெறத்தக்க நல்ல கதியைப் பெறாமல், இந்த விதமாகவும் துன்பப்படுவேனோ?

இளவேனிற் காலம் காம இன்பந் துய்ப்பார்க்கு மிகுந்த ஏற்ற காலம் ஆதலின் மன்மதனை 'வேனிலான்' என்றார். இதனாலன்றோ,

*"ஆரமும் ஆரச் சேறும் அரும்பணி நீரும் பூவும்*
*ஈரவெண் மதிநி லாவும் இதம்புரி தென்றற் காலும்*
*ஓருயிர் இரண்டு மெய்யாய் உருகுவார் உருகும் வண்ணம்*
*மாரனை மகுடஞ் சூட்ட வந்தது வசந்த காலம்"*

என்றார் வில்லிபுத்தூரார்.

மன்மதன் ஐமலர்க் கணைகளாவன: முல்லை, அசோகு, குவளை, தாமரை, மாம்பூ என்பனவாம். தேனினும் மணந்த 'தேனினும் இன்சுவையை உடைய' என்றும் பொருள் கூறுவர். இதனாலன்றோ திருவள்ளுவ நாயனாரும்,

*"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி*
*வாலெயி றூரிய நீர்"*
என்று அருளிச் செய்தார்.

காமச் சுரங் கொண்டார்க்கு வேனிற் காலத்துச் சீதளமாக இருத்தலினாலும்; சந்தனம், முத்து மாலை, மலர் மாலைகளால் சீதளம் பெற்றதனமாதலாலும், 'சீதள தனங்கள்' என்றார்.

தேடிய தனங்களைக் கடவுளுக்கும் அவர் அடியார்களுக்கும் செலவு செய்யும் அறவழி விட்டுப் பெரும் பீழைதரும் மாதர்க்குத் தந்து வம்பாக இழத்தலினால், 'தேடிய தனங்கள் பாழ்படமுயன்று' என்றார்.

பட்டினத்தடிகளும்,

*"மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டும*
*ருண்ருதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து*
*மாமயில்போலவர் போவது கண்டு -*
*மனதுபொறாம லவர்பிறகோடி மங்கல செங்கல*
*சந்திகள் கொங்கை மருவ மயங்கி யிதழமுதுண்டு*
*தேடியமாமுதல் சேரவழங்கி -*
*ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்*
*வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று*
*வாலிபகோலமும் வேறுபிரிந்து - "*
எனக் கூறியருளினர்.

நோய்த் துன்பத்தும், வறுமைத் துன்பத்தும், நரகத் துன்பத்தும், பிறவித் துன்பத்தும் மாதராசை வீழ்த்திடுமாதலின் 'சேர்கதி இன்றி உழ்வேனோ' என்றார். இதனை,

*"கூடுமொரு வீடடைக்கும் கொண்டுபல நோயாக்கும்*
*நீடுநிறப் பூட்டும் நிரையத்தும் - வீடுவிக்கும்*


Thiruvavaduthurai Adheenam

*அல்லற் பிறப்பளிக்கும் அந்தோபுன் தேசையுற*
*வில்லையெனி நன்றாம் எனக்கு"*

என்ற வெண்பாவாலும் அறியலாம்.

*"சிற்றம் பலமுஞ் சிவனும் அருகிருக்க*
*வெற்றம் பலந்தேடி விட்டோமே - நித்தம்*
*பிறந்திடத்தைத் தேடுதே பேதைமட நெஞ்சங்*
*கறந்திடத்தை நாடுதே கண்"*

என்ற பட்டினத்தடிகள் வாக்கை எண்ணுக.

ஆலிலைமேல் துயின்றது ஊழிக்கால வெள்ளத்தில் ஆலிலைமேல் துயின்றார் என்பது கதை.

இடையர் வீட்டிற் சென்று வெண்ணைய் தயிர் திருடி உண்டது கண்ணனாகப் பிறந்த காலத்தில். மாடு மேய்த்து இடையர் வீட்டில் வெண்ணைய் திருடியுண்டவனாயினும் உலகையே ஓரடியாலளந்த பெரியோன், அனைத்துலகமும் அழியினும் தானழியாதவன், வேதங்களும் புகழும் பெருமை உடையவன் என்பது தோன்ற, 'ஆனிரை புரந்து ... ஆரண முகுந்தன்' நன்கு புலப்படுத்தியது.

'கானவர் பயந்த வானவர் புகழ்ந்த மானொடு' இயைத்துப் பொருள் கொள்க. மறை - 'கமுக்கத்தை உடையது' என்பது பொருள்.

"சேர்கதி யதின்றி மாதராசையில் உழலும் அடியேனை முருகா! தடுத்து ஆட்கொள்" என்றது கருத்து.

***

## பழநி

30.தனன தந்தன தநத னாதன்
தனன தந்தன தநத னாதன
தனன தந்தன தந்த னாதன - தந்ததான

கனகம் கும்பம் இரண்ட நேர்மலை
எனநெ ருங்குகு ரும்பை மாமணி
கதிர்சி றந்தவ டங்கு லாவிய முந்துசூதம்

கடையில் நின்றுப ரந்து நாடொறும்
இளகி விஞ்சிஎ ழுந்த கோமள
களப குங்கும கொங்கை யானையை இன்பமாக

அனைவ ருங்கொளும் என்று மேல்விலை
இடும டந்தையர் தங்க டோதகம்
அதின்ம ருண்டுது வண்ட ஆசையில்
நைந்துபாயல்

அவச மங்கொளும் இன்ப சாகர
மழுகும் வஞ்சக நெஞ்சை யேயொழி
தருப தங்கதி எம்பி ரான் அருள் தந்திடாயோ;

தனன தந்தன தந்த னாவென்
டகுகு டிங்குகு டிங்கு பேரிகை
தகுதி திந்திகு திந்த தோவென உந்துதாளந்

தமர சஞ்சலி சஞ்ச லாவென
முழுவு டுண்டுடு டுண்டு டூவென
தருண் கிண்கிணி கிண்கி னாராமு முந்தவோதும்

பணிப தங்கய் வெண்டி சாமுக
கரி அடங்கலும் அண்ட கோளகை
பதறி நின்றிட நின்று தோதகவென்று தோகை

பவுரி கொண்டிட மண்டி யேவரு
நிசிச ரன்கிளை கொன்ற வேலவ!
பழநி யங்கிரி யின்கண் மேவிய தம்பிரானே!

தனன தந்தன... டிங்கு என்று முழங்குதலைச் செய்கின்ற பேரிகையும், தகுதி... திந்ததோ என்ற இசையைச் செய்யுமாறு அடிக்கப்படும் தாளமும், துவாரத்தைக் கொண்டு சஞ்சலி சஞ்சலா எனக் கீதத்தைச் செய்ய, மத்தளம், டுண்டுடு டுண்டுடு என்ன இந்தத் தாள ஓசையைச் செய்யவும், சிறியதாய கிண்கிணி கிண் கிண் என்னும் ஓசையையுடைய மணி வடங்களும், முன்னாலே நின்று துதிக்கின்ற யாவரும் வணங்கத்தக்க பதவியும், இளமை பொருந்திய எட்டுத்திக்கு யானைகள் எல்லாம் உலகங்க ளெல்லாம் துடித்து நிற்க, நின்று தோதக என்று தொகுதியை உடையவனே என்று, மயில் கூத்தாட, நெருங்கி வந்த சூரனின் சுற்றத்தைக் கொன்ற வேலாயுதத்தை உடையவனே! பழநியாகிய அழகிய திருமலையினிடத்து வீற்றிருந்தருளும் தம்பிரானே! பொன்னாற் செய்த இரண்டு கும்பத்தை ஒத்தது என்றும், வடிவத்தால் மலைகளுக்கு ஒப்பாகும் என்றும், ஒன்றோடொன்று நெருக்கமாய் அமைந்த தென்னங் குரும்பைகள் என்றும் சொல்லப்படும், பெருமை வாய்ந்த ஒளியுள்ள' முத்துக்களாற் சிறப்பாகச் செய்யப்பட்ட மாலை, விளங்கிக் கொண்டிருக்கும், அழகினால் முதன்மையாகக் கூறப்படும் மாந்தளிர் போன்ற மேனி, விரிந்து நாள்தோறும் இளக்கம் உடையதாகி மேன்மை பெற்று, உயர்ந்து கிளம்பிய, கோமளம் களபம் குங்குமம் கொங்கை யானையை இளமையுடையதும் கலவைச் சாந்தையும் குங்குமத்தையும் பூசப்பெற்ற தனங்களாகிய மத்தக யானைகளை,

நலம் பொருந்துமாறு, எல்லோரும் அடைவீர்களாக என்று, மனைத்தலை வாசலில் தாம் நின்றுகொண்டு விலை பேசும் பெண்களின், வஞ்சகச் செயலால் மதி மருண்டு, மனத் தளர்ச்சியைச் செய்யும் காமவேட்கையினால் வருந்தி, படுக்கையிலே படுத்துப் பரவசம் அடையும். காம இன்பமாகிய கடலில் மூழ்கும், வஞ்சகம் மிகுந்த மனத்தை அகற்றுகின்ற, மேலான பதவியாகிய கதியை, எமது ஆண்டவனே! அடியேனுக்கு அருள் செய்து தரமாட்டாயோ?

குரும்பை - தென்னங் குரும்பை.

"குரும்பை மென் முலையார்" என்றார் அதிவீரராம பாண்டியனார்.

'மாமணி கதிர் சிறந்து வடங்குலாவி' என்றது முத்து மாலை அணிந்து என்றதாம். பெண்கள் பண்டைக் காலத்தே முத்தார மணிவது தமிழ்நாட்டு வழக்கு. எனைய மணிகளில் முத்துச் சிறந்தது: ஆதலினால் 'மாமணி' என்றும், 'கதிர் சிறந்து' என்றுங் கூறினார். ஏனைய மணிகளைக் கன்னாளர்கள் மதிக்கும்படி வரைசாணை வட்டத்து வைத்து அவ்வினைஞர் கடைந்தெடுத்து ஒளி செய்விக்க வேண்டும். முத்துக்கு இது வேண்டியதின்று. இயல்பிலேயே ஒளியுடையது.

தமிழ்ப் பாண்டிநாட்டிலே விளைவது. இதனாலே,

*"பூழியர்கோன்*
*தென்னாடு முத்துடைத்து, தெண்ணீர் வயிற்றொண்டை*
*நன்னாடு சான்றோ ருடைத்து"*

என்று ஔவையும் கூறினார்.

*"பெருங் கடலுள் பல்விலைய முத்தம் பிறக்கும்"*

எனப் பிறருங் கூறினர்.

*'கோமள கொங்கை' என்றது முற்றா முலையை, முற்றின் தளர்ந்து சாயும் ஆதலின், இதனாலன்றோ சரச சல்லாபத்தில்,*

*"முற்றாமென் முலையாரை மோகனஞ்செய் யுங்கலவி*
*கற்றாய்நீ என்றதல்லாற் கற்றாய்நீ என்றிவனே" என்றார்.*

*"ஆயன் பதியில் அரன்பதிவந் துற்றளகம்*
*ஆயனூதுங் கருவி ஆனாலும் - தூயமணிக்*
*குன்றுபோல் வீறு குவிமுலையா டன்னுடனீ*
*இன்றுபோல் என்றும் இரு"*

என மணமகனை ஔவை வாழ்த்தியதால் அறியலாம்.

ஆயன்பதி - திருமால் துயிலும் ஆலிலை போன்ற வயிறு. அரன்பதி - சிவபெருமான் திருப்பதியாகிய கைலமலை போன்ற முலை. தோதகம் - வஞ்சகம், மடந்தையர் - இளம் பருவப் பெண்கள். அவசமாதல் - தன்வசங் கெடல், வஞ்சக நெஞ்சு கேடு செய்யும் நெஞ்சு. இதனாலன்றோ,

*"குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்*
*பிடிபடுக்கப் பட்ட களிறு"*

என்றார் பதினென் கீழ்க்கணக்கில், மாதர் ஆசை நீக்கி இறைவன் தாளில் அவ் ஆசையை வைப்பின் கதி கிடைக்கும். இதனாலன்றோ,

*"மங்கையர்கள் யோனிமிசை வைத்திருக்கும் ஆசையினைப்*
*பங்கு செய்து நூற்றிலொரு பங்கெடுத்துக் - கங்கையணி*
*வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்*
*காணலாங் காணாக் கதி"*

என்றார் பிறரும்.



தம்பிரான் - 'தனக்கு மேல் ஒரு பெரியவன் இல்லாது பெரியவனாக விளங்குபவன்' என்பது பொருள்.

*'மாதர் ஆசையில் மூழ்கும் என் வஞ்சக நெஞ்சை ஒழித்து*
*நின் பதமலர்க் கதி தந்தருள்'*

என வேண்டினர்.

***



## திருவேங்கடம்

31. தனதாந்தன தானன தானன
தனதாந்தான தானன தானன
தனதாந்தன தானன தானன – தனதான

வரி சேர்ந்திடு சேல்கய லோவெனும்
உழைவார்ந்திடு வேலையு நீலமும்
வடுவாங்கிடு வாள்விழி மாதர்கள் வலையாலே

வளத்கோங்கிள மாமுகை யாகிய
தனவாஞ்சையி லேமுக மாயையில்
வளமாந்தளிர் போனிறம் ஆகிய வடிவாலே

இருள்போன்றிடு வார்குழல் வீழலில்
மயில் சேர்ந்திடு பாயலின் மீதுற
இனிதாங்கனி வாயமு தூறல்கள் பருகாமே

எனதாந்தன தானவை போயற
மலமாதகடு மோக விகாரமும்
இவைநீங்கிட வேயிரு தாள் மலர் அருள்வாயே;

கரிவாம்பரி தேர்திரள் சேனையும்
உடனாந்துரி யோதன னாதிகள்
களம் மாண்டிட வேயொரு பாரத மதிலேகிச்

கனபாண்டவர் தேர்தனி லேஎழு
பரிதூண்டிய சாரதி யாகிய
கதிரோங்கிய நேமிய னாமரி ரகுராமன்

திரைநீள்திரை வாரியும் வாலியும்
நெடிதோங்கும் ராமர மேழொடு
தெசமாஞ்சிர ராவண னார்முடி பொடியாக

**சிலைவாங்கிய நாரண னார்மரு**
**மகனாங்குக னே! பொழில் சூழ்தரு**
**திருவேங்கட மாமலை மேவிய பெருமானே!**

யானைப்படையும்; தாவும்படியான குதிரைப் படையும். திரண்ட காலாட்படையும், ஒன்றாகக் கூடி இருக்கின்ற துரியோதனன் முதலியவர்கள், யுத்த களத்தில் இறந்தழிய பாரத யுத்தத்திற் சென்று. பெருமை பொருந்திய பாண்டவர்களின் தேரிலே, கட்டிக் கிளம்பிப் பாயும் குதிரைகளைச் செலுத்திய தேரோட்டியாகிய. ஒளி வளர்ந்துள்ள சுதரிசனம் என்னும் சக்கராயுதத்தை உடையவனும், அரியும் இரகுராமனும், அலைகள் ஓங்கி ஒலிக்கின்ற கடலும், வாலியாகிய குரங்கரசனும், மிகவும் வளர்ந்தள்ள ஏழு மாமரங்களும், பத்துத் தலைகளையுடைய இராவணனாகிய அரக்கர் அரசனின் பொன்முடி பொடிபடும்படி வில்லை வளைத்தருளிய திருமாலினுடைய மருமகனாகிய குகக் கடவுளே! சோலைகள் சூழ்ந்த, திருவேங்கடமாகிய சிறந்த மா மலையின் கண்ணே எழுந்தருளி இருக்கும் பெருமானே! செவ்வரி பரந்துள்ள சேல் மீனோ! கயல் மீனோ என்று சொல்லப்படும், மானையும், வடித்து எடுத்துச் செய்யப்பட்ட வேலாயுதத்தையும் நீலோற்பல மலரையும், மாம் பிஞ்சினையும் பகைவர்களின் உயிரை வாங்கும் வேலாயுதத்தையும் ஒத்த, கண்களையுடைய பெண்கள், காமுகராகிய காளையரைப் பிடிக்கும்படி வீசும் வலையினாலும் வளர்கின்ற கோங்கினுடைய இளமையான சிறப்பான அரும்பை நிகர்த்த முலைகளின் மேல் வைத்த ஆசையினாலும் முகத்தினது மயக்கத்தாலும், செழுமையான மாமரத்தினது தளிரைப் போன்ற, நிறம் பொருந்திய உருவத்தினாலும், இருளை நிகர்த்த நீண்ட கூந்தலின் நிழலிலே காம மயக்கங் கொண்ட படுக்கையின் மேலே பொருந்த, இனிமையைக் கொண்ட, கோவைக்கனி போன்ற

இதழின் அமுதாகிய ஊறல்கள், உண்ணாதபடி, எனது ஆனதான தனதானவைகள் மலத்தினாலே உண்டாகிய மிகுந்த காம மோக விகாரமும் ஆகிய இக் குற்றங்கள் அகன்றிட, இரண்டு திருப்பாதங்களாகிய மலர்களை அடியேனுக்குத் தந்தருள்வீராக.

வரி சேர்ந்திடு சேல் கமலோ எனும் - 'செவ்வரி பரந்த சேலையும் கயலையும் ஒத்த' என்று பொருள்.

உழை - மான் மருண்ட நோக்குக்கு மான் உவமம்; வார்ந்திடு வேல் - வடித்தெடுத்துச் செய்யப்பட்ட கண்கள். கண் வலை - கண்ணாகிய வலை, இதனை, "காமனை வென்றிருண்ட கண்வலை வீசுமின்னார்" என்ற தாயுமானவர் வாக்கானும் அறியலாம்.

மாதர்கள் பொதுநோக்காற் காமத்தை மூட்டிப் பின் உள்ளக் காதலை உணர்த்தும் குறிப்பு நோக்கால் தாம் ஒன்றுபட இருக்கும் எண்ணந் தெரிவித்தலின் அந் நோய்க்கு மருந்துமாகி ஆடவரை வசப்படுத்தலின், 'கண் வலை வீசு மின்னார்' என்றார். இதனை,

*"உண்ணிற் சிறந்த இருநோய் தனக்கின் மருந்தாய்*
*கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதுங் காட்டியதே"*

என்ற பொய்யமொழியார் வாக்கானும்,

*"இருநோக் கிவளுண்கண் ணுள்ளது ஒருநோக்கு*
*நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"*

என்ற திருக்குறளானும் அறியலாம். இன்னும்,

*"பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும்*
*பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்கண்களே"*

என்ற மணிவாசகர் வாக்கானும் அறியலாம்.

வளரும் பூரிக்கும் இயல்புடையதாலின், 'வளர்கோங்கிளமா முகையாகிய தனம்' என்றார். முகமாயை - முகத்தைக் கண்டு மயங்கும் மயக்கம்.

'வளி சேர்ந்திடு... மலமாங்கடு மோக விகாரமும் இவை நீங்கிட' என்ற கருத்தைத் தாயுமானவர்.

*"பருவங் குலவுகின்ற மடமங் கையர்தொடங்கு*
*கடடந் தனில்விழுந்து - கெடுநினைவாகி*
*வளையின் புடைமறிந்த மறியென் றவசமுண்டு*
*வசனந் திரமுமின்றி - யவரிதழூறல்*
*பருகுந் தொழிலிணங்கி யிரவும் பகலுமின்சொல்*
*பகரும் படிதுணிந்து - குழலழகாக*
*- மாலை வகைபல சூடியுடனே,*

*பதுமந் தனையிசைந்த முலையென் றதையுகந்து*
*வரிவண் டெனவுழன்று - கலிலெனவாடுஞ்*
*சிறுகிண் கிணிசிலம்பு யுனைதண் டைகண் முழங்கும்*
*ஒளிநன் றெனமகிழ்ந்து - செவிகௌநாசி*
*பசுமஞ் சளின்வியந்து மணமுந் திடமுகந்து*
*பவமுஞ் சிடலிறைஞ்சி - வரிசையினூடு*
*- காலின் மிசைமுடி சூடிமயலாய்,*

*மருளுந் தெருளும் வந்து கெதியென் பதைமறந்து*
*மதனன் சலதிபொங்க - விரணமதான*
*அளியுண் டனைவளைந்து விரல்கொண் டுறவளைந்து*
*சுரதஞ் சுகமிதென்று - பரவசமாகி*
*மருவுந் தொழின்மிகுந்து தினமுந் தினமும்விஞ்சி*
*வளரும் பிறைகுறைந்த - படிமதிசோர*
*- வாரைம தெனமேனி திரையாய்"*

கூறிய வண்ணக்கலைகளால் அறியலாம்.

எழுபரி தூண்டிய சாரதியாகியது கண்ணனாகி பார்த்னுக்குப் போர்க்களத்தில் தேரோட்டியதை. இதனாலேயே கண்ணனுக்குப் 'பார்த்த சாரதி' என்றோர் திருநாமம் உண்டாயிற்று.

கடலில் கணை விட்டது. கடலில் அணை கட்ட நினைத்து வருணனை வேண்டியபோது வராமையால் சினந்து அம்பு ஒன்று ஏவியதை. 'சிலை வாங்கிய' - வில்லை, வளைத்த - நாரணன் - 'உலகுக்குத் தலைவன். நீரின்மேல் உறங்குவன்' என்பன வாதிப் பொருள் தரும் காரணப் பெயர். 'வேங்கடம்' என்பதற்கு 'அடியார் பாவங்களை நீறாக்குவது. எல்லாச் செல்வங்களையும் தருவது' என்பது ஆதிப் பல் நல் பொருள் குறித்த சொல்.

"பாண்டவர் சகாயனும், சக்கராயுதனும், வருணனை - வாலியை - மராமரத்தை இராவணனைச் சினந்து வில்லை வளைத்தருளியவரும் ஆகிய திருநாரணனுக்கு மருமகனே! மாதர் மயக்கில் விழுந்து கெடும் என் கொடு மோகவிகாரம் நீங்க உனது இரு தாண் மலர் அருள்வாய்" என்றது கருத்து.

32. தான தத்தன தத்தன தத்தன
தான தத்தன தத்தன தத்தன
தான தத்தன தத்தன தத்தன - தனதான

ஆலம் வைத்தவி ழிச்சிகள் சித்தச
னாக மக்கலை கற்றச மர்த்திகள்
ஆர்ம னத்தையும் மெத்திவ ளைப்பவர்தெருவூடே

ஆர வட்டமு லைக்குவி லைப்பணம்
ஆயி ரக்கலங் கொட்டிஅ ளப்பினும்
ஆசை யப்பொரு ளொக்கந டிப்பவ ருடன்மாலாய்

மேல்இ ளைப்புமும் சிப்பும் அவத்தையும்
மாயெ டுத்தகு லைப்பொடு பித்தமும்
மேல்கொ ளத்தலை யிட்டவி திப்படி அதனாலே

மேதி னிக்குள பத்தன்ன னப்பல
பாடு பட்டுபு முக்கொள்ம லக்குகை
வீடு கட்டியி ருக்கும்ள னக்குநின் அருள்தாராய்;

பூலி மிக்கம யிற்றுர கத்தினில்
ஏறி முட்டவ ளைத்துவ குத்துடல்
பீற லுற்றவு யுத்தக ளத்திடை மடியாத

பேர் அரக்கர்ள திர்த்தவ ரத்தனை
பேரை யுகரக ளப்பலி இட்டுயர்
பேய்கை கொட்டிந டிப்பம ணிக்கழு குடனாட

ஏலம் வைத்தபு யத்தில் அணைத்தருள்
வேல் எடுத்தச மர்த்தை உரைப்பவர்
ஏவ ருக்கும னத்தினி னைப்பவை அருள்வோனே!

ஏழி சைத்தமி ழிற்பயன் உற்றவெ
ணாவ லற்றடி யிற்பயி லுத்தம
னீசன் முக்கணி ருத்தன ளித்தருள் பெருமானே!

தோகைகள் மிகுந்த மயிலாகிய பரியின் மேலே இவர்ந்து முற்றிலுஞ்சுற்றி வியூகங்களை அணிவகுத்து உடம்பு சிதைவு பட்ட போர்க்களத்தில் சாவாத, பெருமைபெற்ற அரக்கர்களுள், எதிர்த்தவர்கள் அத்தனை பேரையும் சினம் மிகுந்த போர்க்களத்தில் பள ஆக இட்டு, உயர்ந்த பேய்கள் கைகளைக் கொட்டிக் கூத்தாடவும், மணி நிறம் பொருந்திய கழுகுகள் கூடி விளையாடவும், கலவைச் சாந்து பூசிய தோளில் சேர்த்து வைத்தருளுகின்ற வேலாயுதத்தை எடுத்தருளிய திறத்தை

புகழ்ந்து கூறுவோர்கள் எல்லோருக்கும், அவரவர்கள் மனத்திலே எண்ணுகின்றவை எல்லாவற்றையும் அருள் செய்பவனே! ஏழ்வகை இசை பேதங்களோடு கூடிய தமிழ்ப் பாட்டுக்களால் பயன் கொண்டு, வெண்ணாவல் மரத்தை விரும்பி அதனடியில் கோயில் கொண்டிருக்கும், நன்மை மிகுந்த ஈசுரனும், மூன்று கண்களை உடையவரும், நடனம் புரிவோருமாகிய சிவபெருமான், பெற்றருளிய பெருமானே! நஞ்ச பொருந்திய கண்களை உடையவரும், மன்ம ஊடல்கூடல் கலைகளை எல்லாங் கற்றறிந்த திறத்தை உடையவர்களும், எப்படிப்பட்டோர் நெஞ்சத்தையும் ஏமாற்றித் தங்கள் வசப்படுத்திக் கொள்வோரும், தெரு நடுவில் முத்துமாலை தரித்த வட்டமான முலைகளுக்கு விலையாகப் பணத்தை ஆயிரங் கலங்களாக, கொட்டிக் கொட்டி அளந்தாலும், ஆசை அவர்கள் தந்த அந்தப் பொருள்களுக்குத் தகுந்தபடி, கபட நாடகஞ் செய்கின்ற விலை மாதர்களினிடம் காம மயக்கங்கொண்டு, தேக இளைப்பும், இழுப்பும், வேதனைகளும் ஏற்பட்டு, அதற்கு மேலும் உண்டாகிய இருமலோடு பித்தமும் அதிகப்பட, தலையிலே எழுதிய விதியின்படியே, இந்த மண்ணிலே உனது அடியவன் என்று பற்பல வகையான துன்பங்களையும் நுகர்ந்து புழுக்கள் செறிந்த மலைக்குகையாகிய, தேகமாகிய இந்த வீட்டைக் கட்டியிருக்கின்ற அடியவனாகிய எனக்கு, தேவரீருடைய திரு அருளை தந்தருள்வீராக.

ஆலம் வைத்த விழிச்சிகள் -'நஞ்சந் தோய்ந்த நயனத்தார்' என்பது பொருள். இதனால் அன்றோ அம்பிகாபதியும்,

*"வரியரவ*
*நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்"*

என்றார்.

சித்தசன் - மன்மதன்; 'எல்லோர் மனத்தினும் காம ஆசையை எழுப்புவோன்' என்பது பொருள். சித்தசனாகமக்கலை - மதனாகம நூல் – கொக்கோகம்.

முலை விலையாக ஆயிரக்கலம் அளித்தாலும் அவர் கொடுத்த அந்தப் பணத்திற்குத் தகுந்தபடி வஞ்சகமாக நடிப்பவர் என்பதனை. 'ஆர வட்டமுலை ...... நடிப்பவர்' என்றார். இதனை,

*"அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்*
*செங்கண்மா லாயினு மாமகன் – தங்கைக்*
*கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தலின் ரன்னார்*
*விடுப்பர்தங் கையாற் றெழுது"*

என்றும்.

*"ஆமாப்போல் நக்கி அவர் கைப்பொருள் கொண்டு*
*சேமாப்போற் குப்புறூஉம் சில்லைக்க ணன்பினை*
*ஏமாந்தெமதென் றிருந்தார் பெறுபவே*
*தாமாம் பலரா னகை"*

எனவும்,

*"ஆணமி னெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குக்*
*காணமில் லாதார் கடுவனையர்"*

என்றும் நாலடியிற் கூறினர்.

முன்னாளில் நல்வினை செய்யாததினால் மாமயிலோய் உன் கழலை இப் பிறப்பிற் பூசியாது மாதர் தம்மைக்கூடி நோயால் வாடினேன் என்பார். 'தலையிட்ட விதிப்படி' என்றார். இதனை,

*"மட்டுப் படாக்கொங்கை மானார் கலவி மயக்கத்திலே*
*கட்டுப்பட்டாய் என்ன காதல்பெற் றாய்மதன் கையம்பினாற்*
*பட்டுப்பட்டாயினுந் தேறுவை யோவென்று பார்த்திருந்தேன்*
*வெட்டுப்பட டாய்மகனே! தலைநாளின் விதிப்படியே"*

என்ற கம்பர் வாக்கானும் அறிக.

அடியார்களாகி ஒழுகும் புண்ணியர்பால் நமனும் கிட்டவரான்; அவர் தலையில் பிரமனும் துன்புறும்படி விதிக்கமாட்டான். இதனை,

*"பாட்டான நைவண்டு பாடுங் குலுச்சண் பகவல்லிதன்*
*திட்டா மரையைத் தொழுதே னினியென் றலையின்விதி*
*தீட்டான் கருமுகில் போலே வருமந்தச் சேட்டெருமை*
*மாட்டான் இனிவர மாட்டான்வந் தாலும் வணங்குவனே"*

என்ற ஒப்பிலாமணி வாக்கானும் உணரலாம்.

புழுக்கொள் மலக்குகை வீடுகட்டி இருக்கும் – 'புழுமலிந்த இந்த உடம்பாகிய வீட்டைக் கட்டிக்கொண்டிருக்கும்' என்றதாம். இதனை,

*"கொழுந்தசை மேய்ந்து மொழுக்குவிழுங் குடலை*
*செழும்பெழு உதிரச் சிறுபுழுக் குரம்பையை*
*மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்*
*தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியை"*

என்ற பட்டினத்தடிகள் பா வடிகளிலும் காண்க.

எப்படிப்பட்ட பாவிகளாயினும் வேலைப் புகழ்ந்தால் அவர்களுக்கு முருகன் அவர் வேண்டிய வேண்டிய வெல்லாந் தந்தருள்வன் என்பதை.

*"வேலெ டுத்தச மர்த்தை உரைப்பவர்*
*ஏவ ருக்கும னத்தினி னைப்பவை யருள்வோனே"*

என்றார்.

வெண்ணாவன் மரத்தடியில் உற்றது திருவானைக்கா என்னும் திருத்தலத்தில். இதற்கு **சம்புகேச்சுரம்** என்னும் பெயரும் உண்டு.

ஏழிசைத் தமிழிற் பயனுற்ற - 'ஏழ்வகை இசையைக் கொண்டு தமிழ் பயன் பெற்றவர்' என்பதாம்.

சிவபெருமான் தமிழ்க்கு முதல் ஆசிரியராகவும் முத்தமிழ் மூன்று சங்கத் தலைமைப் புலவராகவும் இருந்த தன்றிச் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் முதலான அடியவர்கள் பாட்டை உவந்து கேட்டவரும் ஆதலின் இவ்வாறு கூறினார். இதனை,

*"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென்*
*சிந்தையுள்ளும்*
*உறைவான் உயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் டீந்தமிழின்*
*றுறைவான் நுழைந்தனை யோவன்றி ஏழிசைச்*
*சூழல்புக்கோ*
*இறைவா தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந்*
*தெய்தியதே"*

என்ற திருக்கோவையாரானும்,

*"அரியன் கண்டாய் தமிழன் கண்டாய்*
*அண்ணாமலை யுறையும் அண்ணல்தானே"*

என்றதனாலும் அறியலாம்.

முக்க ணிருத்தன் - 'மூன்று கண்களை உடையவனும், நடனம் புரிவோனும் ஆகிய 'சிவபெருமான்' என்பது பொருளாம். இது ஐந்தொழிலும் நடைபெறும்படி ஆகும் ஆனந்தக் கூத்து. இதனை,

*"தோற்றமொரு கைதுடியிற் றிதியபயந் தருகரத்திற்*
*றொலைவோர் செங்கை*
*ஏற்றகவைக் கொழுந்தழலிற் றிரபவமூன் றியதாளில்*
*எடுத்த தாளின்*
*மாற்றரிய அருள்வயங்க இருள்முனிவர் பணிந்து துதி*
*மகிழ்ந்து பாடச்*

*சாற்றரிய அம்பலத்துள் நடநவிலும் பெருமானைச்*
*சார்ந்து வாழ்வாம்*

என்ற உறந்தைப் புராணத்தாலும் அறிக.

*"தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்*
*ஊன்று மலர்ப்பதத்தே உற்ற திரோதமுத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு"*

என்றார் உண்மை விளக்கத்திலும்.

இதனால், "வேலைப் புகழ்வோர்க்கு அருள் செய்பவனே சிவ குமாரனே உனதடியவன் ஆகியும் மாதர் மயக்கில் விழுந்து நோயுறும் அடியேன் தலைவிதிபோக அருள்வாயாக" என்று வேண்டினாராயிற்று.

***



சிக்கல் ஸ்ரீ சிங்காரவேலன்

# திருக்கற்குடி

33.தனதத்த தனத்தத் தனத்தத்
தனதத்த் தனத்தத் - தனதான

குடத்தைத் தகர்த்துக் களிற்றைத் துரத்திக்
குவட்டைச் செறுத்துக் ககசாலக்

குலத்தைக் குமைத்துப் பகட்டிச் செருக்கிக்
குருத்தத் துவத்துத் தவர்சோரப்

புடைத்துப் பணைத்துப் பெருக்கக் கதித்துப்
புறப்பட டகச்சுத் தனமாதர்

புணர்ச்சிச் சமுத்ரத் திளைப்பற் றிருக்கப்
புரிந்துப் பதத்தைத் தருவாயே

கடத்துப் புனத்துக் குறத்திக் குமெத்தக்
கருத்துஇச் சையுற்றுப் பரிவாகக்

கனக்கப் பிரியப்பட்டு அகப்பட்டு அமைக்க
கடைப்பட் டுநிற்கைக்கு உரியோனே!

தடத்துஉற் பவித்துச் சுவர்கத் தலத்தைத்
தழைப்பித் தகொற்றத் தனிவேலா!

தமிழ்க்குக் கவிக்குப் புகழ்செய்ப் பதிக்குத்
தருக்கற் குடிக்குப் பெருமாளே!

குறிஞ்சிக் காட்டிலுள்ள தினைப்புனத்துக் காவல் செய்துகொண்டிருந்த வள்ளி அம்மையாருக்கு, மிகவும் தன்மனத்தில் ஆசை கூர்ந்து, பிரியத்துடனே, அதிகமாகக் காதல்கொண்டு அகப்பட்டு, மையுண்ட விழிகளின் கடையில் சிக்கி, நிற்பவர்க்கு, உரித்தானவனே! சரவண மடுவில், அவதரித்து,

தேவர்தம் பொன் உலகத்தை, தழையச் செய்தருளிய, வெற்றி பொருந்திய ஒப்பற்ற வேலாயுதத்தை உடையவனே! தமிழ் மொழிக்கும் பல்வகைப் பாடல்களுக்கும் எல்லோரும் புகழ்தற்குரிய வயலூருக்கும், வேண்டும் வரங்களைத் தரவல்ல திருக்கற்குடி என்னுந் தலத்திற்கும், பெருமானே! குடத்தை உடைத்தும், மதக் களிப்புடைய யானையைத் துரத்தியும், மலைச் சிகரத்தைக் கோபித்தும், சக்ரவாளப் பறவைக் கூட்டத்தை அழித்தும், மருளச் செய்து களிப்புக்கொண்டு, ஆசான் அறிவுரை உண்மையினைக் கடைப்பிடித்த முனிவர்களும் சோர்வடைய, விம்மித் திரண்டு பருத்து, பெருகி எழுந்து, வெளிக் கிளம்பிய வாரணிந்த தனத்தையுடைய பெண்களின் இன்பப் புணர்ச்சிக் கடலில் திளைத்தில் இன்றி நீங்கி இருக்கும்படி, விரும்பி, திருவடி அளித்தருள்வாயாக.

களிறு - ஆண் யானை; 'மதக் களிப்பை உடையது' என்பது பொருள். குலத்தை - கூட்டத்தை; 'குருத்தத்துவத்துத் தவர்சோர' என்றதில் உம்மை தொக்கது. மாதர் - அழகு உடையவர்; 'காதலைச் செய்பவர்' என்ற பொருளில் வந்த பெண்பாற் பெயர்.

முருகன் தமிழ்க்குப் பெருமாள் என்றது அகத்தியர்க்குத் தமிழ் ஓதியதனாலும், சங்கத்துப் புலவராக இருந்ததானாலும் என்பர். இதனை,

*"இதனை முருகன் சங்கத் திருப்பவன் எம்முக்கண்*
*கடவுள் நிற்பவன் வாழ்*
*அரசன் புயலை விலங்கிட்டோன்"*

என்னும் வேம்பத்தூரார் வாக்காலும் அறிக.

இன்னும் வேடனாக நின்று பொய்யாமொழியாரிடம் தன் பெயரை "முட்டை" என்று கூறிச் சுரம் போக்காகப் பாடக் கூறி அவர் பாடிய,

*"பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே*
*என்பேதை செல்லற் கிசையந்தனளே - மின்போலும்*
*மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்*
*கானவேன் முட்டைக்குங் காடு"*

என்று பாடி பாட்டுப் பொய்த்த மொழி கூறி.

*"விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின்*
*எழுந்து சுடர்சுடுமென்று ஏங்கிச் - செழுங்கொண்டல்*
*பொய்யாத கானகத்திற் பெய்வளையுஞ் சென்றனளே*
*பொய்யா மொழிப்பகைவர் போல"*

என்று பாடியதாலும், 'கவிக்குப் பெருமானே' எனவுங் கூறினர்.

தமிழ் 'இனிமை உடையது' என்னுங் காரணம்பற்றி வந்த பெயர். (தாம் + ஈழ்) எனவும் பிரித்துத் 'தனக்குத் தானே ஒத்த தேன் துளி போலும் இனிமை உடைய சொற்களை உடைய மொழி' என்பாரும் உண்டு.

'கற்குடி' இது திரிசிராமலைக்குத் தென்மேற்கே மூன்று கல் தொலைவில் உள்ளது; இதனை உய்யக்கொண்டான் மலை என்றுங் கூறுவர். செய்பதி - வயலூர்; இது கற்குடி மலைக்கு நேர்மேற்கே உள்ளது.

"கற்குடிப் பெருமானே! வள்ளியம்மையாரிடத்து மிகுந்த காதலை உடையவனே! பெண்கள் போகத்தில் மயங்காதபடி நின்தாள் மலர் தருவாயாக! என்று வேண்டினார்.

***

## திருச்செந்தூர்

34. தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன - தனதான

அளக பாரம் அலைந்துகு லைந்திட
வதன வேர்வுது லங்கிந லங்கிட
அவச மோகமவி ளைந்து தளைந்திட அணைமீதே

அருண வாய்நகை சிந்திய சம்ப்ரம
அடர்ந காநுதி பங்கவி தஞ்செய்து
அதர பானம் அருந்திம ருங்கிற முலைமேல்வீழ்ந்

துளமும் வேறுபடும் ஒன்றிடும்
மகளிர் தோதக இன்பின்மு யங்குதல்
ஒழியு மாறுதெ ளிந்துள தன்பொடு சிவயோகத்து

உருகு ஞானப ரம்பர தந்திர
அறிவி னோர்க்கரு தங்கொள் சிலம்பணி
உபய சீதள பங்கய மென்கழல் தருவாயே;

இளகி டாவளர் சந்தனம் குங்குமம்
களபம் பூரண கொங்கை நலம்புனை
இரதி வேள்பணி தந்தையும் அந்தண
மறையோனும்

இனிது றாதுஎதி ரிந்திர னண்டரு
மரக ராசிவ சங்கர சங்கர
வெனமி காவரு நஞ்சினை யுண்டவ ரருள்பாலா!

வளர்நி சாசரர் தங்களிசி ரம்பொடி
படவி ரோதம் இடுங்குல சம்ப்ரம
மகர வாரிக டைந்தநெ டும்புயல் மருகோனே!

வளரும் வாழையும் இஞ்சியு மஞ்சளும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கள
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை பெருமாளே!

இளகி, வளர்கின்ற சந்தனத்தையும் குங்குமத்தையும் கலவைச் சாந்தையும் பூசியுள்ள நிறைவாகிய தனங்களின் நன்மையைக் கொண்ட, இரதியின் கணவனாகிய மன்மதன், வணங்கும்படியான தந்தையும் மன்மதனின் தந்தையாகிய, திருமாலும், அழகிய தண்ணருளை உடைய பிரமதேவனும், இன்பத்தடையாது துன்பப்படவும் பகைவர்களை எதிர்கின்ற தேவேந்திரனும் தேவர்களும், அரகரா! சிவசங்கரா! சங்கார! என்று அஞ்சி ஓலமிட்டுக் கூறும்படி மேலே ஓங்கிப் பொங்கி வரும் ஆலகாலவிடத்தை அத்தேவர்கள் உய்யுமாறு அமுது செய்தருளும் சிவபெருமான் பெற்றருளிய திருப்புத்திரனாகிய முருகக் கடவுளே! மேன்மேலும் துன்மார்க்கத்தில் வளர்ந்து கொண்டுவரும் அசுரர்களின், தலைகள் நீறாகும்படி பகை பாராட்டுகின்ற குலத்தின் பெருமை உடையவனும், சுறவு மிகுந்த நீண்ட கடலைக் கடைந்த, நீண்ட உருவம் திரிவிக்கிரம அவதாரம் கொண்ட நீர் கொண்ட மேகம்போலும் திருமாலின் மருமகனே! கொழுமை கொண்டு சீக்கிரம் வளரும் இயல்புடைய வாழை மரங்களும், இஞ்சியும், மஞ்சட்கிழங்கும், சற்றும் இடமின்றி அடர்ந்து வளர்ந்துள்ள நலம்பல கொண்ட பெருமையை உடைய சிறந்த நகரமாகிய திருச்செந்தூர் என்னும் திருப்பதியில் வந்து பொருந்தி வீற்றிருக்கும் பெருமானே! கூந்தல்சுமை, அலைந்து சோர்தரவும் முகத்திலே, வேர்வை விளங்கி அழகு சிந்தவும், பரவசமாகும் மோகம் உண்டாகி, கட்ட படுக்கையின் மேலே, சிவந்த வாயினால் முறுவலை மிகுதியாகச் செய்யும்,

அலங்காரமாக, நெருங்கிய நகத்தின் முனையினால் குறிகள் அழுந்தும்படி பலவித ஆடல்களைச் செய்து, இதழின் அமிர்தமாகிய ஊறலை உண்டு இடை முறியும்படி கொங்கைகளின் மேல் விழுந்து, மனமும் வேறாக, கூடும் மாதர்களின், வஞ்சகத்தை உடைய இன்ப சுகத்தில் நீங்கும் வண்ணம், மனந் தெளிவடைந்து உள்ளன்போடு செம்பொருள் யோகத்திலே மனமானது உருகும்படியான மெய்ஞ் ஞானத்தையுடைய, ஆகம சாத்திரங்களிலே மிகப் பயின்ற அறிவை உடையவர்கள், சிந்திக்கின்ற அழகைக் கொண்டுள்ள பாதச் சிலம்பைத் தரித்துள்ள, இரண்டாகிய குளிர்ச்சி பொருந்திய, செந்தாமரை மலரை நிகர்த்த மெதுவமைந்த அழகிய நின் தாள்களைத் தந்து ஆள்வாயாக.

இன்ப ஊடல் கூடல் காலத்து மாதர்களுக்கு வியர்வு தோன்றும்; அதுவும் அழகுடையதாகக் காணும், பின் மெலிவால் தேகம் தளர்ந்து வாடும்; ஆதலினால், 'அளக பாரமலைந்து குலைந்திட வதன வேர்வு துலங்கி நலங்கிட' என்றார். இதனாலன்றோ இன்னின்னவை அழகுடையன எனக் கூறும் ஒரு வெண்பாவில் இதனை முதற் கூறினார்.

*"சுரதந் தனிலிளைத்த தோகை கதிர்த*
*விரதந் தனிலிளைத்த மேனி - நிரதம்*
*கொடுத்திளைத்த தாதா கொடுஞ்சமரிற் பட்ட*
*வடுத்துளைத்த கல்லபிரா மம்"*

மாதர் ஆசையில் வீழ்ந்து போகந்துய்ப்போர் அறத்தை மறந்து ஒழிவர். ஆதலின், 'முலைமேல் வீழ்ந்து உளமும் வேறு படும்படி யொன்றிடு' என்றார். ஒன்றிடல் - ஈருடலும் ஒருடல்போல் கட்டி பிணைந்திருத்தல்.

அறிவினோர்க் கருதங்கொள்ள சிலம்பணி - 'கற்றறிந்த அறிவு உடையவர்கள் நினைக்கும்படியான முத்தி இன்பந் தரும்

அழகிய சிலம்பணிந்த' என்பது பொருள். சிந்துர - சிந்துரப் பொட்டணிந்தவன், இனி, 'சிந்துரம் — யானை. தேவயானையை மணந்து கொண்டவனே' என்னும் ஆம்.

சிவம் - 'மங்களகரமானது. அழிவில்லாதது' எனும் பொருளது. மிகாவரு - மிகக் கொடுமை தரும்படி வந்த என்பது பொருள். சிவபெருமான் நஞ்சை உண்ணாவிடில் தேவரெலாம் முன்னரே மாண்டிருப்பர்; செத்த இடத்திற் புல்லும் முளைத்துப் போய் இருக்கும். இதனாலன்றோ,

*"கோலால மாகிக் குறைகடல்வாய் அன்றெழுந்த*
*ஆலால முண்டா னவன்சதுர்தா னென்னே*
*ஆலால முண்டிலனே லன்றயன்மால் உள்ளிட்ட*
*மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ"*

என்ற மணிவாசகர் வாக்காலும் அறியலாம். செந்தில் திருச்செந்தூர்; இதற்குத் திருச்சீரலைவாய் என்றும் பெயர்.

"தேவர்களைக் காத்தற் பொருட்டு ஆல முண்டவர் பாலா! வாரி கடைந்து அமுது தந்து தேவர்களுக்கு அருள் செய்த திருமால் மருகா! திருச்செந்தூர்ப் பெருமானே! வஞ்சக வஞ்சியர் மயக்கில் விழாதபடி அறிவினர் கருதும் சீதள பங்கயமென் கழல் தா" என்கின்றார்.

*"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவ னடிசேரா தார்"*

என்றார் குறளிலும்.





# திருஅருணை

35.தனனா தனனத் தனனா தன்னத்
தனனா தனனத் - தனதான

அருமா மதனைப் பொருவாள் கயல்குத்து
அயிலார் நயனக் கொடியார்த

அழகார் தனநற் புழுகார் சயிலத்து
அணையா வலிகெட்டு உடல்தாழ

இருமா நடைபுக் குரைபோ புணர்வற்று
இளையா வுளமுக் குயிர்சோர

எரிவாய் நரகில் புகாத படிக்கு
இருபா தமெனக் கருள்வாயே;

ஒருமால் வரையைச் சிறுதூள் படவிட்டு
உரமோடு எறிபொன் கதர்வேலா!

உறைமான் அடவிக் குறமா மகளுக்கு
உருகா இருபொற் புயவீரா!

திருமால் கமலப் பிரமா விழியில்
தெரியா வரனுக்கு அரியோனே!

செழுநீர் வயல்கற் றருணா புரியில்
திருவீ தியினில் பெருமாளே!

ஒப்பற்ற மிகப் பெரிய கிரௌஞ்ச வெற்பை அணுவணுவான துகளாகும்படி, எண்ணி விட்டெறிந்த, அழகிய ஒளிசெய்யும் வேலாயுதத்தை உடையவனே! மான்கள் வசிக்கும் குறிஞ்சிக் காட்டில் உள்ள, குறவருடைய சிறந்த பெண்ணாகிய வள்ளிநாயகியாருக்கு, காதலினால் உருகுகின்ற, பெரிய அழகிய



பன்னிரு புயங்களை உடைய வீரனே! திருமாலுக்கும் உந்தியந்தாமரையிற் பிறந்த பிரம்மாவுக்கும், தங்கள் ஊனக் கண்ணால் கண்டு கொள்ள முடியாதபடி ஒளிமயமாக நின்ற, சிவபெருமானுக்கும் அரியவனே! செழுமையான நீர் நிறைந்த வயல்கள் சுற்றிலும் உள்ள, திருவண்ணாமலை என்னும் திவ்விய தலத்தின் திருவீதிகளிலே திருவலம் வரும் பெருமானே! அருமையான சிறந்த மன்மதனோடு, காமப்போரைச் செய்யும், வாளாயுதத்தையும் கயல்மச்சத்தையும் தனக்கு ஒப்பின்மையால் அவைகளைக் குத்துகின்ற வேலுக்கு ஒப்பான, கண்களை உடைய

கொடிய பெண்களினுடைய, அழகு நிறைந்த, தனங்களாகிய நல்ல புழுகு நிறைந்த வெற்புகளில் கூடிப் பலம் அழிந்து சரீரம் தாழ்வடைந்து இருமி, தள்ளாட்ட நடையிலே புகுந்து, சொல்லற்று அறிவுகெட்டு, மெலிந்து போய், மனமுடைந்து உயிரானது சோர்வடையும்படி, நெருப்புப் பொருந்திய நரகத்திலே நான் விழாதபடிக்கு, உன்னுடைய இரண்டு திருவடிகளையும், அடியவனாகிய எனக்குத் தந்தருள்வாயாக.

உருவில்லாதவன் ஆதலின், 'எவராலும் காணற்கரிய மன்மதன்' என்ற பொருளில் , 'அருமா மதன்' என்றார். அயிலார் – 'வேலை ஒத்த கண், காமக் கூரமைந்த கண்' எனினும் ஆம். கொடியார் – 'வஞ்சிக் கொடி' பூங்கொடி. மின்னற்கொடி போல்வார் என்பது பொருள். கொடி போல்வாரைக் கொடி என்றது உவமை ஆகுபெயர். கொடியார் லி 'கொடியவர்' என்ற பொருளும் ஆம். ஈங்கு இருபொருள் தரச் சிலேடையாகக் கூறினார்.

பெண்கள் காதல் நரகம் தரும் என்றதனால், 'வலி கெட்டு– எரிவாய் நரகிற் புகாதபடிக்கு' என்றார். இதனை,

*"தாளத் தனத்தத்தைச் சொல்லிய ராலவரும் தாழ்மலபா*
*தாளத் தனத்தத்தைப் தப்புநிற் பீர்"*

என்றார் திருவரங்கத்தந்தாதியிலும்.

அணையா, புகுதா - செய்யா என்னும் வாய்ப்பாட்டு விளையெச்சங்கள்,

"மால் பிரமர் கண்ணாற் காணற்கு அரிய சிவபெருமான் மகனே! கிரவுஞ்சம் பிளக்க வேல் விட்ட வீரனே! நான் மாதர் போகத்தில் மூழ்கித் தேக வலி கெட்டு நரகத்திற்குப் போகாதபடி நின் இரு மலர்த்தாள் தந்தருள்க" என்று வேண்டுகின்றார்.

*"மாதர்மய லாமவர்தம் மைவிழியே வன்பாசம்*
*பீதிதரு மல்குல் பெருநரகம் – ஓதிலதில்*
*வீழ்ந்தோர்க்கு மேற விதியில்லை யோருரைத்*
*தாழ்ந்தோர்க்கு மில்லை தவறு"*

என்ற முன்னோர் வாக்கானும் அறியலாம்.

36. தனனதான தானனா தனனதான தானான
தனனதான தானனா – தனதான

அதலசேட னார்ஆட அகிலமேரு மீதாட
அபினகாளி தான்ஆட அவளோடுன்று

அதிரவீசி வாதாடும் விடையில் ஏறு வார்ஆட
வருகுபூத வேதாளம் அவையாட

மதுரவாணி தான்ஆட மலரில்வேத னார்ஆட
மருவும்வானு ளோர்ஆட மதியாட

வனசமாமி யார்ஆட நெடியமாம னார்ஆட
மயிலுமாடி நீயாடி வரவேணும்

கதைவிடாத தோள்வீமன் எதிர்கொள்வாளி யால்நீடு
கருதலார்கள் மாசேனை பொடியாகக்

கதறுகாலி போய்மீள விசயன் ஏறு தேர்மீது
கனகவே கோடூதி அலைமோதும்

உததிமீதி லேசாயும் உலகமூடு சீர்பாத
உவண ஊர்தி மாமாயன் மருகோனே!

உதயதாம மார்பான பிரபுடதேவ மாராசன்
உளமுமாட வாழ்தேவர் பெருமானே!

கதாயுதத்தை நீங்காது சார்த்தி வைக்கப்பெற்ற தோள்களையுடைய வீமனானவன், தன்னை எதிர்த்து வருகின்ற கணைகளைக் கொண்டே, வன்மை மிகுந்த சத்துருக்களின் பெருங்கூட்டம் நீறாக அழியச்செய்யும் போர்க்களத்தில், தன் கன்றை நினைத்துக் கதறுகின்ற பசுக்கள், தத்தம் இடங்களில் போய்ச் சேரவும், அருச்சுனன் ஏறும்படியான தேரின் மேலே இருந்துகொண்டு, பொன் மயமான மறை முறையே துதிக்கும் சங்கை வாய் வைத்து ஊதி, அலைகள் மோதுகின்ற, கடலின்மேல் படுத்துக் கிடக்கும் உலகத்தை அளந்து மூடிய, சிறந்த திருப்பாதங்களை உடைய, கருட வாகனராகிய திருமாலின் மருமகனே! அழிவின்றி வாழ்ந்து கொண்டிருக்கின்ற தேவர்களது நாயகனே! பாதாள லோகத்தில் உள்ள, ஆதிசேடன் ஆடவும், அனைத்துலகும் மகாமேரு மலையும் மிகவும் ஆடவும், வேறுபாடில்லாத காளிகாதேவி ஆடவும், அக் காளிகா தேவியோடு அந்நாளில், அனைத்து அண்டங்களும் அதிரும்படி தோள்களை வீசி, காளிகா தேவிக்காக வாது செய்து ஆடும் எருது வாகனரூடராகிய சிவபெருமான் ஆடவும், அவர் அருகில் பூதங்களும் வேதாளங்களும் ஆடவும், இனிமை வாய்ந்த கலைமகளும் தானாடவும், உந்தித் தாமரையிலே உள்ளவனாகிய நான்முகன் ஆடவும், வானுலகத்தில் பொருந்தி உள்ளோர்கள் எல்லோரும் ஆடவும், நிலவு ஆடவும், தாமரை மலரில் வசிக்கும் மாமியாகிய திருமால் ஆடவும், மாமனாராகிய சிறந்த நெடுமால் ஆடவும், எழுகதிரை ஒத்து ஒளிர்கின்ற மாலைகளைப் பூண்டுள்ள மார்பையுடைய திருவண்ணா மலையை ஆண்டு வந்த பிரபுதேவன் என்னும் பெரிய அரசனின் உள்ளமுங் களிப்படையும்படி, மயில் ஆடுவதோடு நீயும் ஆடிக் கொண்டு, வந்து அருள் செய்ய வேண்டும்.

அதலம் - பாதாள லோகம்: கீழுள்ள ஏழலகங்களில் ஒன்று; சேடன் - 'சர்வ பிரளயகாலத்தும் மீந்திருப்பவன்' என்ற பொருளில் வந்தது. நாரணர்க்கு அணையாக அமைந்தபடியால் அழிவில்லாததுவாகி மீந்திருப்பது என்றறிக. பின்னம் - பிரிவு. அபின்னம் - பிரிவின்மை; அகரம் எதிர்மறை, 'வீசி வாதாடும்' என்றதற்குத் தோள்களை வீசி என்றாம்.

*"எண்டோள் வீசிநின் றாடும் பிரானைத்*
*தலையே நீ வணங்காய்"*

என்ற திருவங்கமாலையை நோக்குக.

திருமாலுக்கு மருமகன் ஆதலால், திருமகளை 'வனசமாமியாராட' என்றார். இதனை.

*"வேலவுன தத்தைசெய் மேனியெலா மப்பிட்டால்*
*பாலனத்தை வேண்டிடுமோ பாவைதான் - சாலமலி*
*தாமமணி வீறுபுயத் தண்பழநி மாமுருகா*
*மாமலர்த் தாரருள வா"*

என்ற வெண்பாவாலும் அறிக.

கதையையுடைய வீமன் தன்னை எதிர்த்த சத்துருக்கள் எய்யும் அம்பைக்கொண்டே அவர்களை அழிப்பானாம்; இதனை, 'கதைவிடா ... மா சேனே பொடியாக' என்றார். பிரபுடமா தேவன். அருணகிரியார் காலத்து இருந்த அரசன்; அருணகிரியாரை ஆதரித்தவன்.

"உலகையே ஓரடியால் அளந்த மாயன் மருமகனே! ஆடு மயிலாட நீயாடி வந்தருள வேண்டும்" என்றார். ஆட்டத்தால் பஞ்ச கிருத்தியமும் நடைபெறுதலின், இறைவரும் முருகரும் அபேதம் ஆதலின் இவ்வாறு கூறினார். இதனை,

*"ஐம்முகனே ஆறுமகன் ஆகிவந்து அல்லலுறு*
*மெய்ம்முகத்த தேவரிடர் மேவாது - உய்ம்முகத்தால்*
*காத்தான் கவின்புவியிற் கந்தனவன் கான்மலரே*
*நாத்தான் துதிக்க நயந்து"*

என்ற வாக்கானும் அறியலாம்.

* * *



## யாழ்ப்பாணம்

37. தாத்தா தானந் தத்தன தனதன
தாத்தா தானந் தத்தன தனதன
தாத்தா தானந் தத்தன - தனதான.

பூத்தார் சூடுங் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலும் கடகமும் மதன்விடு
போர்க்கார் நீடும் கட்சர மொடுநமன் விடுதூதும்

போற்றாய் நாளும் கைப்பொருள் உடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு பிரமையது
பூட்டா மாயம் கற்றமை விழியினர் அமுதூறல்

வாய்த்தார் பேதம் செப்புபொய் விரகியர்
நூல்தேய் நூலின் சிற்றிடை இடர்பட
வாட்டாய் வீசுங் கரப்புர மிருகமதம் அகிலார

மாப்பூண் ஆரங் கச்சணி முலையினர்
வேட்பூண் ஆகங் கெட்டெனை உனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ;

ஆத்தாள் மால்தங் கச்சிக னிகையுமை
கூத்தா டாநந் தச்சிவை திரிபுரை
ஆட்பேய் பூதஞ் சுற்றிய பயிரவி புவனேசை

ஆக்கா யாவும் பற்றிள திரிபுர
நோக்கா ஏதுஞ் செற்றவள் திருவிளை
ஆட்டால் ஈசன் பக்கமது உறைபவள் பெறுசேயே!

ஏத்தா நாளுந் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர!
யாப்பா ராயுஞ் சொற்றமி ழருடரு முருகோனே!

ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்பிரபை நெடுமதிள்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய பெருமாளே!

உலகங்களுக் கெல்லாம் தாயாய் இருப்பவளும், திருமாலுக்குத் தங்கையாய் இருப்பவளும், நன்னிகையும், உமாதேவியும், திருநடனத்தைச் செய்கின்ற ஆநந்தத்தையுடைய சிவையும், திரிபுரையும், பேயும் பூதமுஞ் சூழ்ந்து இருக்கப்பெற்ற பைரவியும், புவனேசையும், எல்லாவற்றையும் படைத்து, அவைகளைக் காப்பாற்றி, அசுரர்களுடைய முப்புரத்தை எதனையும் கருதாது அழித்தவளும், அழகிய விளையாட்டினால் இறைவனாரின் இடது பக்கம் தங்குபவளும் ஆகிய உமாதேவியார், பெற்றருளிய புத்திரனே! துறவிகள் நாள்தோறும் தர்ப்பணங்களுடனுஞ் செபங்களுடனும், துதி செய்து, எதார்த்த அறிவைப் பெற்ற பரனுக்குங் குருவாக நின்றருளியவனே! செய்யுள் இலக்கணத்தை ஆராய்ச்சி செய்கின்ற சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற தமிழ் மொழியை அகத்திய முனிவருக்கு அருளிச்செய்த முருகனே! இரவலர்கள் தாம் வந்து கேட்க அவர்களுக்கு விருப்பத்தோடும் மகிழ்வோடும், அவர்களுக்குக் கிடைக்கும்படி, அள்ளி வீசி எறிகின்ற, பொன்னினது ஒளி மிகுந்ததும், நீண்ட மதிளை உடையதுமாகிய, யாழ்ப்பாணாயன் பட்டினத்தை, பொருந்தி அமர்ந்திருக்கின்ற பெருமானே! பூமாலையைச் சூடிய, கொத்துக் கொத்தாக விளங்கும் மலர்களைச் சூடிய கூந்தலை உடையவர்களும், நோக்கினால் வேலாயுதமும், வாளாயுதமும், மன்மதன் விடுகின்ற, சமரைப் புரிகின்ற கருத்த சிறந்த கண்ணாகிய கணையோடு, யமன் விடுகின்ற தூதுவனும், ஒத்திருக்கின்ற தாவி, நாளும் கையிலே பொருளுடையவர்களின், அவர்களிடத்து அவர் கைப்பொருளைப் பறிக்கும் முயற்சி உடையவர்களின், தம்மைப் பற்றிக் கொள்ளும் மயக்கத்தை, பூண்பிக்கும் மாய வித்தைகளைத் தெரிந்து கொண்டிருக்கும் மை

தீட்டப்பெற்ற கண்களுடையவர்களாகி, அமிழ்தத்தை நிகர்த்த இனிய இதழூறலை பெற்றிருப்பவர்களும் வேறுபாடு உண்டாகும்படி பேசும் பொய்யையும் தந்திரத்தையும் உடையவர்களாய் நூற்கப்பட்ட தேய்ந்த நூலை ஒத்த சிறியதாய் இடையானது துன்பப்பட, வாட்டமாகப் பரிமளத்தைச் செய்கின்ற, பச்சைக் கர்ப்பூரமும் கஸ்தூரியும் அகிலும் சந்தனமும் திமிர்ந்த, பெரிய ஆபரணமாகிய முத்துமாலையையும். இரவிக்கையையும் அணிந்த பெண்களுடைய முலைகளின்மேல், மிக்க விருப்பத்தைக் கொண்ட அடியேனை, என்பாவம் நீங்க, முருகக் கடவுளே! உம்முடைய சத்திய வாக்கினால் மெய்ஞ்ஞானத்தை அடைந்து, இனிமேலாயினும் உன்னைத் துதித்து வணங்க, அருள் செய்வாயாக.

கண் நமன் விடு தூது போன்றது எனக் கூறினார். நோக்கால் உயிர் பறிப்பவர் ஆதலின், இதனை,

*"பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்*
*பெண்டகையால் பேரமர்க் கட்டு"*

என்றும்

*"கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்*
*நோக்கமிம் மூன்று முடைத்து"*

என்றும் கூறிய குறள்களோடும் ஒப்பிடுக.

கைப்பொருளுடையவர் மேற்றளார் - 'பொருள் உள்ளவர்களிடத்தே அவர் பொருளைப் பறிக்கும் முயற்சி உடையவர்' என்பது பொருள்.

*"தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்"*

எனவும்,

*"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை*
*வாளாண்மை போலக் கெடும்"*

என்ற குறளாலும் அறியலாம். இனி இதற்குக் 'கைப் பொருளுடையார் மேல் காலை நீட்டும்' எனப் பொருளுரைப்பர்.

காளையாருக்குக் காமத்தை உண்டாக்கும் நோக்கத்தை உடையவர் ஆதலின், 'பிரமையது பூட்டா மாயங் கற்றமை விழி' என்றார். இதனாலன்றோ தொல்காப்பியனாரும்,

*"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்*
*கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாகும்"*

என்றார்.

'பிரமையது' என்றதில் அது: பகுதிப் பொருள் விகுதி. அமுது ஊறல் - 'அமிர்தத்தை ஒத்த ஊறல்' என்பது பொருள். காமத்தால் இறவாதபடி காக்கும் மருந்தாதலின் மரண மின்மையைத் தரும் மருந்து போன்றது என்பர். அமுது - 'காமப்பசி தணித்தலின் அமுது என்றார்' அமுது - உணவு, இதனாலன்றோ,

*"முற்றுலகிற்*
*பாவையர்போற் காமப் பசிதணிக்க மாட்டாதீர்*
*கோவையமு தத்தையேன் கொண்டிருப்பீர்"*

என ஆன்றோர் கூறினர்.

கன்னிகை, 'கனிகை' என நின்றது தொகுத்தல் விகாரம். கன்னிகை - 'இளமை கெடாதவள்' என்பது பொருள். கன்னி - கெடாத 'ஆத்தாள் .. துறைபவள்' என்றவரை இறைவியின் சிறப்பு. இறைவர் செயல் இறைவி செயல் ஆதலின் ஒப்பக் கூறினார்.

"பார்வதி பாலா! அகத்தியர்க்கு உபதேசஞ் செய்த முருகா! யாழ்ப்பாணாயன் பட்டினத்து அமரும் பெருமானே! வேசையர் விழைவு நீங்கி உன் வாக்கால் மெய்யறிவு பெற்று உன்னை வழிபடுமாறு அருள் செய்வாயாக" என்றதாம்.

*"கண்ணால் மருட்டுங் காரிகையார்*
*கடைக்கே நின்ற படுவேனை*
*அண்ணா பழநி மலையானே!*
*ஆறு முகத்துக் கோமானே!*
*எண்ணா விரங்கி மொழிகூறி*
*ஏழை யடியேன் கடைத்தேற*
*பண்ணா ருனது தாண்மலரைப்*
*பரிந்து தந்தே அருள்வாயே!*

என்ற வாக்கானும் அறிக.



## பொது

38. தனனதன தனனதன தானான தானதன
தனனதன தனனதன தானான தானதன
தனனதன தனனதன தானான தானதன – தந்ததான

உறவின்முறை கதறிஅழ வூராரும் ஆசையற
பறைதிமிலை முழவினிசை ஆகாச மீதுமுற
உலகிலுள பலரரிசி வாய்மீதி லேசொரியு
மந்தநாளில்

உனதுமுக கருணைமலர் ஓராறும் ஆறிருகை
திறள்புயமும் எழில்பணிகொள் வார்காதுநீள்
விழியும்
உபயபத மிசைகுலவு சீரேறு நூபுரமும்
அந்தமார்பும்

மறையறைய அமரர்தரு பூமாரி யேசொரிய
மதுஒழுகு தரவில்மணி மீதேமு நூல் ஒளிர
மயிலின்மிசை அழகுபொலி யாளர்மு னாரடியார்
வந்துகூட

மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனை ஆளவிஙன்
வந்திடாயோ!

பிறைஎயிறு முரணசுரர் பேராது பாரில்விழ
அதிரவெழு புவியுலகம் ஈரேழு ஓலமிட
பிடிகளிறின் நடல்நிறைகள் பாழாக வேதிசையி
நின்றநாகம்

பிரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணிநிணமுமுணமவுசெய்து பேயோடுமாடல்செய -
வென்றதீரா!

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருடக்
கரடிபலி திரகடிய வாரான கானின்மிகு
குளிர்கணியின் இளமரம தேயாகி நீடியுயர் -
குன்றுலாவி

கொடியதொரு முயலகனின் மீதாடு வாருடைய
வொருபுறம் துறவளரு மாதாபெ றாவருள் செய்
குமரகுரு பரவமரர் வானாடர் பேணவருள் -
தம்பிரானே!

பிறைபோலும் பற்களை உடைய போரைச் செய்யும் அசுரர்கள் நீங்காமல் நிலத்தில் விழவும் ஏழு உலகங்களும் நடுங்கவும் பதினான்கு உலகமும் கதறவும் பெண்ணும் ஆணும் ஆகிய யானைகளின் போரிலே உள்ள சேனை வகுப்புகள் அழியவும் திக்குகளில் நிலையாயிருக்கின்ற எட்டு யானைகளின் உடம்பு நீங்கவும், உயர்ந்த மலைகள் இடியவும், பெரிய ஆழியில் புழுதி எழுப்பவும், பெரிய வயிற்றைக் கொண்டுள்ள பெருமை பொருந்திய காளிகாதேவி, குட்டைப் பூதங்களோடு பிணத்தையும் கொழுப்பையும் உண்டு, பேயோடு கூத்தாடவும், வெற்றி கொண்ட தீரனே! வேடர்கள் பெற்ற பூங்கொடி போன்ற வள்ளியின் திருவடிகளை வெட்கம் இல்லாமல் போய்த் தடவுதற்கு கரடியும் புலிகளும் திரிகின்ற கடுமையான நீட்சி பொருந்திய காட்டிலே சிறந்த, குளிர்ந்த வேங்கை மரத்தின் இளமை வாய்ந்த மரமாகி, நீண்ட உயர்ந்த குன்றுகள் தோறும் உலாவி, கொடுமை மிகுந்த ஒரு, முயலகன் என்னும் பூதத்தின் மேல் கூத்திடுகின்ற

சிவபெருமானது, ஒரு பக்கத்திலே பொருந்தி வளர்க்கின்ற, தேவியார் பெற்ற அருளைச் செய்கின்ற புத்திரனாகிய குருபரனே! மரணமில்லாதவர்களாகிய தேவ லோகத்தவர், தொழ அருளச் செய்கின்ற தலைவனே! சுற்றத்தார், ஓலமிட்டு அழவும், ஊரிலுள்ளவர்களுடைய ஆசையானது நீங்கவும், பறை சல்லரி தம்பட்டங்களினுடைய பேரொலி வானமட்டுங் கேட்க, உலகத்திலுள்ள பல பேர்கள் அரிசியை வாயிலே சொரிகின்ற அந்த நாளிலே தேவரீரது முகங்களாகிய கிருபையோடு கூடிய செந்தாமரையை ஒத்த முகங்கள், ஒப்பற்றதாகிய ஆறும், பன்னிரண்டு கைகளுடனும், திரண்ட தோள்களுடனும், அழகிய குண்டலத்தைப் பூண்ட நீண்ட திருச்செவிகளுடனும், நீண்ட கண்களுடனும், இரண்டு திருவடிகளிலும், ஒளி செய்கின்ற சிறப்புப் பொருந்திய பாதச் சிலம்புகளுடனும், அழகிய மார்புடனும் வேதங்கள் முழங்க, தேவர்களின் கற்பகத் தருவினின்று தேன் ஒழுகுகின்ற மலர்மழையைப் பொழிய, உதர பந்தனமாகிய ஒளியைக் கொண்ட, மணிமாலை மேல், முப்புரி நூலாகிய பூண் நூல் ஒளிமின்ன மயிலின்மேல், அழகு விளங்குகின்றவராய் முன்னே, அரிய சிவனடியார்கள் வந்து சேர, யமனுடைய படைகள், யமனுலகத்துக்கு ஓடும்படி, சண்டையிட்டு, வெற்றிச் சங்கம் பலவற்றை முறை முறையாக ஊதி, வாதாடி, சிறுவனும் குதலைச் சொல்லை உடையவனும் தாழ்ந்தவனாகிய என்னை இந்த விதமாக, ஆட்கொள்ளுதற்கு வரமாட்டாயோ?

உறவின்முறை கதறியழ - 'சுற்றத்தார் கதறி அழவும்' என்பது பொருள்.

"மேல் விழுந் துற்றார் அழுமுன்னே" என்றார் பட்டினத்தடிகளும்,

'பலராசிசி வாய்மீதி லேசொரியும்' என்றது வாய்க்கரிசி போடுதலை; இது சரமச் சடங்கில் ஒன்று. மறலி - 'கொடுமையை உடையவன்' என்ற பொருளில் வந்தது. பிறை எயிறு - பிறை நிலவை ஒத்த வக்கிரதந்தம், புவியுலக மீரேழும் - 'பூமி முதல் பதினான்கு உலகும்' என்பது பொருள். வாரி - முக்கடல்; நீண்ட தன்மையுடையது என்ற பொருளில் வந்தது. தீரன் - அஞ்சாவலி படைத்தோன்; தாருகா வனத்து இருடிகள் செய்த அபிசார ஓமத்தில் தோன்றிய முயலகன் ஆகிய அரக்கனைச் சிவபெருமான் மிதித்தார் என்பது புராணம். இதனாலன்றோ, "முயன் மிதித்தீர்" என்றார் பிறரும்.

குளிர் கணி - குளிர்ச்சி பொருந்திய வேங்கை மரம். பெறாவருள் - பெறாது பெற்ற: பெறாது என்றது ஈறு கெட்டு நின்றது. கரடி புலி - உம்மைத் தொகை.

"உமாதேவியார் புத்திரனே! என் மரண காலத்து உன் அழகிய திருக்கோலங் காட்டியருள வேண்டும்" என்றது குறிப்பு.

*"ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி யறிவழிந்து*
*மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதென்று*
*வேண்டுவன்யான்*
*செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்*
*கைய்யுந் தொழப்பண்ணி யைந்தெழுந் தோதவுங் கற்பியுமே"*
என்றார் பட்டினத்தார்.

*"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி*
*யறிவழிந்திட் டைம்மே லுந்தி*
*அலமந்த போதாக வஞ்சேலென்*
*றருள் செய்வான்"*
என்ற தேவாரமும் கவனிக்கத் தக்கது.

* * *

## திருப்பழநிமலை

39.தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் தனனத் தனனத் - தனதான

கடலைச் சிறைவைத் துமலர்ப் பொழிலில்
பிரமரத் தையுடல் பொறியிட் டுமடுக்
கமலத் தைமலர்த் திவிடத் தைவிரப் பவனூணாக்

கருதிச் சருவிக் கயலைக் கயமுட்
படுவித் துழையைக் கவனத் தடைசிக்
கணையைக் கடைவித் துவடுத் தனையுப்
பினின்மேவி

அடலைச் செயல்சத் தியையக் கினியில்
புகுவித் துயமப் பிரபுவைத் தகைவித்
தரிகட் கம்விதிர்த் துமுறித் துமதித் தசகோர

மலறப் பணிரத் நவமணிக் குழையைச்
சிலுகிட்டு டுமையிட் டொளிவிட் டுமருட்
டுதலுற் றபொறிச் சியர்கட் கடையிற் படுவேனோ;

சடிலத்து அவனிட் டவிசிட் டகுலத்
தொருசெட் டியிடத் தினுதித் தருள்வித்
தகருத் ரசன்மன் பெயர்செப் பியிடம் பரிவாலே

சனகர்க் குமகஸ்த் யபுலஸ்த் யசனற்
குமரர்க் குமனுக் ரகமெய்ப் பலகைச்
சதுபத் துநவப் புல்வர்க் கும்விபத் தியின்ஞான

படலத் துறுலக் கணலக் யதமிழ்த்
திரயமத் திலகப் பொருள்வருத் தியினைப்
பழுதற்று உணர்வித்து அருளிவித் தகசற் குருநாதா!

பவளக் கொடிசுற் றியபொற்' கமுகின்
தலையிற் குலைமுத் துதிர்செய்க் கழனிப்
பழநிப் பதிவெற் பினிநற் குமரப் பெருமாளே!

திரிகடையையுடைய சிவபெருமான் தந்த சாபத்தால் சிறந்த குலத்தில் ஒரு செட்டியின் வீட்டில் தோன்றியருளிய ஞானத்திற் சிறந்த உருத்திரசன்மர் என்னும் பெயரைச் சொன்னால் பிரியத்தோடும் சனகருக்கும் அகத்தியருக்கும் புலத்தியருக்கும் சனத்குமரர்க்கும் அருளைச் செய்தவரும் சங்கப்பலகையை சங்கப் புலவர் நாற்பத்தொன்பது பேருக்கும், வித்தியாசம் இல்லாத ஞானபடலத்திலே பொருந்திய, இலக்கண இலக்கியம் மிகுந்த, இயல் இசை நாடகம் என்னும் மூவகைப் பாகுபாட்டை உடைய தமிழில் இறையனார் தந்த அகப் பொருளின் விருத்தி உரையை, குற்றம் இல்லாதபடி புலப்படுத்தியருளும், ஞானத்தை உடைய உண்மைக் குருநாதனே! பவளக் கொடியால் சூழப்பட்ட அழகிய பூகமரத்தின் உச்சியின் குலைகளிலே, பல முத்துக்கள் உதிர்கின்ற, வயல்களோடுங்கூடிய பழநி என்னும் திருப்பதியிலுள்ள பழநி மலையின் மேலே வீற்றிருக்கும் நல்ல குமரக்கடவுளாகிய பெருமானே! கடலைச் சிறையில் இட்டு, பூக்கள் நிறைந்த காவினிடத்து, தேன் வண்டுகளை உடலில் முத்திரையிட்டு, மடுவிலேயுள்ள கமலமலரை மலரும்படியாகச் செய்து ஆலகாலவிடத்தைப் பிரம கபாலத்தில் ஐயம் ஏற்றுத் திரியும் சிவபெருமானின் உணவாகும்படி நினைத்து, கயல் மீனை பிறழும்படி செய்து, குளத்தில் புகுமாறு செய்து, கலைமானை விரைந்து ஓடும்படி செய்து, பாணத்தைக் கடைபடும்படி செய்து, மாம்பிஞ்சை உப்பிலே ஊறும்படி செய்து, போர் செய்யும் சத்தி வேலை நெருப்பில் புகும்படியாகச் செய்து, யமனாகிய பிரபுவை

உதைபடும்படி செய்து, வெட்டும் இயல்புடைய வாளாயுதத்தை சிதறுமாறு முறியச் செய்து சிறந்ததாக எண்ணப்படும் சகோரப் பட்சியை அலறும்படி ஆபரணமாகிய இரத்தின மணிகள் பதித்துச் செய்த குண்டலத்தைத் துன்பஞ் செய்து மை தீட்டப்பெற்று ஒளியை வீசி மயக்கஞ் செய்தலையுடைய காமப் பொறிகளையுடைய மாதர்களின் கடைக்கண்ணில் அடியேன் அகப்படுவேனோ?

கடல், வண்டு, தாமரை, நஞ்சு, கயல், உழை, கணை, மாவடு, சத்திவேல், யமன், வாள், சகோரம் ஆகிய இவை கண்ணுக்கு ஒப்பாகக் கூறும் உவமைப் பொருள்கள். அவைகளைத் தோற்கடித்துத் தண்டித்து என்ற நயம்படக் கூறுவார் 'கடலைச்... சகோரம் அலற' என்றார். சிறை வைத்தல் - நிலத்துக்கு ஒரு புறமாக வைத்தல், பொறி - புள்ளி. யமப்பிரவுவைத் துகைவித்து - 'யமனைச் சிவபெருமானால் உதைபடும்படி செய்து' என்பது பொருள். இதனாலன்றோ சிவபெருமானுக்குக் காலகாலன், கூற்றடுதாளன், கூற்றை உதைத்தோன் எனப் பெயர்கள் ஏய்ந்தன.

*"கண்களில் வெண்பீளை கரப்பக் கருமையிட்ட*
*பெண்கள் மயறிப்பிப் பிழைக்குநா ளெந்நாளோ?"*

என்றார் தாயுமானவரும்.

*சிவபெருமான் சாபத்தால் முருகன் செட்டி மனையில்*
*உருத்திரசன்மராக அவதரித்ததாகவும்,*
*இறையனாரகப்பொருள் உரை கேட்டதாகவும் கதை.*
*இதனால், "சடிலத்... பெயர் செப்பிட"*

என்றார்.

மெய்ப்பலகை - உண்மையையே விளக்கும் சங்கப் பலகை. 'முத்து பூகத்துப் பிறக்கும்' என்று கூறுவர். ஆதலின் 'பல முத்துதிர் செய்" என்றார், சதபத்து நவம் - நாற்பத்தொன்பது கடைச் சங்கப் புலவரை.

தமிழ்ப் பரமாசாரியராகிய முருகா! "பெண்களின் கடைக்கண் மயக்கிற்பட்டு அழிவேனை, நீக்கிக் காத்தருள்" என்றதாம். இதனை,

*"பஞ்சாய வடி மடவார் கடைக்கண்ணா லிடர்ப்பட்டு*
*நெஞ்சாய துயர்கூற நிற்பேனுன் னருள்பெற்றே"*

என்னும் மணிவாசகத்தாலும் அறியலாம்.

40. தத்தத்தத் தத்தத் தத்தன
தத்தத்தத் தத்தத் தத்தன
தத்தத்தத் தத்தத் தத்தன - தனதானே

முத்துக்குச் சிட்டுக் குப்பிமு
டித்துச்சுக் கைப்பிற் சுற்றியும்
முற்பக்கத் திற்பொறி புற்றிட நுதன்மீதே

முக்யப்பச் சைப்பொட்டு இட்டணி
ரத்நச்சுட் டிப்பொற் புற்றிட
முச்சட்டைச் சித்ரக் கட்டழகு எழிலாடத்

தித்திக்கச் சொற்சொற் றுப்பிதழ்
நச்சுக்கட் கற்புச் சொக்கியர்
செப்புக்கொக் கக்கச் சுப்பெறு தனமேரு

திட்டத்தைப் பற்றிப் பற்பல
லச்சைக்குட் பட்டுத் தொட்டுயிர்
சிக்கிச்சொக் கிக்கெட் டிப்படி உழல்வேனோ;

மெத்தத்துக் கத்தைத் தித்தியின்
இனிச்சித்தத் திற்பத் தத்தொடு
மெச்சிச் சொர்க்கத்திற் சிற்பரம் அருள்வாயே

வித்தைக்குக் காத்திரு தற்பரம்
முக்கண்சித் தர்க்குப் புத்திர!
விச்சித்ரச் செச்சைக் கத்திகை புனைவோனே!

நித்யக்கற் பத்திற் சித்தர்கள்
எட்டுத்திக் குக்குட் பட்டவர்
நிட்டைக்கற் புற்றப் பத்தர்கள் அமரோரும்

நெட்டுக்குப் புட்பத் தைக்கொடு
முற்றத்துற்று அர்ச்சிக் கப்பழ
நிக்குப்பட் டத்துக் குற்றுறை பெருமாளே!

சகலவித கலைஞானங்கட்கும் முதல்வனும், தனக்குத் தானே தலைவனாகி வேறொரு தலைவனில்லாத முக்கண்களை உடைய சித்தராகிய சிவபெருமானுக்குப் புத்திரனே! மிக அழகிய வெட்சிமலர் மாலையை அணிந்து கொள்பவனே! நித்திய கற்பத்திலுள்ள சித்து ஆண்டகைகளும், எட்டுத் திக்கிலும் வசிப்பவர்களும் ஆகிய, தவ நிட்டானுபூதியைப் பெற்றுள்ள பக்தர்களும், தேவர்களும் நீள பூக்களைக்கொண்டு கோயில் முற்றத்துச் சென்று பூசைசெய்ய பழநி மலைக்குள் பட்டத்துக்குப் பொருந்தி வசிக்கின்ற பெருமானே! முத்துக் குச்சாகிய ஆபரணத்தை அணிந்தும், குப்பி முடித்தும், மாலையை பின்னாலே சூழும்படி அணிந்தும், முற்பக்கத்திலே அழகு பொருந்தும்படி நெற்றியின்மேலே, முக்கியமாகிய மரகத திலகம் அணிந்தும், அலங்காரமான இரத்னம் பதித்த சுட்டி என்னும் ஆபரணமும் அழகோடு விளங்க, ஒழுங்கோடுங்கூடிய சித்ர வேலைகள் செய்துள்ள உடையில் அழகும் விளக்கமும் தோன்ற, மதுரமாக இருக்கும்படி, சொல்லுகின்ற சொற்களையும், பவளம்

போன்ற அதரத்தையும் நஞ்சு பொருந்திய விழிகளையும் உடைய, கற்பனைகளைக் கற்று ஆடவர்களை மயக்குகின்றவர்களாகிய பெண்களின், கலசத்துக்கு ஒப்பென்று சொல்லும்படி வட்டமாகத் திரண்டு உருண்ட, இரவிக்கையை அணிந்த முலையாகிய மேரு மலைகளின் மேட்டிடத்தைத் தொட்டுப் பிடித்து, பற்பல விதமான நாணம் தரும் செயல்களுக்கும் வசமாகி, உயிர் சிக்குண்டு மயக்கங்கொண்டு, அறிவு கெட்டு இந்த விதமாக நான் வருந்தலாமோ? மிகுந்த துயரத்தை அழித்து, இனிமேல் மனத்தில் முயற்சியுடன் பாராட்டிச் சொர்க்க லோகத்தில் ஞானத்தின் மேம்பாட்டை அடியேனாகிய எனக்குத் தந்தருள்வாயாக.

குச்சு - குஞ்சம்போல் முத்தினார் செய்தது. துப்பிதழ் - பவளம் போன்ற இதழ்; இது உவமம். முக்கட் சித்திர - திரிநேத்திரமுடைய சித்தராகிய சிவபெருமான். எல்லாம் வல்ல சித்தராகி மதுரையில் விளையாட்டுச் செய்தாராதலின், 'சித்தர்' என்றார். இதனை,

*"முன்னனை கூப்பிட வோடி வந்தானை முளரிமலரப்*
*பொன்னானை யேறி யிருப்பானைப் பூமியின்*
*கைக்கரும்பைத்*
*தின்னானை யென்று கல்லானைக் கிட்டானைத் திருமதுரை*
*மன்னானை வீதியி லேறிவந் தானை வணங்குதுமே"*

என்ற பாட்டாலும் அறியலாம்.

"பழநிப் பெருமானே! மாதர் மயக்கிற்பட்டு அழியாதபடி ஞானந் தந்தருள்" என்று வேண்டுகின்றார்.

**41. தனதன தனதன தனதன தனதன**
**தனதன தனதன - தனதான**

கடலைபொ ரியவரை பலகனி கழைநுகர்
கடினகு டவுதர விபரீத

கரடத டமுமத நளினசி றுநயன
கரிணிமு கவரது துணைவோனே!

வடவரை யின்முகடு வதிரவொருநொடியில்
வலம்வரு மரகத மயில்வீரா!

மகுபதி தருகதை குறமினொ டிருவரு
மருவுச ரசவித மணவாளா!

அடலசு ரர்கள்குல முழுதும டியவுயர்
அமரர்சி றையைவிட எழின்மீறு

மருணகி ரணவொளி யொளிரும் மயிலைவிடு
மரகர சரவண பவலோலா!

படலவு டுபதியை இதழியண் இசடில
பசுபதி வரநதி அழகான

பழநிம லையருள்செய் மழலைமொ ழிமதலை
பழநிம லையில்வரு பெருமாளே!

கடலையையும் பொரியையும் அவரையையும், பல வகையான பழங்களையும், கரும்பையும், உண்கின்ற பலமான குடம் போன்ற வயிற்றையுடைய விபரீதமான கரடத்தையும் மிகுந்து பெருகும் மூன்று மதங்களையும், தாமரை மலரை நிகர்த்த சிறிய கண்களையும் உடைய யானை முகத்தை உடைய விநாயகக் கடவுளினது சகோதரனே! வடக்கேயுள்ள மகாமேரு மலையின், கொடுமுடி நடுங்கும்படி, ஒரு நொடிப்பொழுதில் உலகத்தைச் சுற்றி வந்த மரகத நிறத்தையுடைய மயிலையுடைய வீரனே! இந்திரன் பெற்ற புத்திரியாகிய தெய்வயானையாரை,

குறவர் மகளாகிய வள்ளிநாயகியாரோடு இரண்டு பேரையும் சேர்கின்ற கூடல்வகை புரியும் நாயகனே! பலம் மிகுந்த அசுரர்களுடைய கூட்டம் முழுவதும் அழியவும் உயர்ந்த தேவர்களின் சிறையை நீக்கவும், அழகு மிகுந்த, சூரியனின் கிரணங்களைப் போல ஒளிரும் வேலாயுதத்தை விடுகின்ற, சரவணப் பொய்கையில் உற்பவித்து அடியார் வினையை அரிக்கும் ஆசையை மிகவும் உடையவரே! கூட்டமான விண்மீன்களுக்கெல்லாம் தலைவனாக நிலவினையும் கொன்றை மாலையையும் அணிந்த சடாபாரத்தை உடைய சிவபெருமானும், கங்கா நதியும் அழகு மிகுந்த பழமையான உமாதேவியாரும் பெற்றருளிய மழலைச் சொற்களைப் பேசுங் குழந்தையே! பழநி மலையில் எழுந்தருளி இருக்கும் பெருமானே.

'கனி' இளக்க முடையது என்ற காரணம் பற்றி வந்த பெயர். கரிணி - பெண்யானை; ஈண்டுப் பொதுவாக யானையைக் குறித்தது. மரகத மயில் - பச்சை நிறம் பொருந்திய மயில். படலம் - கூட்டம். பழம் பொருளாகிய ஆதிக்குச் சத்தியாக அவன் என்றோ அன்றே இவளும் உள்ளவளாதலின் உமையை 'பழம் நிமலை' என்றார். 'களங்கமற்ற ஞானத்தை உடையவள்' என்ற பொருளில் 'நிமலை' எனுஞ் சொல் வந்தது. நிமலம் - அகத் தூய்மை அமலம் - புறத் தூய்மை; தந்தைக்குப் பின் குடியைத் தூண்போல் நின்று காப்பவன் ஆதலின் புத்திரனுக்கு 'மதலை' எனும் பெயர் வந்தது. பசுபதி - 'ஆன்மாக்களுக்கு எல்லாம் இறைவனாக இருப்பவன்' என்பது பொருள்.

இந்தப் பாட்டு முருகர் பெருமை கூறி அழைத்த தலம்.

**42. தனனத் தனதன தனதன தந்தத்**
**தனனத் தனதன தனதன தந்தத்**
**தனனத் தனதன தனதன தந்தத் - தனதான**

புடவிக்கு கணிதுகில் எனவளர் அந்தக்
கடலெட் டையுமற குடிமுநி யெண்கட்
புனிதச் சததள நிலைகொள் சயம்புச் சதுர்வேதன்

புரமட் டெரியெழ விழிகனல் சிந்திக்
கடினத் தொடுசில சிறுநகை கொண்டுஅற்
புதகர்த் தரகர பரமசிவன் இந்தத் தனிமூவர்

இடசித் தமுநிறை தெளிவுற வும்பொன்
செவியுள் பிரணவ ரகசியம் அன்புற்
றிடவுற் பனமொழி உரைசெய்கு ழந்தைக்குருநாதா!

எதிருற்று அசுரர்கள் படைகொடு சண்டைக்கு
இடம்வைத் திடஅவர் குலமுழு தும்பட்
டிடவுக் கிரமொடு வெகுளிகள் பொங்கக்கிரியாவும்

பொடிபட்டு உதிரவும் விரிவுறு மண்டச்
சுவர்விட்டு அதிரவு முகடுகி ழிந்தப்
புறமப் பரவெளி கிடுகிடெ னுஞ்சத் தமுமாக

பொருதுக் கையிலுள வயினிண முண்கக்
குருதிப் புனல் எழு கடலினும் மிஞ்சப்
புரவிக் கனமயில் நடவிடும் விந்தைக் குமரேசா!

படியிற் பெருமித தகவுயர் செம்பொற்
கிரியைத் தனிவலம் வரவர னந்தப்
பலனைக் கரிமுகன் வசமரு ளும்பொற் பதனாலே

பரன்வெட் கிடஉள மிகவும்வெ குண்டக்
கனியைத் தரவிலை எனவருள் செந்தில்
பழநிச் சிவகிரி தனிலுரை கந்தப் பெருமாளே!



பேருலகுக்கு அணியும் படியான ஆடையென்று சொல்லுமாறு, வளர்கின்ற, எட்டுத் திக்குகளிலும் உள்ள அந்தக் கடல் ஏழையும் தண்ணீர் வற்றுமாறு குடித்த அகத்திய முனிவரும் எட்டுக் கண்களை உடைய துய்யதான நூறு இதழ்களை உடைய தாமரை மலரிலே வசிக்கும், தானே தோன்றிய வேதங்கள் நான்கிற்கும் தலைவனாகிய நான்முகனும் கண்களிலே நெருப்பைச் சிந்தி. கடினத்துடனே, நெருப்பு உண்டாகும்படி மிகவுஞ் சிறிய புன்னகை புரிந்து. திரிபுரத்தையும் நீறாக்கி அழித்த, அதிசயிக்கும்படியான தொழிலை உடைய தலைவரும். பிரணவப் பொருளாக இருக்கும் மேலான சிவபெருமானும் ஆகிய இந்த ஒப்பற்ற மூவர்களுடைய மனங்களும் நிறைந்த தெளிவை அடையும்படி. அழகிய காதில். பிரணவத்தினுடைய உண்மையை அன்பு பொருந்த திருவாய்மொழியால் உரைத்தருளும் குழந்தை வடிவத்தோடு கூடிய பரமாசாரியனே! எதிர்த்து வந்த அசுரர்கள் தம்முடைய படைகளைக் கொண்டு. சண்டைக்கு வழி செய்ய, அவர் கூட்டமெல்லாம் அழியவும், கொடுமையோடு கோபம் அதிகரிக்கவும் மலைகள் எல்லாம் துகளாகிச் சிந்தவும், பரந்த அண்டத்தின் சுவர் பிளவுகொண்டு அதிர்ச்சியை அடையவும், மலை முடிகள் தகர்ந்து வானுக்கு அப்பக்கத்து அந்த மேலான வெளி கிடுகிடு எனும் ஒலியுடையதாகவும் போர் செய்து திருக்கரத்தே தரித்துள்ள, வேலாயுதம், கொழுப்பை உண்ணவும், செந்நீர் ஏழு கடல்களைக் காட்டிலும் அதிகமாகப் பெருக குதிரையாகிய சிறந்த மயிலை நடாத்தும் வேடிக்கை மிகுந்த குமரக்கடவுளே! உலகத்தில் மேன்மையை உடைய தக்க உயர்ந்த செவ்விய பொன் மலையை, விரைவாகச் சுற்றிவர, சிவபெருமான் அந்தப் பழத்தை விநாயகக் கடவுளிடத்தே கொடுத்த, தன்மையினாலே, சிவபெருமான் நாணமடையுமாறு, அதிகமாகச் சினந்து அந்தப் பழத்தைத் தனக்குத் தரவில்லையே என்று,

அருள்மிகுந்த செந்தூரிலும் பழநியில் உள்ள சிவகிரியிலும், எழுந்தருளியிருக்கும் கந்தப் பெருமானே!

நிலம் பெண்ணாகவும் கடல் அவளுக்கு ஆடையாகவுங் கூறுவது மரபு. "கடலாடைப் புவிமகள்" என்றது காண்க. எட்டுத் திக்குகளையும் சூழ்ந்துள்ள ஏழு கடல் என்பர். 'புடவிக்கினி ..... கடலெட்டையும்' என்றார். எண் கண்ணன் - பிரமனுக்கு நான்கு தலையுண்டாதலின் எட்டுக் கண் ஆயின.

திரிபுரத்தார் புரமூன்றையும் சிவபெருமான் சிரித்து எரித்தார் என்பது கதை.

*"நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை*
*யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடி*
*யன்றாலின் கீழிருந்தக் கறமுரைத்தா னாயிடினும்*
*கொன்றன்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ"*

என்ற திருச்சாழலாலும் அறியலாம்.

குலம் - கூட்டம். சிவபெருமானைக் காணவந்த நாரதர் ஒரு மாதுளங்கனியைத் தந்தார். பக்கத்து இருந்த விநாயகரும் முருகரும் "எனக்கு, எனக்கு" எனக் கையை நீட்டினர். "அனைத்து லகங்களையும் சுற்றி முன்னால் வருவோனுக்குத் தருவேன்" என்றார். முருகர் மயிலின் மீதேறி உலகு முதலிய அண்டங்களை வலம் வரப் புறப்பட்டார். விநாயகரோ தாயையும் தந்தையையும் வலம் வந்து வணங்கி நின்றார். அனைத்து லகங்களும் தேவரீரும் தாயும் ஆதலின் உங்களை வலம் வந்தது அனைத்துக் கண்டங்களையும் வலம் வந்ததாகும்." என்று கூறி கனியைப் பெற்றார். முருகர் அனைத்துலகங்களையும் வலம் வந்து பார்க்கக் கனி அண்ணன் கையிலிருக்கச் சினங்கொண்டு பழநி மலையில் ஆண்டியாக அடைந்தார் என்பது புராணம்.




*"அக்கனித ரச்சொலிமு னைப்பனைவ லம்வருங்*
*கைக்கயமு கக்கடவுள் காப்பு"*

என்றதால் விநாயகர் தகப்பனாரை வலம் வந்து கனி பெற்றார் என்பது பெற்றாம்.

இந்தப் பாட்டு பெருமை காட்டி விளித்ததாம். வந்தருள் என்றது தொக்கு நின்றது.

43. தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன - தனதான

மலரளி கொண்டைச் சொருக்கி லேயவள்
சொலுமொழி இன்பச் செருக்கி லேகொடு
மையும்அடர் நெஞ்சத் திருக்கி லேமுக மதியாலே

மருவுநி தம்பத் தடத்தி லேநிறை
பரிமள கொங்கைக் குடத்தி லேமிக
வலியவும் வந்தொத் திடத்தி லேவிழ வலையாலே

நிலவெறி அங்கக் குலுக்கி லேயெழில்
வளைபுனை செங்கைக் குலுக்கி லேகன
நிதிபறி அந்தப் பிலுக்கி லேசெயும் ஒயிலாலே

நிதமிய லுந்துர்க் குணத்தி லேபர
வசமுடன் அன்புற் றிணங்கி லேயொரு
நிமிடமி ணங்கிக் கணத்திலே வெகு மதிகேடாய்

அலையநி னைந்துற் மனத்தி லேஅனு
தினமுகும் என்சொப் பனத்தி லேவர
வறிவும ழிந்தற் பனத்தி லேநிதம் உலைவேனோ;

அசடனை வஞ்சச் சமர்த்த னாகிய
கசடனை யுன்சிற் கடைக்க ணாடியும்
மலர்கொடு நின்பொற் பாதத்தை யேதொழ
வருடராய்;

பலபல பைம்பொற் பதக்க மாரமும்
அடிமைசொ லுஞ்சொல் தமிழ்ப்ப னீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையும் அணிவோனே!



ஸ்ரீ கார்த்திகேயர்

**பதியினில் மங்கைக் கதிக்க மாமலை**
**யொடுசில குன்றில் தரித்து வாழ்வுயர்**
**பழநியில் அன்புற் றிருக்கும் வானவர் பெருமானே!**

பலபல வகையினதாகிய பசிய பொன்னாற் செய்த பதக்கங்களையும், முத்து மாலையையும் தங்கள் அடிமைத் தன்மையைக் கூறும் புலவர்களின் பாமாலையையும், பன்னீருடன் வாசனை அதிகரிக்கும்படி கடப்பமலர் மாலையையும் அணிந்து கொண்டிருப்பவனே! தலங்களிலும், வள்ளி மலையோடு, சில மலைகளில் தங்கி செல்வம் மிகுந்த பழநித் தலத்தில், விருப்பங்கொண்டு மேவி வீற்றிருக்கும், தேவர்களுக்குப் பெருமானே! மலர் அணிந்த வண்டுகள் மொய்க்கும் கொண்டையினது சொருக்கிலும், அவள் சொல்லுகின்ற சொல்லினுடைய, இன்ப மிகுதியிலும், கொடுமை மிகுந்த மனத்தின் மாறுபாட்டிலும் சந்திரனை நிகர்த்த முகத்தாலும், சேருகின்ற குறி இடத்திலும், வாசனை நிறைந்த தனங்களாகிய குடத்திலும் மிகவும் வலிய வந்து உடம்பைப் பொருந்தும் இடத்தாலும், கண்களாகிய வலையினாலும் ஒளி வீசும் தேகக் குலுக்காலும் அழகிய வளையல்கள் தரித்த, செவந்த கை யசைவு ஒலியாலும், பெருந் திரவியத்தை அபகரிக்கும் அந்த பிலுக்காலும் செய்யும் ஒயிலினாலும் தினந் தினம் பழகுகின்ற கெட்ட குணத்தாலும் பரவசத்துடன் அன்பு பொருந்தும் கலவியினாலும் ஒரு நிமிடங் கூடி க்ஷண நேரத்தில் மிக்க அறிவு கெட்டு அலைய எண்ணி தோற்றத்தில் தினந்தோறும் மிக்க எனது கனவில்வர அறிவுங் கெட்டு கீழ்மையுடையேனாகிய நான் அந்தக் கலவியில் எப்பொழுதும் உலைந்து கொண்டிருப்பேனோ, குற்றமுடையவனை வஞ்சகச் செயலில் கெட்டிக்காரன் ஆகிய கீழ்மகனை தேவரீரது அறிவும் மிகுந்துள்ள கடைக்கண்ணினால் நோக்கி, பூக்களைக் கொண்டு நினது அழகு பொருந்திய திருவடிகளையே வணங்குமாறு கருணையைத் தருவாயாக.



ஸ்ரீ சோமாஸ்கந்தர்

பல துர்க்குணங்களோடு கொடுமையும் நிறைந்துளது என்பது தோன்ற 'கொடுமையும் அடர் நெஞ்சம்' என்றார்.

திருக்கு - மாறுபாடான செய்கை. குலுக்கிலே - வளையல் அணிந்த கைவீச்சினால் உண்டாகும் ஓசை. பிலுக்கு - பகட்டு நடக்கை. ஒயில் - 'உல்லாச நடை' 'ஒழுங்கான நடை' எனவுங் கூறுவர்.

"பழநிமலைப் பதியானே! முருகா! மாதர் மயக்கில் பட்டுக் கெட்டு அலைவேனை அதினின்றும் விலக்கி உன் பொன்னடியையே மலர்கொண்டு அர்ச்சித்துப் பூசிக்க அருள் செய்வாயாக" என வேண்டுகின்றார்.

* * *



சங்கர் பதிப்பகம்

21, ஆசிரியர் சங்கக் குடியிருப்பு,
இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம்,
சென்னை - 600 049.
தொலைபேசி எண் 6502086